# நமது சரித்திர பாரம்பர்யம்



இ 66

இமயப் பதிப்பகம்

டி.என்.ராமச்சந்திரன்

# நமது சரித்திர பாரம்பர்யம்

(பெருந்தலைவர் திரு காமராஜ் அவர்களின் முன்னுரையுடன்)

□ டி. என். ராமச்சந்திரன் □

**இமயப் பதிப்பகம்**

8, நீலா தெற்கு வீதி,

நாகப்பட்டினம் - 611 001

## சமர்ப்பணம்

□ □ □

மகாத்மா காந்தியின் சமூக ஒற்றுமையில்
அக்கரைகொண்ட அனைவருக்கும்

---

**விலை : ரூ. 25-00**

□ முதற்பதிப்பு : ஏப்ரல் 1950
□ இரண்டாம் பதிப்பு : நவம்பர் 1995
□ உரிமை : பதிப்பாளருக்கு
□ பதிப்பாளர் : புத்தகப்பித்தன்
□ அச்சிட்டோர் : ஸ்ரீராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ், 12, கஜபதி தெரு, சென்னை-5

□ □ □

**என்னை எழுத்துத் துறையிலும் பதிப்புத் துறையிலும் ஆளாக்கிய என் அன்புச் சகோதரர் திரு. டி. என். ராமச்சந்திரன் அவர்களுக்கு என் இதய அஞ்சலி.**

தோற்றம் : *8—2—1910*

மறைவு : *7—5—1994*

**டி. என். வீரராகவன்**
(—புத்தகப்பித்தன்)

□ □ □

* 45 ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த நூல் மீண்டும் வெளிவருகிறது. அப்போது பத்திரிகைகளால் மிகவும் பாராட்டி எழுதப்பட்டது. வாசகர்களால் வரவேற்கப்பட்டது. இன்றைய கல்லூரி மாணவர்கள் அவசியம் படிக்க வேண்டுமென்ற நோக்கில் இதனை வெளியிடுகிறேன்.

உங்கள்

—**புத்தகப்பித்தன்**

## பொருளடக்கம்


முன்னுரை.

பதிப்புரை.

1. ஒன்றுபட்ட சமுதாயம். 9

2. தென்னாட்டு வரலாறு. 30

3. இந்தியாவில் இஸ்லாம். 55

4. இந்து-முஸ்லீம் கலாச்சாரம். 91

# முன்னுரை

இந்தியாவில் கலாச்சார வளர்ச்சியையும் பண்பாட்டையும் விளக்கி நண்பர் ஸ்ரீ ராமச்சந்திரன் இப்புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார். மன்னர்களையும் அவர்களிடையே நடைபெற்ற போராட்டங்களையும் வருஷக்கிரமத்தில் தருவதே இந்திய சரித்திரம் என்று இதுவரை கருதப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் மக்களின் நாகரிகத்தையும் அவ்வப்பொழுது வெளிநாட்டுத் தொடர்பால் (அல்லது தலையீட்டால்) அந் நாகரிகம் அடையும் வளர்ச்சியையும் விவரிப்பதுதான் உண்மையான சரித்திரமாகும்.

மக்கள் மனம் பண்படவும், எல்லா நாட்டு மக்களும் ஒன்றெனும் சிறந்த மனப்பான்மை வளரவும் **'நமது சரித்திர பாரம்பர்யம்'** போன்ற புததகங்கள் பெரிதும் உதவும். இனிய நடையில் கருத்து நிறைய இப்புததகத்தை எழுதியுள்ள ஸ்ரீ ராமச்சந்திரனைப் பாராட்டுகிறேன். தமிழ் மக்கள் இந்நூலை பெரிதும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி
சென்னை

**காமராஜ்.**

*11—3—50*

# முதற் பதிப்பின் பதிப்புரை

நமது சரித்திர பாரம்பர்யம் என்ற நூலை பதிப்பிக்கும்போது என்னுடைய நினைவுகள் எங்கெங்கோ ஓடின.

ஆதி மனிதன் மிருகங்களுடன் வாழ்ந்தது—படிப்படியாக நெருப்பின் உபயோகத்தைக் கண்டுபிடித்தது—விவசாயத்தில் ஈடுபட்டது-பட்டணத்தில் குடியேறி வேலைகளைப் பகிர்ந்து கொண்டது. ஆகியவற்றிலிருந்து மனிதன் வளர்ந்த விதத்தைப் பார்த்தேன்.

அத்துடன் அவன் ஓய்ந்துவிடாமல் கண்ணிற்பட்டதை எல்லாம் காரணம் கொண்டு ஆராய ஆரம்பித்தான். அத்தனையும் விந்தைக் கதைகளாக விரிந்தன. ஒவ்வொன்றும் புதுமையாகவும் வியப்பாகவும் காட்சியளித்தன. உலகத்தையே ஒரு புது நோக்கில் பார்த்து ஆயிரம் கேள்விகளைக் கேட்டான். அந்தக் கேள்வியின் விடிவாக மனிதனுக்கு சிந்தனை பிறந்தது. இதை இன்னது செய்தால் இப்படி விளையும் என்பதை அறிந்தான். அன்றிலிருந்து அவன் மனத்தின் மன்னனாகி மனிதன் ஆனான். அவனுடைய இதயத்தில் மெல்ல மெல்ல கலை உணர்வு மலர ஆரம்பித்தது. அழகுள்ள எதையும் சிருஷ்டிக்க வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது. விரல் நுனி கொண்டு மண்ணிலே வேடிக்கையாக கீறியவன் விதவிதமான அழகு சிருஷ்டிகளை கல்லிலே உருவாக்க ஆரம்பித்தான். காலத்தால் அழியாமல் நாகரிகத்தின் சாட்சியாக வானளாவிய கோபுரம் வளர்த்து கோயில் கட்டினான் அழகான குளங்கள் வெட்டி நாற்புரமும் படித்துறைகள் அமைத்தான். குழந்தைகள் படிக்க பள்ளிக்கூடங்கள் அமைத்தான். கிராமங்களில் நீதியும், நல்லாட்சியும் நிலவ, ஊர் பஞ்சாயத்துகள் கிராமசபைகள் முதலியன ஏற்படுத்தினான்.

ஆடல் பாடல்களில் சிறந்த நடனமாதரும், வாளும் வேலும் கொண்டு போர் செய்யும் வீரர்களும் நாட்டில் மலிந்திருந்தனர்.

5000 ஆண்டுகளுக்குமுன் சிந்துநதி பள்ளத்தாக்கிலும், ஹரப்பாவிலும் காணும் காட்சி மனிதனை அதிசயிக்கச் செய்கிறது, எகிப்திய–மெசபெடோமியா நாகரிகங்களைவிட அங்கு சிறந்த நாகரிகம் விளங்கியதாக சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

பண்டைக் காலத்திலேயே நம்நாடு கணித சாஸ்திரத்தில் மேன்மையடைந்திருந்தது, முதலில் இந்தியாவே தசாம்ச பின்ன முறையைக் கண்டதாகச் சொல்லப்படுகிறது, பீஜ கணிதமும் (அல்ஜீப்ரா) இந்தியாவிலிருந்தே அரேபியாவுக்கும் அங்கிருந்து ஐரோப்பாவுக்கும் சென்றதாக சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

கடல் மார்க்கமாக காற்றின் உதவிகொண்டு நம் நாட்டு முத்துக்கள் கப்பலில் எகிப்துக்குச் சென்றன. அங்கிருந்து கடல் வழியாகவும், தரை வழியாகவும் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டன.

சோழர்கள் நாட்டியம், சிற்பம் முதலிய கலைகளில் காட்டிய ஆர்வத்தைப்போலவே மற்றவற்றிலும் சிறந்து விளங்கினர். அவர்களுடைய கடற்படைகள் அரபிக்கடலிலும் வங்காளக்குடாக்கடலிலும் சென்றுலாவின. பர்மா மீதும், வங்காளத்தின்மீதும் படையெடுத்துச் சென்று அவைகளை வென்றார்கள்.

புத்தர் காலத்தில் வாழ்ந்த விஜயன் கடல் கடந்து இலங்கை சென்று வெற்றி கொண்டு இலங்கைக்கு

'சிங்களத்தீவு' எனப் பெயரிட்டான். அவன் யானைகளையும், குதிரைகளையும் கப்பல்களில் ஏற்றிக் கொண்டு இலங்கைக்குச் சென்ற சித்திரம் ஒன்று அஜந்தா குகைகளில் இருக்கிறது அந்த நாளில் இந்தியா உலகின் மற்ற பாகங்ளைவிட உற்பத்தி முறைகளில் சிறந்து விளங்கியது. பஞ்சாடையும் பட்டாடையும் வெளி நாட்டார் விரும்பி ஏற்றுக்கொண்டனர்.

மார்க்கோபோலோ என்ற வெனிஸ் யாத்ரீகன் சிலந்தி வலைபோல் பின்னப்பட்ட மெல்லிய மஸ்லின் ஆடையைக் கண்டு ஆச்சரியமுற்று அதைப் போற்றிப் புகழ்ந்தான்.

இப்படி பல விதத்தில் வியப்புறக்கூடிய சரித்திரச் சான்றுகளுடன் நாம் நின்றுவிடாமல் நம் நாட்டிற்கு பலர் வந்த விதத்தையும், அவர்கள் வந்த நோக்கத்தையும் அதனால் நமது கலை-நாகரிகம்-பண்பாடு-முன்னேற்றம் முதலியன எப்படி ஒன்றுபட்டு வளர்ந்தன என்பதையும், 'நமது சரித்திர பாரம்பர்யம்' என்ற இந்நூலில் ஆசிரியர் ஸ்ரீ டி. என். ராமச்சந்திரன் அவர்கள் நன்றாக விளக்கியிருக்கிறார்.

எங்களுடைய வேண்டுகோளுக்கு அன்புகொண்டு பல அலுவலிடை எமக்கு முன்னுரை தந்துதவிய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ காமராஜ் அவர்களுக்கு எங்கள் அன்பு நிறைந்த நன்றி.

நாகப்பட்டினம்.
15—3—50.

**தோ. ந. வீரராகவன்,**
இமயப் பதிப்பகம்.

# 1. ஒன்றுபட்ட சமுதாயம்

நம் எழில்மிக்க புண்ணிய பூமியிலே ஆரிய, பாரசீக, கிரேக்க, சாக பார்த்திய, குஷாண முதலிய எண்ணிறந்த தேசீய இனத்தோர்கள் வந்து வந்து குடியேறினர். வந்தவர் யாவரும் தங்களை வாகை மாலை சூடிய வெற்றி வீரர்களாகக் கருதினர். ஆனால், நாளடைவில் இந்நாட்டு மக்களுடன் அவர்கள் அனைவரும் ஒன்றாய்க் கலந்து முடிவில் தோல்வியையே கண்டனர்

இந்தியா, புதிய புதிய தேசீய இனத்தவர்களின் படையெடுப்புக்களான ஒவ்வொரு சமயத்திலும், புதிய வலிமையோடு, புதுக்கருத்துக்களை புது வாழ்வாக்கிக் கொண்டது. இந்தியா என்று சொன்ன மாத்திரத்தில், அது மொழி, கலை, கலாச்சாரம்; அன்றி சமுதாயம் அல்லது அரசியல்; அல்லது கருத்து, எண்ணம் போன்றவைகளைப் பொருத்ததாக வேண்டுமானாலுமிருக்கட்டும். அத்தனையிலும் நாம் பலத் திறப்பட்டதும் பிணைக்கப்பட்டதுமான கூட்டுமுறையையே காணக்கூடும். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நிலைத்துள்ள நம் இந்திய கலாச்சாரத்தை கவனித்துப் பார்த்தால், பெரும்பாலும் ஒற்றுமை மனோபாவமும், ஐக்கிய உணர்ச்சியும் தலைதூக்கி நிற்பதைக் காணலாம்.

நீண்ட நெடுங்கால தொடர்பும், சக்தியும், வன்மையும் கொண்ட சிறந்ததொரு நாகரிகம் படைத்த தேசம், சீனத்தைத் தவிர இந்தியாவிற்கு வேறு உவமை கூற முடியாது. இத்தேசத்தினுடைய நிலப்பரப்பு, இத்தேசத்தில் குடியேறியுள்ள மக்கள், இத்தேச மக்களிடையேயுள்ள மன எழுச்சிகள், இத்தேசத்தினுடைய நீண்டகால சரித்திரம், இத்தனையையும் நினைத்துப் பார்த்து இத்தேசத்தின் கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும் நாம் மதிப்பிட வேண்டும். அது மட்டுமல்ல. இத்தேசம் பல்லாயிர வருடங்களாக பல பேர்களுடைய அவதிக்கும், சொல்லொணாத கஷ்டங்களுக்கும், ஆளாகி இருப்பினும், இன்றுவரை தன்னுடைய சிறந்ததொரு கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும் நிலை நிறுத்தியிருப்பதே ஆச்சரியப்படக்கூடிய விஷயம்.

இதுமட்டுமன்று, இன்றைய நம் நாகரிகம் கலாச்சாரமாகியவை, வருங்கால உலகிற்கே வழிக்காட்டக்கூடிய அவ்வளவு வலிமையும் வனப்பும் வளப்பமும் கொண்டு விளங்குகிறதென்பது தெளிவு.

இவ்வளவுக்கும் காரணம் இத்தேசத்திற்கு வந்து புகுந்த பலதிறப்பட்ட பல்வேறு சக்திகளையும், குறிப்பாக ஆரம்ப காலத்தை எடுத்துக் கொண்டால், கிரேக்க, இரானிய, மங்கோலிய, ஸ்கேதிய, ஹூண, செமிடிக் இனத்தவர்களையும் ஏன்? இன்றைய ஐரோப்பிய இனத்தார்களுக்கானவர்களையும் சமீபகால நூற்றாண்டுகளை எடுத்துக் கொண்டால், ஹூணர்கள், சாகர்கள், துஷாணர்கள், பல்லவர்கள் ஆகியவர்களையும் ஒன்று சேர்த்து

ஒருமைப்படுத்தி ஒரே பொது தேசீய வாழ்வாக்கிக் கொண்டதாலேயாகும். ஒற்றுமையும், ஓர்மைப்பாடுந் தான் இத்தேசத்தின் நீண்ட காலப் பண்பாடாகும்.

உலகில் அனேக தேசங்களில் மிகச் சிறந்த நாகரிகங்கள் தோன்றின. ஒரு காலத்திய உன்னத ஈஜிப்திய, பாபிலோனியா, கிரீஸ் நாகரிகங்கள் பழைய சரித்திர ஏடுகளோடு நின்று விட்டன, மற்றும் கீழ் நாட்டைச் சார்ந்த ஜப்பான், மேனடாய் இன்று கேள்வி கேட்பாரற்றுப் போய் விட்டது. ஆனால் சீனத்தையும், இந்தியாவையும் தவிர, மற்றேனைய நாடுகளில் தோன்றிய நாகரிகங்கள் அனைத்தும் மாண்டு மடிந்து போயின. என்றாலும் இன்று சீனாவைக் குறித்து நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால். இந்திய மண்ணில் தோன்றிய பழங்கால நாகரிகம், அக்கால முதல், இன்றளவும் சிதைந்து நசிந்து விடாமல்; வனப்பிழந்து வலிமை குன்றாமல்; பலமுற்று உரம்பெற்று பொதுவாக மனித சமுதாயத்திற்கு நம்பிக்கையையும், ஆதர்ஸியத்தையும் நொடுத்து கொண்டு வருகிறது.

ஐரோப்பிய உலகம் தங்கள் பண்டைப் பெருமையை இழந்துவிட்ட, கிரீஸ், ரோம் நாட்டவர்களின் புத்தகங்களினின்றும் தங்கள் பாடங்களைக் கற்றுக் கொள்ள. முற்படுகிறது. அப்பாடங்களை கற்றுக் கொள்வதால், கிரேக்கர், ரோமர் முதலானவர்கள் செய்த தவறுகளை தாங்கள் உதறித் தள்ளி விடலாமென்று ஐரோப்பியர்கள் நினைத்துக்கொள்கிறார்கள்.

இது அவர்களுடைய பரிதாப நிலையாகும். இவையனைத் திற்கும் மத்தியில் இந்தியா அசையாமல் நிற்கிறது. இதுதான் நாம் பெற்ற பாரம்பர்ய பெருமை யாகும்.

என்றும் குன்றாத நம் சிறந்த நாகரிகத்திற்குக் காரணம், பொதுவாக நாம் சகிப்புத் தன்மையோடு, மற்றவர்களுடன் வாழக் கற்றுக் கொண்டதும், அவ்வக் கால மாறுபாட்டுக்குத் தகுந்த மாதிரி எதனையும் ஜீரணித்துக் கொள்ள முற்பட்டதுமாகும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும், நாமும் வாழ்வோம்; எதிரிகளா யினும் அவர்களையும் அன்பு கொண்டு வாழ விடுவோம் என்பதுவே நமது சித்தாந்தமாக இருந்து வந்திருக்கிறது.

நாம் அநாகரிகம் உள்ளவர்களென்றும், அஞ்ஞானி களென்றும், மந்த குணம் படைத்தவர்களென்றும், எந்த மாறுதலையும் ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியாதவர் களென்றும், அந்நியர்கள் இந்தியரின் மீது குறை கூறி வந்ததுண்டு. இது உண்மையில் நமது குணத்தின் மீது கூறப்பட்ட குற்றமேயாகும். நாம் அனுபவத்தில் ஆராய்ந்து, உண்மை என்று கண்டதை, மாற்றத் துணிவ தில்லை.

அநேகர் இந்தியாவிற்கு வலிய யோசனைகளைக் கூறினர். ஆனால் இந்தியா உறுதியாய் மாண்புற நிற் கிறது. இது இத்தேசத்தின் சிறப்பு. இதுவே நம் வாழ்க் கையின் நம்பிக்கைக்கு ஆதர்ஸ்யமாகும்.

இத்தேசத்தில் சில சந்தர்ப்பங்களில் ஒன்றுக் கொன்று முரண்படாத, ஆனால் ஒன்றுக் கொன்று வேறுபட்ட நிலைமைகள் நீடித்து நிலைத்திருந்திருக் கின்றன. இந்திய சரித்திரத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் அத்தனையிலும், வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களி லும். ஜீவிதத்தோடு கூடிய ஒற்றுமைசக்தி பிரதிபலிப் பதைக் காணலாம். இந்த ஒற்றுமை சக்தியானது பொது உலக ரீதியை அடிப்படையாகக் கொண்டது. வனப்பும், வலிமையும், ஸ்திரமும், சத்தியமும் கொண்ட எந்த உயரிய கலாசாரத்திற்கும், நாகரிகத்திற்கும் ஒற்றுமையம், பொது உலக ரீதியும் அவசியம் வேண்டிய தாகிறது.

அடிக்கடி நாம் கலாச்சாரம், நாகரிகம் என்றெல் லாம் பேசுகிறோம். அப்படியானால் கலாச்சார மென் றால் என்ன?

ஜன சமுதாய கூட்டு வாழ்க்கை செவ்வனே நடை பெறவும், தனித்தவர்கள் தங்கள் இயற்கை ஆக்க சக்தி யோடு பரிணமிக்க வாய்ப்புக் கொண்ட வாழ்வின் அமைப்பே நாகரிகம். மற்றும் நாகரிகம் என்பது மனி தனுக்கு கடமை என்னும் வழியைக் காட்டுகின்ற நல் லொழுக்க முறையுமாகும். நம் கடமையை செய்தால், நமது மனத்தையும், மனோ விகாரங்களையும் அடக்கி அவற்றின்மீது ஆட்சி செய்யலாம். அவ்வாறு செய்வ தால் நாம் நம்மை அறிகிறோம். அதனால் நம்மையும் அறிந்துகொள்வதுடன் மற்றவர்களையும் நாம் அறிந்து

கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இதனால் அனைவரும் மேம்பட்டு வாழவழிவகையேற்படுகிறது.

ஜன சமுதாய கூட்டு வாழ்க்கைகளின் முடிவான அம்சங்களே கலாச்சாரம். இது மொழி, கலை, தத்துவ ஞானம், மத சமுதாய பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனைகள், அரசியல் மன்றங்கள், பொருளாதார அமைப்புகள் ஆகியவைகள் மூலம் பிரதிபலிக்கக் கூடியதாகும். இதில் எதனையும் தனித்துப் பிரித்து கலாச் சாரம் என்று கூறிவிட முடியாது. கூட்டாக வாழ்க்கையின் எடுத்துக்காட்டுக்கு இலக்காக விளங்குவது எதுவோ அதனையே கலாச்சாரமென்று சொல்லுகிறோம். கலாச் சாரத்திற்கு தக்க நிலைமைகள் ஏற்பட ஏதுவாக உள்ள சமுதாய அமைப்புகள் தான் நாகரிகம் எனக் கொள்ளலாம்'

நாகரிகமின்றி, கலாச்சாரம் என்பது இருக்கவே முடியாது. ஆனால் கலாச்சாரங்கள் அபிவிருத்தியடையாத நாகரிகங்கள் இருக்கலாம்.

சில சந்தர்ப்பங்களில் நாம் காணும் நாகரிக மக்களில், ஒரு சிலரே கலாச்சாரம் படைத்தவர்களாக இருப்பதைக் காணலாம். நாம் நாகரிக நாடுகளையும் நாகரிக இனத்தவர்களையும் பார்க்கிறோம். ஆனால் எந்த நாடோ, இனமோ முற்றிலும் நாகரிகம் அடைந்து விட்டதாக சொல்ல முடியாது. பொதுவாக ஐரோப்பிய தேசங்களை எடுத்துக்கொண்டால், கலாச்சாரமற்ற

நாகரிக விவகாரங்கள் பலவற்றைப் பார்க்கலாம். இன்றைய மேல் நாடுகளில் நாகரிகங்களை சிருஷ்டித்த நாடுகளுக்கு, கலாச்சாரங்களை சிருஷ்டிப்பது தற்காலப் பிரச்னையாக இருக்கிறது. ஆனால் இந்தியாவிலோ ஐரோப்பாவைப் போல் உயர்ந்த அளவுக்கு நாகரிகத் தன்மை வளர்ச்சி அடையவில்லை என்று சிலர் கருதலாம். ஆனால் நாகரிகக் கட்டமானது பெருவாரியான பொது மக்களிடையே பரவி சிறந்ததொரு கலாச்சாரத்தை சிருஷ்டித்திருக்கிறது.

இத்தேசத்திற்கு வந்த கிரேக்க தூதரான மெகஸ்தனிஸ் அக்கால இந்தியாவைப்பற்றி பெருமிதப் பூரிப் படைந்தார் அவர் ''இந்தியாவில் அடிமை என்பவர்கள் இல்லை. யாவரும் சரிநிகர் சமமானவர். ஆசியாவின் மற்றைய மக்களைவிட இந்தியர்கள் புஜபல பராக்கிரமத்தோடு ஆண்களும், பெண்களும், சிறந்த கற்பு நெறி நின்று மனமகிழ்ந்து வாழ்கிறார்கள். வீடுகளுக்கு பூட்டுத் திறப்போ, அன்றி கட்டுக்காவலோ கிடையாது. மக்கள் யாவரும் சுறுசுறுப்பும், துடிதுடிப்பும் கொண்ட சிறந்த விவசாயிகளாகவோ அல்லது கைதேர்ந்த உழைப்பாளிகளாகவோ இருக்கின்றனர். எதற்காகவும் அவர்கள் பொய் சொல்லுவதில்லை. எந்த தகராறுகளாயினும், விவகாரங்களாயினும் நீதி மன்றமேறி வாதாடுவதில்லை. தங்கள் தலைவரின் தலைமையிலேயே, சத்திய நெறி நின்று—சாந்தியான வாழ்வு வாழ்கின்றனர்.'' என்று கூறிப்போயுள்ள வரலாறு ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டியவையாகும்.

இந்தியாவிலே, பாமரர்களுக்கும் மற்றையோர் களுக்கும் உள்ள பேதம், தன்மையைப் பொருத்தல்ல சந்தர்ப்பத்தையும் விஷயத்தையும் பொருத்ததாகும். ஆனால் ஐரோப்பாவிலோ, பாமரர்களுக்கும் மற்றை யோர்களுக்கும் உள்ள வேறுபாடு அளவு கடந்ததாகும். இதனால் சிறந்த ஜனநாயகவாதிகளே, ஜனநாயகத்து வத்தில் நம்பிக்கையை இழக்கத்தான் வேண்டுமென்று முடிவுகட்டக்கூடிய அளவுக்கு நிலைமையில் தடுமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் தற்கால விஞ்ஞான அபிவிருத்தி சாதனம் எதிலும் ஏற்படாத முன்காலத்தி லுங்கூட கிராமப் பாமரனுடைய கைத்திறனும், ஆற்றல் ஞானமும் வெளிக்கு பரிணமித்தது. ஆனால் ஐரோப்பிய கைத்தொழில் அபிவிருத்தியால் கூட, மேற்கண்ட நிலைமை பாமரர்களிடம் உண்டாகவில்லை. ஆனால் அது அங்கு பாமர மனித சமுதாயத்தை குட்டிச்சுவராக்கி விட்டது.

நாம் அநேகமாயிரம் ஆண்டுகளுக்கு முன் உபயோ கித்த கலப்பைகளையே இன்னும் உபயோகித்து வருகி றோம். முன் எம்மாதிரி குடிசைகளில் குடியிருந்தோமோ அதேமாதிரி குடிசைகளில்தான் இன்னும் குடியிருக் கிறோம். பண்டைய வாழ்வு முறையைப் போலவே இன்னும் வாழ்ந்து வருகிறோம். இதனாலெல்லாம் மேனாட்டைப்போல மனித உணர்ச்சியை வதைக்கும் அநீதப்போட்டிமுறை நம்மிடமிருந்ததில்லை என்பது தெளிவு. பொதுவாக ஒவ்வொருவரும் தங்கள் சொந்த தொழிலையோ, வியாபாரத்தையோ செய்து தங்கள்

வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளைப் பெற்றனர். இதனால் நமக்கு இயந்திரங்களைக் கண்டுபிடிக்கும் சக்தி இல்லாமலிருந்ததில்லை. ஆனால், நம் மனதை இது போன்ற விஷயங்களில் செலுத்தினால், நம் அடிமை களாகி நமது தர்ம சிந்தையை இழந்துவிடுவோமென்று நமது முன்னோர்கள் கருதினார்கள். ஆகவே அவர்கள் முற்றிலும் ஆலோசனை செய்து, நாம் நமது உழைப் பால் செய்ய முடிந்த காரியங்களையே செய்ய வேண்டு மென்று முடிவுசெய்தார்கள்.

மேலும் நமது மூதாதையர்கள் நமது இந்திரிய சுகங்களுக்கு ஓர் எல்லை ஏற்படுத்தினர். சுகம் என்பது பெரும்பாலும் மனோநிலையைப் பொறுத்தது என்று அவர்கள் அறிந்தார்கள். ஒருவன் செல்வனாய் இருப்ப தாலே சந்தோஷமும், ஏழையாய் இருப்பதாலே துக்க முள்ளவனாகவும் இருப்பதில்லை, பொருள் உடை யோர் பெரும்பாலும் துக்கமுள்ளவர்களாய் இருப்பதை யும் ஏழைகள் சந்தோஷமாய் இருப்பதையும் காண் கிறோம். பெரும்பாலான மக்கள் எப்பொழுதும் ஏழை களாகவே இருப்பவர்கள். இவற்றையெல்லாம் நோக்கி நமது முன்னோர்கள் நமக்கு சுகங்களும் இன்பங்களும் கூடாவென்று விளக்கினார்கள்.

பெரிய நகரங்கள் மயக்கானவை, முட்டுக்கட்டை கள், மக்கள் சுகமாய் அவற்றில் வாழமுடியாது. சுரண் டல்காரர்களும், கள்ளக்கூட்டத்தாரும் அவற்றில் புகுந்து விடுவார்கள, விபசாரமும் மற்ற தீமைகளும் பெருகும்,

ஏழைகளைச் செல்வர் வருத்துவர்யென அறிந்தனர். எனவே அவர்கள் கிராமங்களிலேயே திருப்தி அடைந்து விட்டனர். அரசர்களும் அவர்கள் வாளாண்மையும் அறவாழ்க்கைக்குத் தாழ்ந்தவையென்று அறிந்து அரசர்கள், ரிஷிகளுக்கும், முனிவர்களுக்கும் தாழ்ந்தவர்கள் என்று முடிவு செய்தார்கள். இவ்வித அரசியலைக் கொண்டுள்ள ஒருதேசம் பிறரிடமிருந்து கற்றுக்கொள் வதைவிடப் பிறருக்கு கற்றுக்கொடுப்பதற்கு மிகவும் தகுதியுடையது எனக்கருதினர்.

நம் நாட்டில் நியாயஸ்தலங்கள் இருந்தன. நியாய வாதிகளும் மருத்துவர்களுமிருந்தனர். ஆனால் ஓர் எல்லைக்கு அவர்கள் உட்பட்டிருந்தனர். மேலும் வக்கீல் களும், வைத்தியர்களும் மக்களை கொள்ளையடிக்க வில்லை. அவர்கள் ஜனங்களை சார்ந்தவர்களென்று கருதப்பட்டனர். அவர்களை மக்களின் எஜமானர்க ளென்று எண்ணவில்லை. நீதிபரிபாலனம் கூடியவரை நன்றாய் நடந்து வந்தது. மன்றங்களுக்கு போகாதிருப் பதே பொது விதியாயிருந்தது. மக்களை மயக்கித்தள்ளு வதற்கு எவரும் அக்காலத்தில் இல்லை. மக்களை மயக் கும் தீமை பெரிய பட்டணங்களிலும் அவற்றை சுற்றி யுமே இருந்தது. பொது ஜனங்கள் சுயாதீனமாய் வாழ்ந்து தங்கள் விவசாயத் தொழிலைச் செய்து வந்தார் கள். ஓரளவுக்கு சுய ஆட்சியை அவர்கள் அனுபவித் தார்கள்.

இவ்விதம் இந்திய கலாச்சாரத்தில் சிறந்த ஒற்றுமை சாதனத்தையும், நீண்டகால தொடர்பின் தன்மையை யும் காணலாம்.

கலாச்சாரத்தின் பொது அம்சம் ஒற்றுமையும் ஓர் மைப்பாடுமாக இருந்தபோதிலும், இந்திய கலாச்சாரத் தின் சிறந்த அம்சம், சிதைந்து படாத தொடர்ச்சியே யாகும். ஆகவே இந்தியாவின் நிலை இணையற்றது, அதன் வன்மை அளப்பரியது.

அடிக்கடி இந்தியப் படையெடுப்புகளைப்பற்றி பேசி வருகிறோம். ஆனால் ஆசியநாடுகளான ஈரான், மெச பட்டோமியா, சிரியா, ஈஜிப்து போன்ற நாடுகள் படை யெடுப்புகளினால் அடைந்த கஷ்ட நஷ்டங்களை ஒத் திட்டுப் பார்க்கும்பொழுது இந்தியா அமைதியையும், சமாதானத்தையும் அனுபவித்து வந்தது என்று சொல்லி விடலாம்.

இந்தியாவினுடைய பூகோள அமைப்பு, அதனுடைய இயற்கை அரண், மகோன்னத மலைகள், ஜீவநதிகள் முதலானவைகள் இந்திய சரித்திர அரங்கத்தில் அனை வரையும் ஒற்றுமை காண ஊக்குவிக்கிறது. இப்பரந்த தேசத்தில் பலதிறப்பட்ட வெட்பதட்பங்கள், பலவேறு பட்ட பூசாரங்கள், பல நாகரிக மக்களைக் கொண்ட சாதனங்கள் ஆகியவை இந்நாட்டில் ஒரு தேக்கமான மனித சமுதாயத்தை சிருஷ்டி செய்யாமல், சீரும் சிறப்பு முள்ள கலாச்சார மக்களை சிருஷ்டி செய்துள்ளது. இந் தியாவினுடைய இயற்கை சாதனம் இந்தியாவைப் பாகு படுத்தவோ அல்லது வேறெதோடும் இணைக்கவோ முடியாததொரு காரியமாக இதுவரை சரித்திரம் நிரூ பித்துக் காட்டியிருக்கிறது.

முதலாவதாக குடியேறிய ஆரியர்கள் இந்தியாவிற்கு வெளியிலிருந்த தங்கள் இனத்தவர்களோடு உறவையும், சம்மந்தத்தையும், அறவேவிட்டு விட்டார்கள். இந்தியாவோடு ஆப்கானிஸ்தானத்தை சேர்த்துப் பிணைத்துவைக்கச் செய்த ஆரியர்களின் ஆசை வீணாயிற்று. ஆனால் காந்தகார் போன்ற பெயர்களை மாத்திரம் நாம் இன்றும் கேள்விப்படுகிறோம். (காந்தகார் தேசராஜகுமாரிதான் மகாபாரத கதையில் வரும் காந்தாரி என்பவள்) என்றாலும் ஆப்கானிஸ்தானம் இந்திய வாழ்விலிருந்து ஒதுங்கிப்போய் விட்டது.

பாஞ்சாலத்தையும், ஆப்கானிஸ்தானத்தையும் சேர்த்து வைக்க கிரேக்கர்கள் கொண்ட விருப்பமும், காந்தகாரை இழுத்துப்பிடிக்க மௌரியர்கள் செய்த முயற்சியும், பெர்சியாவோடு சிந்துவை சேர்த்துவைக்க மொகலாயர்கள் கொண்ட பிரயாசையும், காபூலிலிருந்து இந்தியாவை ஆளவேண்டுமென்று நினைத்த கஜனி முகம்மதுவின் எண்ணமும் ஈடேறவில்லை. இந்தியாவை வந்தடைந்த பட்டாணிய அரசர்கள் முன்னவர்களைப் போலவே அவர்களுடைய பூர்வீகத் தொடர்பை மறந்தவர்களானார்கள். இன்னும் பின்னால் வந்த மொகலாய அரசர்களும் பழைய பூர்வீகத்தை மறந்தார்கள். இது மாதிரி வெளி ஆதிக்கத்திற்கு உட்படாது இந்தியா தனக்குள்ளேயே ஒற்றுமைக்காண முற்பட்டது. சரித்திர விசேஷமாகும்.

ஆரம்பகால முதல் அரசாட்சிகளும், ஸ்தாபனங்களும் இந்தியா முழுமைக்கும் ஒரே பொது விதியைக்

கொள்ளத் துணிந்தது. இந்தியாவைப் பற்றி ''ஹிமமத் சேது பரியந்தம்'' ''இமய முதல் ராமேஸ்வரம் வரை'' ''இமய முதல் குமரி வரை'' என்று வழங்கப்படும் சாதாரண வழக்கச் சொல்களிலிருந்தும், ஒன்று பட்ட இந்தியாவே நம்மவர்களுடைய மனோ லட்சியமாக ஆதிமுதல் இருந்து வந்திருக்கிறது என்பது வெளிப்படை. இத்தேசத்தை பல மன்னர்கள் ஒரு குடைக்கீழ் ஆள நினைத்தார்கள். அசோகர் தனக்கு முன்னும் பின்னும் இல்லாத அளவுக்கு இத்தேசத்தில் ஒரே ஆட்சியை நடத்திக் காட்டினார். அவருக்குப் பின்னால் வந்த மன்னர்கள் அவரையே பின்பற்றினார்கள். பட்டாணிய முகலாய மன்னர்களும் இந்தியாவை ஒன்றாகவே மதித்து ஆட்சி நடத்தினார்கள்.சரித்திர காலத்திற்கு முன்பிருந்து இன்று வரை இந்தியா ஒன்றுபட்ட தேசமாக இருந்துவர முயற்சித்திருக்கிறது.

எத்தனையோ சமுதாய மாறுதல்களும், படையெடுப்புகளும் நிகழ்ந்திருந்துங்கூட இந்தியாவினுடைய ஜீவிதமானது படிப்படியான மாறுதல்களோடு தொடர்ந்து பரிணமித்து வந்திருக்கிறது. இந்தியா பல தேசங்களாக, பல்வேறு அரசர்களிடம் பிரிந்து இருந்த காரணத்தாலும்; அரசியல் அதிகாரம் ஒருவரைவிட்டு ஒருவர் வசம் அடிக்கடி மாறிக்கொண்டிருந்ததாலும் மக்கள் பொதுவாக ஆளுபவர்களைப் பற்றி அக்கரை கொள்ளாமலிருந்தனர். இதனால்தான் அந்நிய ஆதிக்கம் இத்தேசத்தில் வேரூன்றியிருந்தும், மக்கள் ஆளுபவரைப் பற்றி நீண்ட நெடுங்காலம் சகிப்புத்தன்மைக் காட்ட தலைப்பட்டனர்

மஹோஞ்சதாரோ நாகரிகம் மிகச் சிறந்ததும், பழமையானதுமென்று ஆராய்ச்சியாளர்கள் முடிவு கூறுகிறார்கள். அந்த உயரிய, பழைய நாகரிகத்தை, இத்தேசத்திற்கு வந்து ஆரியர்கள் சிதைக்கவில்லை. அத னுடைய அஸ்திவாரத்தின் மீதே ஆரியர்கள் தங்கள் கலாச்சாரத்தை நிர்மாணித்துக்கொண்டார்கள். இத னால் மஹோஞ்சதாரோ நாகரிகம் பழைய ஆரியர்களு டையதோ என்று ஐயங்கொள்ளக்கூடிய அளவுக்கு இருந்து வருகிறது. இந்த ஐயப்பாடுடையவர்கள். ஆரியர் கள் இத்தேசத்தின் பூரவீகக் குடிகள் என்று சொல்லிவிட வேண்டும். அதனை சரித்திரம் மறுக்கிறது.

மஹோஞ்சதாரோ என்பது சிந்துநதிபக்கமான ஸுக்கூருக்கு பக்கத்திலுள்ளது, பூமியைத் தோண்டி ஆராய்ச்சி செய்யப்பட்டதன் பயனாக அது நல்ல பாதை, தண்ணீர் வசதி, பாய்கால், வடிகால்களோடு நீர்ப்பாசன வசதிகள் அத்தனையும் கொண்ட. சிறந்த நாகரிக நகரமென கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட முத்திரை களும், சிவலிங்கங்களும், அதன் பீடத்தைப்போல் தோன்றுகின்ற கல்லுருவங்களும் காணப்படுகின்றன. இந்த ஆராய்ச்சிக்கும், மேற்கு ஆசிய ஆராய்ச்சிக்கும் டைக்ரீஸ் யூப்ரட்டீஸ் பிரதேச ஆராய்ச்சிக்கும் ஒற்றுமை இருக்கிறது. இந்நாகரிகத்திற்கும் பாபிலோனிய நாகரிகத்திற்கும் சம்பந்தம் இருந்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. மற்றும் மஹோஞ்சாதாரோவுக்கு

400 மைல் வடக்கேயுள்ள பாஞ்சாலத்தைச் சார்ந்த ஹாரப்பாவிலும், ஐக்கிய மாகாணத்திலும் மேற்கூறப் பட்டத்தைப் போன்ற நாகரிக நகரங்களும் பொருள் களும் சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் மேற்கண்ட பிரேதேசங்கள் முழுவதிலும் 6000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான நாகரிகம் ஓங்கி இருந்ததாக தெரிகிறது. வேதகால நாகரிகம் இதற்கு 2000 ஆண்டுகளுக்கு பிற்பட்டது.

இந்திய வாழ்விலும், கலாச்சாரத்திலும் மஹோஞ் சதாரோ நாகரிகம் தொடர்ந்து வந்திருக்கிறது. இன் றைய இந்து மதத்தில் காணப்படுகின்ற சிவசக்தி கோட் பாடு அந்த மஹோஞ்சதாரோ நாகரிக காலத்தைச் சேர்ந் ததுதான். அவ்வக்கால அரசியல் தகராறுகளால் பல் வேறு இனத்தவர்களின் கலாச்சாரமும், நாகரிகமும் தலை தூக்கி நிற்க வாய்ப்புக் கிடைத்தது. பொதுவாக அறிவும், ஞானமும் நிலையான பொருள்களல்லவென்றும், பரிண மிக்கக்கூடியதென்றும் நம்மவர்கள் நன்கு ஆரம்பகால முதல் உணர்ந்து அங்கீகரித்து வந்திருக்கிறார்கள்.

இந்திய மண்ணிலும், வாழ்விலும் சம்பந்தப்பட்ட அத்தனை பேர்களையும் இந்தியா தன் வசப்படுத்திக் கொண்டு விட்டது. சமீப காலத்திற்குள் வந்து குடியேறி யவர்களில் ரஜபுத்திரர்களும் குறிப்பிடப்பட வேண்டிய வர்கள். அவர்கள் எங்கிருந்து வந்தார்களென்பதே தெரிந்து கொள்வதற்கில்லை. அவர்கள் இந்து சமுதாயத்

தில் இரண்டறக் கலந்து விட்டார்களென்பது மட்டுமல்ல, இந்தியாவின் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும். மேன்மையையும் பாதுகாக்கக்கூடிய விசேஷ பாதுகாவலர்களாகவும் ஆகிவிட்டனர். அவர்களுக்குப் பின் வந்த முஸ்லிம்களும் இந்துக்களின் வாழ்வில் ஒன்றாக கலந்து விட்டனர். (இவ்வரலாற்றைத் தெளிவாக ஆராய்வோம்.) கடைசியாக வந்த வெள்ளையர்கள் தற்கால இந்திய மண்ணிலோ அல்லது வாழ்விலோ கலந்து கொள்ளாமலேயே தனித்து நின்றுவிட்டார்கள். அதனால் தான் இத்தேசமோ, ஜனசமுதாயமோ அவர்களை ஒத்துக் கொள்ள மறுத்து விட்டது. அவர்கள் இறுதி வரையில் ''வழிப்போக்குப் பறவை'' போல இருந்து வெளியேறி விட்டனர்.

நம் தேசத்துக் கலாச்சாரம். நாகரிகம் அத்தனையும் ஒரு ஒன்றுபட்ட இந்தியாவையே விரும்பின. ஆனால் ஒரு நிரந்தரமான முறையில் ஒரு ஒன்றுபட்ட இந்தியா நிலை பெற்றிருக்கவில்லை. எப்படி இருந்த போதிலும் கடந்த 2000, 3000 ஆண்டுகளாகவும், ஏன் இன்று வரையிலுங்கூட தேசத்தின் ஆட்சிமுறையில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டும், சமுதாய அமைப்பானது கடந்தகால நிலையை ஒட்டியே இருந்து வந்திருக்கிறது.

இந்திய 'குடிஅரசு' சமுதாய அமைப்பானது இத்தேசத்திற்குப் புதிதல்ல. மஹோஞ்சதாரோ சரித்திர ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ள உண்மையிலிருந்து

மிகப்புராதன நாட்களிலேயே, பெரிய நகரங்களும் நல் வாழ்க்கைக்குரிய சீரிய செளகரியங்களும், சிறந்த குடி யாட்சி அரசியல் முறைகளும் ஒப்பற்று இந்நாட்டில் விளங்கினவென்று துணிந்து சொல்லலாம், மற்றும் வேத உபநிஷத்துக்களில் சொல்லப்படுகின்ற சமுதாயங்கள், ஜனநாயகத்துவத்தை அடிப்படையாகக் கொண்டன. அவ்வாரம்ப காலத்திலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட சபை கள் (சமிதி) மூலம் பொதுஜன அபிப்பிராயம் கவனிக்கப் பட்டது. ஆரம்ப காலத்தில் சில கிராமங்கள் ஒன்று சேர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 'சமிதி'களை ஏற்படுத்திக் கொண்டன. கிராமத்தில் அரசியல் விவகாரங்கள் மட்டு மல்ல; ஜனசமுதாயத்தின் எல்லா விஷயங்களும் பரி சீலனை செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டன. பின்னால் வந்த பௌத்த மடாலயங்களும் ஜனநாயக ரீதியை அடிப் படையாகக் கொண்டிருந்தன. வேத, உபநிஷத்துக் களில் மன்னர்களை தேர்ந்தெடுக்கவும், நாட்டைவிட்டு அகற்றவும், திரும்பி அழைத்துக் கொள்ளவுமான செய்தி கள் காணப்படுகின்றன. பொதுவாக அரசுகள் பல தோன்றியதால் அடிப்படை ஜனநாயக சமுதாயங்கள் சிதறுண்டன. எனினும், பூர்வீக கிராம குடியாட்சி முறை மட்டும் அடியோடு மாண்டு மடிந்து விடவில்லை. பொதுவாக கிராமக் குடியாட்சிமுறை, தென்னிந்தியா வில் மட்டும் நிலைத்திருந்ததாகக் கொள்ள வேண்டாம். பெரும்பான்மையோராக முஸ்லிம்கள் நிறைந்த வட நாட்டு கிராமங்களிலும், கிராம குடியாட்சிகள் நிலவி வந்தன என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆரம்பத்தில் சாதி பாகுபாடுகள் தொழிலை அடிப் படையாகக் கொண்டிருந்தன. பிறவியினால் உயர்வு, தாழ்வு கற்பிக்கப்பட்டது பிற்காலத்தில்தான். செயலி னால் மனிதனோ, சமுதாயமோ, உயர்ந்த சாதியாகவோ தாழ்ந்த சாதியாகவோ மாறியதுண்டு. ஆரிய ஆகமத் தில் திராவிடக் கடவுள்கள் இடம் பெற்றன. திராவிட குருமார்கள் பிராமணர்களாகவும் மாறினார்கள்.

ஆரியர்கள் இத்தேசத்தை புஜபல பராக்கிரமத்தால் வென்றுவிடவில்லை. ஆனால் கலாச்சார ரீதியில் இத் தேசத்தை வென்று விட்டார்கள். பண்டைப் பெருமைப் படைத்த நாகரிக திராவிடர்கள்—புதிதாக வந்தவர்களை விட பெருமையான நாகரிகம் படைத்தவர்களென்று சொல்லிக் கொள்ளவில்லை. ஆரியமும், திராவிடமும் ஒன்றாகக் கலந்து அவர்கள் வேறு, தாங்கள் வேறு என்பதை காலக்கிரமத்தில் இருசராரும் மறக்கலானார் கள். இராமாயண, மகாபாரதக் கதைகளில் திராவிட ஆரிய விவகாரங்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன. என்றா லும், ஒவ்வொரு சாராரிடத்திலும், நன்மையும், தீமை யும் கலந்து காட்டப்படுவதோடு, இரு சாராரும் தங்கள் தங்கள் இனவெறி யொழித்து ஒன்றுபட்டு வாழவுந் தூண்டுகிறது.

இந்தியாவின் பல்வேறு மொழிகளிலும், இந்திய கலாச்சாரத்தின் ஒற்றுமையும் தொடர்பும் காணப்படும். இன்றைய தினம், பல்வேறு மொழிகளுக் கிடையே உள்ள வேறுபாடுகள் அரசியல் காரணங்களுக்காக

பிரமாதப்படுத்தப்படலாம். என்றாலும், மொழியின் அடிப்படை அமைப்பிலுள்ள தன்மையில் ஒற்றுமையைக் காணலாம். சமஸ்கிருத மொழியானது, 'சமஸ்கிருதம்' என்ற பெயரிலிருந்தே பழைய ஒன்றிலிருந்து தொகுக்கப்பட்டது என பெறப்படும். எனினும், சகல இந்திய மொழிகளின் இலக்கணத்திலும், அமைப்பிலும், 'சமஸ்கிருதம்' தன் செல்வாக்கை வேரூன்றச் செய்துவிட்டது பொதுவாக மொழிகள் ஒன்றோடொன்று கலந்திருப்பதால் — பொதுநோக்கோடு வளர்ச்சியுமடைந்திருக்கிறது. இந்தியாவின் சகல மொழிகளும் சமஸ்கிருதத்திலிருந்து உதித்தெழுந்தனவோ என்று சந்தேகங் கொள்ளத்தக்க அளவுக்கு சமஸ்கிருதத்தின் செல்வாக்கு பரிணமித்திருந்தது. ஆரியத்திற்கு முன்தோன்றிய திராவிடமொழி இந்த சந்தேகப்பிடிப்பினின்றும் விலகிவிடவில்லை. பல்வேறுபட்ட இனத்தவர்கள், இந்தியாவுக்கு வந்தபோதெல்லாம், பல்வேறு மொழிகள் வந்து புகுந்தனவென்றாலும் சமஸ்கிருதம் சிறந்து நிலைபெற்றதோடு, மற்றைய மொழிகளின் வளர்ச்சிக்கும் உதவி புரிந்துள்ளது ஆகவேதான், அகில இந்திய மொழிகளுக்குள் இலக்கண அமைப்பில் அநேகமாக ஒருமைப்பாடும் பொதுவான அகராதியும் இருந்து வருவதைக் காணலாம். புராதன திராவிட இலக்கியங்களில் அன்னியராக வந்து குடியேறிய ஆரிய இனத்தவர்மேல் வெறுப்பும், துவேஷமும் காட்டப்பட்டிருக்கின்றன. இதேபோல் புராதன ஆரிய இலக்கியங்களில் திராவிடர்களைக் குறித்தும், பீதியும், துவேஷமும்

வெறுப்பும் காட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த நிலைமை நீடித்து நிற்கவில்லை. பல்வேறுபட்ட பல இனத்தவர்களையும் ஒரே சமுதாயத்தின்கீழ் ஒன்று படுத்தத்தக்க ஒற்றுமையுணர்ச்சி இந்திய இலக்கியங்களில் வரவர இடம்பெற்றுவிட்டன.

ஒற்றுமையும், ஒருமைப்பாடும்தான் இந்திய மதங்களின் ஒரே லட்சியமாக இருந்து வந்திருக்கிறது. எவ்வித சடங்கு சம்பிரதாயங்களின்றி புராதன ஆரியர்கள் இயற்கையின் சக்திகளை வணங்கி வழிபட்டார்கள். பின் வேதகால கடவுள்கள் ஏற்பட்டன. சிருஷ்டிக்காக 'பிர்ம்மா'வின் இடத்தில் சக்தி என்ற பெண் தெய்வம் இடம்பெற்றது. வேதகால நூல்களில் சிவ, விஷ்ணு பிரஸ்தாபங்கள் அவ்வளவாகக் காணப்படவில்லை. சக்தி'யோ அல்லது பெண் தெய்வ வழிபாடோ ஆதி கால நூல்களில் அறவே கிடையாது. சிவ நடன விவகாரங்கள் மஹேஞ்சதாரோ நாகரிக காலத்தைச் சார்ந்ததாகும். வேதகால ருத்ரனுக்கும், பிற்கால சிவனுக்கும் முடிச்சுப்போட்டுவிட்டார்கள் என்பது ஒரு சாரார்ரின் கருத்து. தக்ஷ விருந்து வரலாற்றில் சிவனைப் பற்றிக் கூறப்படாததினால், சிவன் பிற்காலத்திலேயே அங்கீகரிக்கப்பட்டான் என்பது சரித்திரக்காரர்களின் சித்தாந்தம். கார்மேகவண்ணனான விஷ்ணு, ஆரியக் கடவுள் அல்லவென்பதும், திராவிடர்களை திருப்திப் படுத்தவே இந்து, ஆகமத்தில் விஷ்ணு புகுத்தப்பட்டார் எனவும் கருதுகிறவர்கள் உண்டு. நாளாவட்டத்தில் ஆரியர், திராவிடர்களின் ஆண்பெண் தெய்வங்களின்

தன்மையை ஒத்துக் கொண்டதோடு அதனுடைய அமைப்பிலும், அர்ச்சனையிலும் தங்கள் இஷ்டத்திற்கு நடக்கத் தலைப்பட்டனர். இந்த மாறுதல்களை எவரும் மறுக்கவில்லை என்பதோடு, அனைவருமே அங்கீகரிக்கவும் ஆரம்பித்தார்கள். பொதுவாக ஒரு இனத்தவர் மற்றவர்களின் கடவுள்களை அங்கீகரித்துக்கொள்வது சர்வ சாதாரணமாக எல்லா தேசங்களிலும், அனுபவ்த்தில் நடந்தேறியே வந்திருக்கிறது. ஆனால் இந்தியப் பண்பாட்டில்—தாராள மனப்பான்மையுடன் ஒருவருக்கொருவர் எல்லா வகைகளிலும் நெருங்கிவாழ நேர்மையுடன் கற்றுக்கொணடார்கள் என்பதுதான் சரித்திரம் காணும் உண்மை.

கிரீஸின் யுத்த அரங்கத்தில் மெய்சீனியன் நாகரிகம் தோல்வியுற்றது. எனினும் ஹெலனின் கலாச்சார பண்பாட்டால் மேற்கண்ட நாகரிகம் நீடித்து நின்றது. மற்றும் கிரீஸ் அரசியல் ரீதியில் தோல்வியுற்றபோதிலும், கிரேக்க நாகரிகம் ரோமாபுரியின் கலாச்சாரத்தால் தோல்வியைக் காணவில்லை. அதுபோலவேதான், அரசியல் ரீதியில் இந்நாட்டுக்கு வந்தவர்கள் வெற்றியே கண்டார்களென்றாலும், கலாச்சார, சமுதாய, ஆத்மார்த்திக விஷயங்களில் வெற்றியென்பது பரஸ்பர உடன்பாடாகவும், ஒற்றுமையாகவும், நேசப்பான்மையாகவும் மாறியது.

இந்தியாவில் மத்தியகால சரித்திரத்தை கவனிக்குமிடத்து அது பொதுவாக இந்து முஸ்லிம்கள் ஒன்றுசேர்ந்து வாழ எடுத்துக்கொண்ட முயற்சியையே எடுத்துக்காட்டும். இவைகளை தெளிவாக ஆராயப்புகுமுன் முதலில் தென்னாட்டு வரலாற்றுக்குச் செல்வோம்.

## 2. தென்னாட்டு வரலாறு

**தெ**ன்னாட்டு வரலாற்று ஆராய்ச்சியிலிருந்து தென்னாட்டுத் திராவிட நாகரிகம் ஓரளவுக்கு தனித் தன்மையும், பழமையும் வாய்ந்தது என்பதில் ஐய மில்லை. இந்திய சரித்திர காலத்திற்கு முன்னரே தென்னாட்டில், நாகரிக மக்கள் சமுதாயம் உலோக, சுரங்கத்தொழில்களில் ஈடுபட்டு சிறப்புற்றிருந்தனர்.

தென்னாட்டு திராவிட மக்கள் இந்தியாவில் வந்து குடியேறிய ஆதிமக்கள் என்று பல ஆங்கில சரித்திர ஆசிரியர்கள் எழுதியிருப்பதற்கு இன்றுவரை எந்த ஆதாரமுமில்லை.

கிருத்துவ சகாப்தத்திற்கு ஆயிரத்திருநூறு ஆண்டு களுக்கு முன்பிருந்தே திராவிட மக்கள், மெசபடோமியா, ஈஜிப்து, பாலஸ்தீனம் முதலிய நாடுகளோடு சிறந்த தொடர்பும், பெர்சிய குடாக்கடலோடும், செங்கட லோடும் வியாபாரமும் செய்து கொண்டிருந்தார்கள். சாதாரண வழக்கில் உபயோகப்படுகின்ற தமிழ்வார்த்தை கள் புராதன ஹீப்ரூ மொழியில் சர்வ சாதாரணமாக இடம்பெற்றுள்ளன. இந்திய தேக்கு மரங்கள் மத்திய கிழக்கு தேசங்களான முஹைஹர்*ல் உள்ள சந்திரன் கோயிலிலும், நெபுசாடன்ஜர் † அரண்மனையிலும் உபயோகப்பட்டுள்ளன.

---

* Mugheir † Ne buchadacnzzer.

பசிபிக் தீவுகளைப் பற்றிய தொடர்பை ஆராய்ந்தால், அது எல்லாவற்றையும் விட முந்தியது என்று சொல்லிவிடலாம். ஸில்வேயின் லெவி* அவர்கள் சொல்வதுபோல ''தென்னிந்திய துறைமுகங்களோடு கிழக்கிந்திய நாடுகளின் தொடர்பு கிருத்துவ சகாப்தத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முந்தியது'' என்பது மிக மிக உண்மையாகும்.

ஆதிகாலத்தில் ஏராளமான தென்னிந்தியர் கடல் கடந்து ஆசியா, ஆஸ்ட்ரேலியா, மடகாஸ்கர் முதலிய நாடுகள் வரை சென்றிருக்கின்றனர்.

நாம் தென்னிந்தியாவைப்பற்றி முதல் முதலாக இராமாயணத்தின் மூலம் தெரிந்துகொள்கிறோம். அப்பொழுதே ஜாவாவைப்பற்றியும், சுமத்ராவைப் பற்றியும் தெரிந்துகொள்ள சந்தாப்பமேற்படுகிறது. ஸ்ரீராமன் கிஷ்கிந்தைக்கு (பெல்லாரி) வந்து சேரும் வரையில் எந்த நாகரீக சமுதாயமும் நடுவே இருந்ததாக சொல்லப்படாததால் வடநாடும் தென்னாடும் ஓரளவுக்கு தனித்தனி கலாச்சாரங்களைக் கொண்டது என்பது தெளிவு. பின் நாம் மகாபாரதத்திற்கு செல்வோம்.

வேதங்களை தொகுத்தவரான பத்ராயணா வேத வியாசர் கருநிறங்கொண்ட புலைச்சியின் மகன். 'பத்ராயணா' என்ற பதத்திற்கே கருநிறம் என்பது பொருள். ஜனகர், விஸ்வாமித்திரர் ஆகியவர்கள் பிறவியில் பிராமணர்கள் அல்லர். வேதகாலத்திலேயே ஆரியரல்லாதாரை ஆரிய இனத்தில் சேர்த்துக்கொள்ள தலைப்

---

* Sylvain-Levi.

பட்டதோடு அதற்கு வேத அனுமதியையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். முன் சொன்ன ஜனகர் ராஜகுருவாக இருந்தபோது அவருடைய குருபீடத்தின்கீழ் பிராமணர் கள் அமர்ந்திருந்து உபதேசங்களை கற்றார்களென்பதும், வேத மந்திரங்களுக்கு கர்த்தாவாக இருந்த வசிஷ்டரே ஆரிய குருபீடத்தின் மதிப்புக்கு சாவுமணி அடித்து விட்டாரென்பதும், வேத உபநிஷத்துக்களிலேயே கலப்பு மணம், காதல் மணம், மறுமணம் ஆகியவைகள் அங்கீகரிக்கப்பட்டுவிட்டதென்பதும் நன்கு தெரியவரும். மற்றும் மகாபாரத காலத்தை எடுத்துக்கொண்டால், திருதராஷ்டிரனுக்கு குருவாகவும், நண்பனாகவும், திகழ்ந்த விதுரன் தாசிப் புத்திரனாவான். அக்கால அரசர்கள் க்ஷத்திரியர்களாக அழைக்கப்பட்டார்களே யொழிய, வாஸ்தவத்தில் உண்மை வேறு விதமா யிருந்தது அதுபோலவே பிராமணர்கள் அனைவரும் ஆரியர் என்பதும் சரியல்ல.

பாரதத்தில் வரும் திருதராஷ்டிரனும், பாண்டுவும் கருநிற புலைச்சி மகனான வேத வியாசரின் குமாரர் களாவார்கள். இதனை அரச அவையில் ஸ்ரீ கிருஷ்ணனே அம்பலப்படுத்தியிருக்கிறார். பாண்டவர்களின் மாம னான சல்யன் பின்பற்றிய ஆரிய பழக்க வழக்கங்களைக் கர்ணன் கண்டித்திருப்பதிலிருந்து சல்யன் ஆரியனல்ல வென்று தெரிய வருகிறது. சல்யனின் சகோதரி பாண்டவர் இருவர்களின் தாயாவாள். திரிகார்த்த சுதர்மன் ஆரிய இனத்தைச் சேர்ந்தவனல்ல. பாண்ட வர்கள் பல வகைகளிலும் பெற்றெடுத்த பாண்டவ

புத்திரர்கள் பரதன், கிருபன், அஸ்வத்தாமன் போன்ற ஆரிய போர் வீரர்கள் பிறவியில் தாழ்த்த இனத்தவர்கள் என்று சொல்லப்படுகிற கீழ்த்தர மக்களுடைய வீட்டில் ஒன்றாக்கலந்து வாழ்ந்த வரலாறுகளை மறுக்க முடியாது. இவைகளால் சாதி பாகுபாடும், வர்ணாஸ்ரம தர்ம ஏற்பாடும் அக்காலத்திலேயே தனித்தியங்க வில்லை என்பது தெளிவு.

பின் அசோகர் கல்வெட்டுகளால் மூன்றாவது நூற்றாண்டில் தென்னாட்டைப்பற்றித் தெரிந்துகொள்ளும்போது அதுபுதிய ஆரிய நாகரிகத்தில் புகுந்து விட்ட வரலாறு தெரியவரும், மைசூர் சித்தஸ்தூர்க்கத்திலுள்ள* அசோகரின் ஆரம்பகால இரு ஸ்தூபிகளிலிருந்து மேற்கண்ட உண்மை புலனாகிறது மைசூர்வரையிலிருந்த் அக்கால தக்காணம், மௌரிய ஏகாதி பத்தியத்திற்குட் பட்டிருந்தது.

ஆனால் மௌரிய ஏகாதிபத்தியம் சேர, சோழ, பண்டிய நாடுகளோடு நல்லுறவு கொண்டிருந்தது. மௌாரி ஏகாதிபத்திய காலத்திற்கு முன்பே ஆரிய நாகரிகம் தென்னாட்டில் பிரவேசித்துவிட்டது. காலக்கிரமத்தில் சேர, சோழ பாண்டியர்கள் மௌரியர்களோடு நேச உறவு கொண்டிருந்த காலை ஆரிய நாகரிகம் அரியாசனத்தின் உச்சஸ்தாயியை எட்டிப்பிடித்து விட்டது மொதுவாக வடநாடு. தென்னாடுபற்றி அக்

---

* **Minor Edicts I & II**

கால கலாச்சாரரீதியில் வித்தியாசமில்லை. ஆனால் தென்னாடு கடல் வலிமையிலும், வாணிபத்திலும் சிறந்து விளங்கியது, கிருத்துவ சகாப்த முதலாவது நூற்றாண்டில் ரோம ஏகாதிபத்தியத்தோடு தென்னாடு வியாபாரத்தை நடத்திவந்தது. புதுவை, அரிக்கமேடு ஆராய்ச்சி சாதனங்களிலிருந்து தென்னாடு மத்தியதரைக் கடல் வியாபாரத்திலும் தலைசிறந்து விளங்கியதென தெரிய வருகிறது. அக்கால கடல் வாணிபம் ஒப்பற்ற கடற்கரைப் பட்டினங்களை சிருஷ்டித்ததோடு மக்கள் சிறந்த கலாச்சாரத்தோடு வாழ வகைசெய்த வரலாறும் தெரியவருகிறது. இப்பொழுதுள்ள காவிரிப்பூம்பட்டினத்திற்கு சற்று தெற்கேயிருந்த அக்கால பூம்புகாரின் அழகும், சிறப்பும் அகத்தையள்ளும் சிலப்பதிகாரத்தின் பாடல்களிலிருந்து தெரியவருகின்றன.

இந்தியாவிற்கு வந்த மெகஸ்தனீஸ், பாண்டியர்களைப்பற்றி குறிப்பிடுகிறார். அக்காலப் பாண்டிய நாடு ஓர் அரசியால் ஆளப்பட்டு வந்தது. அவளுடைய சைன்யத்தில் 500 யானைப்படைகளும், 4000 குதிரைப் படைகளும், 10,000 காலாட்ப்படைகளும் இருந்ததாம். இந்த படை பலந்தான் மெளரியர்களுடைய ஆக்கிரமிப்பினின்றும் தென்னாட்டை விடுவித்து வந்தது என கூறப்பட்டிருக்கிறது.

பதஞ்சாலி (கி. பி. 150) காஞ்சீபுரத்தைக் குறித்தும். கேரளத்தைப் பற்றியும் பிரஸ்தாபித்திருக்கிறார். தென்னாட்டில் 'ஸரஸீ' என்ற பதத்தை பெரிய

ஏரிகளுக்கு உபயோகித்திருப்பதை பதஞ்சலி எடுத்துக் காட்டும்போது கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு எந்த அளவுக்கு உயர்ந்து விட்டதென்பது தெரியவரும். மெகஸ்தனீஸின் குறிப்பு களினின்றும், அசோகர் ஸ்தூபிகளிலிருந்தும் கி. பி. 5வது நூற்றாண்டுக்குள் தென்னாடு ஐயமற புதிய ஆரிய நாகரி கத்தில் ஐக்கியப்பட்டு விட்டதென்று முடிவு கட்டலாம்.

தென்னாட்டு வணிகர் வேத காலத்திலிருந்தே வட நாட்டோரோடு வாணிபம் செய்திருந்தனரென்பது வேதங்களில் புகழ்ந்து கூறப்பட்டுள்ள ('முக்தா') முத்தம், முத்து என்ற தமிழ்ச் சொல்லாலும், (ஓடா), ஓடம் முதலிய சொல்லாலும் வடநாட்டார் உபயோகித்த பொன், தந்தம் முதலியவற்றாலும் நன்குணரலாம். மற்றும் அக்கால தென்னர்ட்டு வணிகர், வடுகரோடும், வடவடுகரோடும் (மகத நாட்டோடும்) வாணிபம் புரிந்து வந்தனரென்பதற்கு, மாமூலனார் பாடலும், தொகை நூற்பாடலும் போதிய சான்றாகும் சந்திரகுப்த அரச னின் மந்திரி சாணக்கியன் எழுதியுள்ள அர்த்த சாஸ் திரத்தில் ''தமிழகத்திலிருந்து — இரத்தினங்கள் சேர நாட்டு வைடூரியங்கள், பாண்டி நாட்டு சால்வைகள், மதுரை மஸ்லின்கள் சந்திரகுப்தர் அரசவைக்கு அனுப்பப் பட்டன'' என்றிருப்பதிலிருந்து தென்னாட்டார் வட நாட்டாரோடு கொண்டிருந்த தொடர்பின் உயர்வை அறியலாம்.

காஞ்சியில் ஏற்பட்டிருந்த பல்லவ ஆட்சி, நாகரிகத் தில் சம்ஸ்கிருத தத்துவத்தைக் கொண்டதாகும். அக் கால பாண்டிய சேர மன்னர்களும், பூரண இந்து

கலாச்சாரத்திலேயே இரண்டறக் கலந்திருந்தனர். தென்னாட்டிலேற்பட்ட இம்மகத்தான மாற்றத்திற்கு காரணம் சாதவாஹனர்களாவர்.

மற்றும் "ஆரம்பகால முதற்கொண்டு தென்னாட்டினர் சிற்பக்கலைக்கு அடிப்படையானதொரு சிறந்த முறையை சிருஷ்டித்துக்கொண்டார்கள். யுவான்சுவாங் வந்தபோதே, மஹாபலிபுரம் இந்திய கலை ஞானத்தின் மிக உயரிய வேலைப்பாட்டிற்குச் சிறந்த தாயகமாகத் திகழ்ந்தது. கல்வெட்டு வேலைப்பாடுகளில் இவைகள் அக்கால இந்தியாவிலேயே முதன்மை வாய்ந்தன" என்கிறார் சரித்திர ஆசிரியர் கிரோவ்செட்.

மஹாபலிபுரம் காரண இடுகுறிப் பெயராகும். பல்லவ அரசர்களிலேயே சிறந்தவர் மாமல்லர்தான்.

அநேக பல்லவ அரசர்கள் கவிகளாகவும், கலா ரசிகர்களாகவும் இருந்திருக்கின்றனர். பல்லவர்களின் பேராதரவிலே மிகச் சிறந்த கவிஞர்களான பாரவி, தான்தீன் ஆகியவர்கள் ஒப்பற்று வாழ்ந்திருக்கிறார்கள். பல்லவர்கள் காலத்திலேயே (கி. பி. ஐந்தாவது நூற்றாண்டில்) இந்துமத சீர்திருத்த சண்டமாருதம் வீசத் தலைப்பட்டது. பக்தி மார்க்கத்திற்குச் சிறந்த சிவ விஷ்ணு சித்தாந்தங்கள் ஏற்பட்ட காலமும் இதுவேயாகும். ஒருகாலத்தில் ஜைனம் தென்னாட்டில் தழைத்தோங்கி இருந்ததால், பிற்காலத்தில் சைவ, வைஷ்ணவ மதாச்சாரியர்களால் ஹிந்து மதம் புதிய சீர்திருத்தத்தோடு நிலை நிறுத்தப்பட்டது. வேண்டுமானால் பல்லவ அரசர்களாலேயே தென்னாட்டில் ஆரியமும் திராவிடமும் ஒன்றாகக் கலந்துவிட்டன என சொல்லி விடலாம்.

பல்லவர்கள், கப்பற்படை, கடலாதிக்கம் கொண்டு விளங்கினர். பல்லவர்களைப் போலவே சாளுக்கியர்களும் கடற்படை வலிமை கொண்டுத் திகழ்ந்தனர். சேர நாட்டினரும் ஆதிகால முதற்கொண்டு வெளிநாட்டு வியாபாரம் செய்து வந்திருக்கின்றனர். முசிரி, கொல்லம் ஆகியவை மிகப்பழைய துறைமுகப்பட்டினங்கள்.

கி பி. 4, 5ம் நூற்றாண்டுகளில் கிருஷ்ணா—கோதவரி நதிகளுக்கு இடைப்பட்ட பிரதேசத்திலிருந்து பல்லவர்கள் திரைகடலோடத் தலைப்பட்டனர். பின் அவர்கள் ஆட்சி மேம்பட்ட போது கப்பலேறும் துறை முகங்கள் சற்று வடக்கே தள்ளிச் சென்றன. மஹாபலி புரம் பல்லவர்களின் துறைமுகங்களில் மூக்கியமானது.

அந்நாட்களில் மலாயா, சீனா முதலிய நாடுகளுக்கும் இந்தியாவுக்குமிடையே போக்குவரத்திலீடுபட்டிருந்த கப்பல்களுக்கு மலாகா ஜலசந்தி ஓர் சந்திப்பு இடமாயிற்று. இதனால் இந்திய வணிகர்கள் இந்த ஜலசந்தியின் இருமருங்கிலும் வாணிக ஸ்தாபனங்களை ஸ்தாபித்தனர். இவைகளில் சில காலப் போக்கில் பெரிய கப்பல் துறைகளாக மாறின. பின் இவையே இந்தியர்களின் குடியேற்ற இடங்களாயின. இவ்விதமான குடியேற்ற இடங்களில் மலாக்கா, சிங்கப்பூர், கிட்டா போன்றவை குறிப்பிடத்தக்கன. இந்தியர் இந்தோசீனா முதலிய இடங்களிலும் குடியேறி அரசுகளை அமைத்தனர். பரத கண்டத்தின் பழக்க வழக்கங்களும், பண்பாடும் அரசியல் நெறிகளும், மதக்கொள்கைகளும் திக்கெலாம் பரவின.

தென்னிந்தியாவிலிருந்து முதலில் வந்த குடியேற்றக்காரர்கள் பூஜாங் நதிகரையில் ஒரு நகரத்தை உண்டாக்கினர். இதைச் சூழ்ந்த பிரதேசங்களிலும்,, இவர்கள் குடியேறினர் இவ்விடங்களையெல்லாம் ஒன்று சேர்த்து இப்போதைய கிட்டா, பெர்லீஸ் ஆகிய பிரதேசங்களைக் கொண்ட ஒரு அகண்ட அரசை அமைந்தனர். இவ்வரசாங்க மக்கள் மஹாயன, ஹினாயன (பித்த) மதங்களைப் பின்பற்றி வந்தனர் என்று சில ஆண்டுகளுக்கு முன் கிட்டாவில் கண்டுபிடிக்கப்பட்ட பட்டையங்களிலிருந்து தெரிய வருகிறது.

கடல் கடந்து சென்ற மேற்சொன்ன கலாச்சாரம் தென்னிந்திய கலாச்சாரம் என்பது உண்மையே. எனினும் இம்மகத்தான கலாச்சார அபிவிருத்தியில் வடநாட்டார் பங்கு கொள்ளவில்லையென்று சொல்வதற்கில்லை. தென்னிந்திய நாகரிக சிறப்பில் வடஇந்திய நாகரிகம் பேரிடம் பெற்றிருக்கிறது. தென்னிந்தியர்கள் கடல் கடந்து கொண்டு சென்ற கலாச்சாரம் இந்தியாவின் பல பாகங்களிலிருந்து ஒருங்கு திரட்டப்பட்ட ஒரு கதம்பமேயாகும்.

அநேக நூற்றாண்டு காலம், பண்டை இந்தியர்கள் நிலையாகக் குடியேறாமல் இந்தோனேஷியா, அதன் அக்கம் பக்கத்திலுள்ள தீவுகள், இந்தோசீனா ஆகியவற்றின் மக்களோடு கடற்கரையோரங்களில் வியாபாரம் செய்வதோடு திருப்தி அடைந்தனர்.

கி. பி. 4-ம் நூற்றாண்டுக்கு சில ஆண்டுகள் முன்னர்தான், இந்தியர்களின் உண்மையானக் குடியேற்றம் நிலைபெறத் தொடங்கிற்று. அவர்கள் தாங்கள் குடியேறிய இடங்களில் தங்கள் தாயகத்திலுள்ளவற்றை ஒத்த சிற்றரசு தலைநகரங்களை நிர்மாணித்தனர். 5-வது நூற்றாண்டில் மலேயா முதலிய மேகாஸ் பள்ளத்தாக்குப் பிரதேசங்கள் ஹிந்து கலாச்சார பண்பாட்டைக் கொண்டிருந்தது. 12-வது நூற்றாண்டுவரை இங்கிருந்தவர்கள் இந்திய உலகத்தின் ஒரு பகுதியை சேர்ந்தவர்களாகவே தங்களைக் கருதினார்கள்.

மேற்சொன்ன அக்கால வியாபாரங்கள் பொது ஸ்தாபனங்களால் கூட்டு முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இதில் குறிப்பிடத்தக்கது மணிக்கிராமமும், நானாதேசியுமாகும். மணிக்கிராமம் அக்கால உலகத்தோடு எல்லா வகையான வியாபாரமும் நடத்திவந்தது. இப்பொழுதுள்ள வியாபார கம்பெனிகளுக்கு இருப்பது போன்ற விசேஷ பாதுகாப்பு சலுகைகளும், உரிமைகளும் அக்காலத்தில் அளிக்கப்பட்டிருந்தது, மைசூர் கல்வெட்டுகளில் நானாதேசிகன் என்போர் தரைமார்க்கமாகவும், கடல்மார்க்கமாகவும், ஆறு கண்டங்களை கடக்கக்கூடிய சிறந்த வீரதிரர்கள் எனவும், அவர்கள் யானை, குதிரைகள், வாசனை திரவியங்கள், மருந்து வகைகள் உள்பட விலையுயர்ந்த கற்கள் முதலானவற்றை மொத்தமாகவும், சில்லரையாயும் வியாபாரம் செய்தவர்கள் என்றும் காணப்படுகிறது. இவ்வாறே இந்தியாவின் வியாபாரமும் தொழிலும் மேல்நாடுகளில் பல நூற்றாண்டுகள் சீரும் சிறப்பும் பெற்று விளங்கின.

ஆறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கம்பூஜா (ஆங்கிலத்தில் கம்போடியா என்று அழைக்கப்படுகிறது) சம்பா (தற்கால சயாம்) ஸ்ரீ விஜயா (மலேயா) உள்பட மூன்று பெரிய ராஜ்யங்கள் ஏற்பட்டன.

1938-ம் வருடம் மகா இந்திய ஆராய்ச்சிக் குழுவைச் சேர்ந்த ஒருவரால் கிட்டா பிரதேசத்தில் விரிவான புதைப் பொருளாராய்ச்சி நடத்தப்பட்டது. அதன் பயனாக, மிகப்பண்டை காலத்திய புத்த ஸ்தூபமொன்றின் அடித்தள சின்னங்கள் வெளிக்கொணரப் பட்டன.

மலேயா தீபகற்பத்தில் மிகப்பழங்காலத்திய இந்திய நிர்மாணமாக அறியப்பட்டுள்ளது இந்த ஸ்தூபம்தான். தென்கிழக்காசியாவில் இதைவிடத் தொன்மையான இந்திய நிர்மாணமொன்றைக் காண்பது அரிதே.

கிட்டா சிகரத்திற்கு தெற்கே சில மைல் தொலைவில் மற்றொரு சிறிய ஸ்தூபத்தின் அடித்தளமும் கண்டுபிடிக்கப்பட்டது. இதனுடன் வெயிலிற் சுடப்பட்ட களிமண் ஏடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது. அதில் மஹாயனப் புத்தமதக் கொள்கைகள் பற்றிய வடமொழி சூத்திரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வெழுந்து கி. பி.6-ம் நூற்றாண்டின் தொடக்கத்தை சேர்ந்ததாகும். தென்கிழக்காசியாவில் மஹாயன புத்த மதசம்பந்தமாக வெளிப்பட்டுள்ள திட்டமான பழங்கால அடையாளம் இதுவாகத்தானிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

இப்பிரதேசத்தில் புராதன புத்தமதம் நிலைபெறத் தொடங்கியது. அது சம்பந்தமாக மற்றொரு அரிய ஆதாரமும் கிடைத்துள்ளது. அது வெண்கலத்தாலாகிய புத்த சிலையாகும். பேராவிலுள்ள ஈயச் சுரங்க மொன்றில் இது தோண்டி எடுக்கப்பட்டது. இது குப்தப்பாங்கில் அமைந்திருக்கிறது. இது ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இதே காலத்தைச் சேர்ந்த புத்த பீடமொன்றும் இதே சுரங்கத்தில் எடுக்கப்பட்டது. இவ்விரு பொருள்களும் இப்பொழுது பேரா கண்காட்சி சாலையிலிருக்கின்றன.

ஐராவதி கழிமுகத்திலும், பர்மாவின் மற்ற ஆற்று பள்ளத்தாக்குகளிலும் இந்திய குடியேற்றக்காரர்கள் தங்கி நிலை பெறத் தொடங்கி அங்கிருந்து மத்திய சயாமிற்குச் சென்றனர், மத்திய சயாமில் குப்த சிறப்பியல் புகழுடன் கூடிய புத்த நாகரிகம் விரைவில் வேரூன்றியது. சில வருடங்களுக்கு முன் மெக்கோலாங் பள்ளத்தாக்கில் ஒரு புராதன ஸ்தூபமும், புராதன நாகோர்பதாமா நகரிலிருந்து இரு உருவங்களும் தோண்டி எடுக்கப்பட்டன. இவை இப்போது பாங்காங் கண்காட்சி சாலையிலிருக்கின்றன.

முதல் ஸ்தூபம் புராதன குப்த சிற்ப வேலைப்பாடு அமைந்ததாய் இருக்கிறது. இரண்டாவது தற்கால ரீதியில் அமர்ந்து கொண்டு உபதேசம் செய்யும் புத்த வடிவமாயிருக்கிறது.

இவை இரண்டும் கி. பி. 6-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாயிருக்கின்றன. சயாமிற்கும் அதற்கு

அப்பாற்பட்ட நாடுகளுக்கும் இந்திய நாகரிகத்தைக் கொண்டு வந்த இந்தியர்களின் சமய, கலை உணர்ச்சி இவற்றில் பொங்கித் ததும்புகிறது.

குப்த காலத்திய இந்திய குடியேற்றக்காரர்களில் பலர், இந்திய கலாச்சாரத்தை மேற்கு ஜாவா, போர்னியோ, ஆகிய இடங்களுக்கு மட்டுமின்றி இந்தோ சீனாவுக்கும் கொண்டு சென்றனர்.

ஜாவா தனித்த தீபகற்பமாகவே திகழ்ந்தது. சைவ மதத்தைச் சேர்ந்த அரசர்கள் எட்டாம் நூற்றாண்டு முதல் மத்திய ஜாவாவில் அரசு செலுத்தி வந்தனர். அவர்கள் எழுதி வைத்த சாஸனங்கள் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் தென்னிந்திய லிபியை மூலாதாரமாகக் கொண்ட காவி லிபியிலேயே அவை எழுதப்பட்டுள்ளன.

போர்னியோ இந்திய பண்பாட்டிலிருந்து வழுக்கி விழுந்து விட்டது. கம்பூஜா ராஜ்யமோ யூனான் அரசாங்கத்தின் குடியரசாகியது. அந்த ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் ஸ்திரவர்மனாவார். ஆரம்ப கால சிலா சாசன ஆராய்ச்சிகளை கவனித்தால், கம்பூஜா ராஜ்யம் சமஸ்கிருத கலாச்சாரத்திற்கும் புராதன இந்தியப் பண்பாட்டிற்கும் பெருமித ஆக்கமும் ஆதரவும் தந்திருக்கிறது என்று தெரியவரும். கம்பூஜா அரசர்கள் லிங்கத்தை வணங்கிய சைவர்களாகவும், சமஸ்கிருதத்தை போற்றியவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். கம்பூஜாவில்

8-வது நூற்றாண்டு வரையில் பல்லவர்களின் செல்வாக்குக்கு பெரு மதிப்பு இருந்திருக்கிறது.

கி. பி. 6-ம் நூற்றாண்டு மத்தியிலிருந்து 8-ம் நூற்றாண்டு மத்தி வரையில் பல்லவர்களுடைய ஆட்சி உன்னத நிலையிலிருந்தபோது தங்களது கலாச்சாரததை மலாயா தீபகற்பத்திற்கும், அங்கிருந்து கம்பூஜா, ஜாவா முதலான நாடுகளுக்கும் கொண்டு சென்றார்கள்.

கம்பூஜாவின் சிற்பக்கலை பல்லவர்களின் பாரம்பரியத்தை யொட்டியது. யசோவர்மன் என்பவர் கம்போஜாவின் சிற்பக்கலைக்கு தலையானவராவர். இவரின் தந்தை மஹிபட்டிவர்மன், தென்னாட்டு இந்திரா தேவியை மணம் செய்து கொண்டவராவர்.

பல்லவ குடியேற்றக்காரர்கள் மலாயா தீபகற்பத்தின் மேற்குக் கடற்கரைக்கு வந்து சேர்ந்தபோது மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய விபரமெதுவும் சமீபத்திய புதை பொருளாராய்ச்சிக்கு முன் வெளிப்படவில்லை. கிட்டா சிகரத்தின் அடிவாரத்தைச் சுற்றி 1938-ம் வருடம் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. ஏனெனில் பல்லவ குடியேற்றக்காரர்கள் ஒரு நகரை நிர்மாணிப்பதற்கு இதுதான் ஏற்ற இடமாயிருக்கலாமென்று கருதப்பட்டது. முயற்சி நல்ல பலனை அளித்தது. கிட்டா சிகரத்திற்கு தெற்கே மேர்போக் கழிமுகத்தில் சென்று கலக்கும் பூஜாங் என்ற சிற்றாற்றின் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. 7, 8-ம் நூற்றாண்டில் லங்கா சுகம்

என்று அழைக்கப்படும் இந்திய நகரமொன்று இங்குதான் அமைந்திருந்தது. மலேஷியா நாடுகளில் சமீபத்தில் தோண்டி எடுக்கப்பட்ட பொருள்களினின்றும், பல்லவர்கள் மலாயாவில் பல ராஜ்யங்களை நிறுவியிருந்தன ரென்பது தெரிகிறது.

கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் சம்பா நிலை குலைந்து போனவுடன் கிட்டா தனி ராஜ்யமாயிற்று. கி.பி. 7, 8-ம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலிருந்து சைவர்கள் கிட்டாவில் குடியேறத் தொடங்கினர். அவர்கள் சுங்கை பூஜாங் நதிக்கரையில் பல சிவாலயங்கள் கட்டினர்.

சாம்ராஜ்யத்தின் பிரதான அரசர் ருத்ரவர்மனாவர். சம்பா அரசர்களில் பெரும்பாலோர் சைவர்கள். சிலர் வைஷ்ணவர்கள்; மற்றும் சிலர் அரியும் சிவனும் கலந்தவர்கள். கம்பூஜாவை போன்று சம்பாவும் சிறந்த ஹிந்து கலாச்சாரத்திற்கு ஆக்கமளித்திருக்கிறது. சம்பா அரசனான மூன்றாவது இந்திரவர்மன் ஹிந்து தத்துவ சாஸ்திரத்தின் ஆறு கலை ஞானங்களையும்,புத்த தத்துவ சாஸ்திரத்தையும், பானினியின் இலக்கியத்தையும், காசிகரின் உரை ஆராய்ச்சியினையும், சைவ ஆகம நூல்களையும் படித்தறிந்திருந்தார்.

சமஸ்கிருதமே அக்கால அரசாங்க மொழியாகும். சம்பாவின் ஏழாவது ஸ்ரீஜய இந்திரவர்மன் வேதங்களையும், தர்ம சாஸ்திரங்களையும் நன்கு படித்திருந்தார். சம்பாவும், கம்பூஜாவும், தென்னிந்தியாவிலேயே

இந்திய கலாச்சார பண்பாட்டை பெற்றிருந்தது. சம்பாவின் இந்திய நாகரிகம் சீனாவின் கலாச்சாரத்திற் குட்பட்ட அன்னாமின் அரசால், பல நூற்றாண்டு போராட்டத்திற்குப் பின் சிதைந்தொழிந்தது. என்றாலும், கம்போஜாவும், சம்பாவும் தென்னிந்திய பாரம் பரியத்திற்கு நன்றி செலுத்த வேண்டும்,

சுமத்ராவின் தலைநகரமான ஸ்ரீ விஜயாவில் சைலேந்திரர்கள் அரசு செலுத்தி வந்தனர். இவர்கள் ஏழாம் நூற்றாண்டில் அக்கம்பக்கத்திலிருந்த தீபகற் பங்களை வென்று மலக்காஜலசந்தி பகுதிகளில் ஆதிக் கம் செலுத்தி வந்தனர், எட்டாவது நூற்றாண்டில் இவர்கள் மலாயா தீபகற்பத்தையும் மத்திய ஜாவாவை யும் வசப்படுத்திக் கொண்டனர். இவர்கள் ஒரு காலை தங்கள் நாட்டின் மீதும், மற்றொன்றை கடல் கடந்த நாடுகளின் மீதும் ஊன்றி இரு பெருங் கடல்களின் ஆதிக்கத்தையும் 500 ஆண்டுகள் வரையில் கட்டியாண் டார்கள். இந்த சைலேந்திரர்களோடுதான் சோழ அரசர்கள் 'நூறாண்டு' போர் புரிந்திருக்கிறார்கள் மலாக்கா ஜலசந்தி பக்கமாக கடற்கரை வியாபாரத்தை சைலேந்திரர்கள் 12-வது நூற்றாண்டுவரை நடத்தி வந்தார்களென சீன ஆதாரங்களே ஒத்துக்கொள்கின்றன இந்தத் தீவுகளைச் சுற்றிலும், கிரேக்க (ஏஜியன்) கடற்முழுமையும் 700 ஆண்டுகளுக்கதிகமாக சைலேந் திரர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்த்னர். இந்த மன்னர் கள் மஹாயன புத்தமதத்தைச் சேர்ந்தவர்கள். இம் மன்னர்கள் எழுதி வைத்த சாஸனங்களின் எழுத் துக்கள், கிழக்கிந்தியாவில் வழக்கத்திலிருந்து வந்த

லிபியை ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது. கிழக்கிந்தியாவில் நளந்தா என்னும் இடமே மஹாயன புத்த மதத்தின் உறைவிடமாக விளங்கி வந்தது. ஒன்பதாவது நூற்றாண்டில் ஆட்சி செலுத்தி வந்த பாலபுத்ர தேவர் நளந்தாவில் புத்த விகாரமொன்று ஏற்படுத்தி இருக்கிறார் சைலேந்திர மன்னர்கள் ஆட்சியில் ஜாவா தீவு முழுவதிலும் புத்தமத ஞாபகச் சின்னங்கள் பல நிர்மாணிக்கப்பட்டன, போரோபுதூர் என்ற இடத்தில் கி, பி. 850-ம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட ஸ்தூபி அவற்றுள் தலைசிறந்ததாகும். இந்திய ஆலயங்கள், ஸ்தூபிகள் ஆகியவற்றின் சிற்ப கலையைப் பின்பற்றி அமைக்கப்பட்டிருக்கும் இந்த மாபெரும் ஸ்தூபி ஏழு மாடிகளைக் கொண்டிருக்கிறது ஒவ்வொரு மாடியிலும் புத்தமத சம்பந்தமான காட்சிகளும், விக்கிரகங்களும். சிற்பத்தில் வரிசையாக செதுக்கப்பட்டிருக்கின்றன அளவிலும், அலங்காரத்திலும் மிகச்சிறந்து விளங்கும் இந்த ஸ்தூபி உலகத்தின் மிகப்பிரபலமான புராதனக் கலைச் சின்னங்களில் ஒன்றாக விளங்குகிறது.

சைலேந்திர மன்னர்களுக்குப் பிறகு ஜாவாவில் ஆட்சி செலுத்திய பிரஹ்மணி குலத்தைச் சேர்ந்த மன்னர்கள் பராம்பனன் என்ற இடத்தில் அற்புதமான எட்டு ஆலயங்களை நிர்மானித்தனர். இவற்றில் நான்கு ஆலயங்கள் முறையே பிரம்மா, சிவன், விஷ்ணு, நந்தி ஆகிய தெய்வங்களின் வழிபாட்டுக்கென கட்டப்பட்டவைகளாகும். இக்கோவில்களின் பிரகாரங்களில் இராமாயணக் காட்சிகள் விஸ்தாரமாகவும் சிறப்பாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

பதின்மூன்றாவது நூற்றாண்டிலே புத்தமதக் கோட்பாடுகள் மிக பிரபலமடைந்திருந்தன. அதே சமயத்தில் ஜாவானிக் கலையும் பெரிதும் பாலினீஷியக் கலையையே பின்பற்றி வளர்ச்சிபெற ஆரம்பித்தது. ஜாவாவில் 4-வது நூற்றாண்டில் நுழைந்த இஸ்லாமிய மதம் கொஞ்சம் கொஞ்சமாக மற்றெல்லா மதங்களை யும் அகற்றிக்கொண்டே வந்து, இறுதியில் அத்தீவில் அழியா இடம் பெற்றுவிட்டது. ஆயினும் ஜாவா ஜனங்களின் பழக்க வழக்கங்களிலும், திருவிழாக்களி லும் ஹிந்து கலாச்சாரத் தத்துவங்களே இன்னமும், இன்றும் பிரதானமாகப் பிரதிபலித்து வருகின்றன.

சைலேந்திர மன்னர்கள் ஆட்சிகாலம் பற்றி சமீபத்திற் கண்டுபிடிக்கப்பட்ட தடயங்கள் இந்திய அரசினரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக் கின்றன. ஸுரகர்த்தா, யோக்கியகர்த்தா எல்லையில் பராம்பணன் என்ற இடத்திற்கருகில் ப்ளோவேஸான் என்ற ஸ்தலத்தில் பாழடைந்து கிடக்கும் புராதன ஆலயங்களிலிருந்து ஒரு தங்கப்பட்டயம் கண்டெடுக்கப் பட்டிருக்கிறது, டாக்டர் ஸிட்டர்க்ஷீம் என்ற டச்சு ஆராய்ச்சியாளர் 1940-ல் இந்த இடத்தில் ஆராய்ச்சி வேலையை ஆரம்பித்து வைத்தார். இந்தோனேஷியக் குடியரசின் புராதன கலைச்சின்ன ஆராய்ச்சிக்கழகத் தைச் சேர்ந்த அதிகாரியான மிஸுஹமீர் என்பவர் பின்பு இந்த ஆராய்ச்சி வேலையை தொடர்ந்து நடத் தினார். இந்தக் கோவிலில் நீண்ட சதுர வடிவத்தில் இரண்டு சன்னதிகளிருக்கின்றன, இந்த சன்னதி

களில் ஆதியில் புத்த விக்கிரங்கள் வைக்கப்பட்டிருந்தன. நீண்ட சதுரமான மத்திய மண்டபம் ஒன்றில் குறுக்கே சுவர் வைத்துத் தடுத்து, இந்த இரண்டு சன்னதிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மண்டபத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும், சிறிய கட்டிடங்களை கொண்ட மூன்று பிரகாரங்கள் இருக்கின்றன. மற்ற இரண்டு பிரகாரங்களிலும் ஸ்தூபிகள் கட்டப்பட்டிருக்கின்றன' ''ஸ்தூபிகள் உட்புற வரிசையில் ஒன்பதாம் நூற்றாண்டு மத்தியில் ஆட்சி செலுத்திய மன்னர் ரகேபிகாதனின் அஸ்தியும், வெளிப்புற வரிசையில் அம்மன்னருடைய பட்டமகிஷியின் அஸ்தியும் வைக்கப்பட்டிருந்ததாக ஆராய்ச்சியிலிருந்து தெரிய வருகின்றது'' என்று மிஸஃஹமீர் கூறுகிறார். காணிக்கையாக சமர்ப்பிக்கப்பட்ட கருநிற வித்துக்கள் முதலியவற்றைக்கொண்ட வெண்கல கலசமொன்று வெளிப் பிரகார்ரத்தில் சிதைந்துபோன இரண்டு ஸ்தூபிகளுக்கு மத்தியில் கண்டெடுக்கப்பட்டது. இந்தக் கலசம் கிடைத்த இடத்திற்கருகிலேயே 8 அங்குல நீளமும், 3, 4 அங்குல அகலமும் உள்ள தங்கப்பட்டயமொன்றும் கிடைத்தது. இந்தப் பட்டயத்தில் வடமொழியில் புத்தர் தர்மசக்கரம் ஒன்றின் வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியங்கள் எந்த மூலத்திலிருந்து எடுக்கப்பட்டவையென்று இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்தியாவிலும், நளந்தாவிலும். பிற இடங்களிலும் ஸ்தூபிகளின் உட்புறத்திலிருந்து புத்தமத

மந்திரங்களும், சக்கரங்களும் பொறிக்கப்பட்ட களிமண் அல்லது கல் பட்டயங்கள் கிடைத்திருக்கின்றன. புனிதமான மந்திரங்களை ஸ்தூபிக்குள் எழுதிவைத்து பூஜிப்பதென்பது நம்மவர்களின் வெகுநாளைய வழக்கம். புத்த பகவானே ஒரு சமயம் இதைப்பற்றி பிரஸ்தாபித்திருக்கிறார்.

சைலேந்திரர்கள் பௌத்த — இந்து தர்மத்தை பரப்ப பெரிதும் முயன்றார்கள். தென்னிந்தியாவில் நாகப்பட்டினத்தில் புத்த விகாரங்களை பிரதிஷ்டை செய்து கல்லூரிகளை நிறுவப் பாடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் சோழ, பாண்டிய மன்னர்களோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தார்கள். தென்னிந்திய படித்த மேதைகள், சைலேந்திரர்களின் தலை நகருக்கு அடிக்கடி சென்று வந்தார்கள். அங்கு தென்னிந்திய கிரந்த மொழியே ஆதிக்கம் வகித்துள்ளது. சுமத்ராவிலுள்ள குடும்பப் பெயர்கள் இன்றும் தென்னிந்திய, சோழ, பாண்டியர்களின் பெயர்களை ஒட்டியே திகழ்கின்றன.

சோழர்கள் பல்லவர்களின் வீழ்ச்சிக்குப்பின் 300 ஆண்டுகளுக்கதிகமாக காஞ்சியை ஆண்டார்கள். பத்தாவது நூற்றாண்டில் சோழர்கள் மகோன்னத நிலையை அடைந்திருக்கிறார்கள். இராஜராஜசோழருடைய ஆட்சி ஒரிசா வரையிலும், துங்கபத்ரா நதி வரையிலும் பரவியிருந்தது. சோழர்களுடைய அரசியல் நிர்வாகமுறை பல நூற்றாண்டுகள் வளர்ந்து இராஜராஜனுடைய காலத்தில் முழு வளர்ச்சி பெற்று சிறப்புற்றிருந்தது.

கிராமங்களில் பூரண சுயாட்சி நிலவியிருந்தது. அரச ரால் நியமிக்கப்பட்டிருந்த கவர்னர்களும், உத்தியோ கஸ்தர்களும் கிராம நிர்வாகத்தை மேற்பார்வை மாத் திரம் பார்த்து வந்தார்கள். இதுவே சோழஅரசர்களின் குறிப்பிடத்தக்க சிறப்பாகும். இராஜராஜசோழருக்குப் பின்னால் வந்த கங்கை கொண்ட சோழர் தன்னுடைய ஆட்சியை அதிகமாக விஸ்தரித்ததோடு, இலங்கையை யும் படையெடுத்து வென்றார். மற்றும் நிக்கோபார் தீவுகளையும், மலாயாவில் உள்ள கடாரத்தையும் வென் றார். சோழ அரசர்களில் குலோத்துங்கனும் பிரசித்திப் பெற்றவராவார், சோழர்களுடைய ஆட்சியானது 1500 ஆண்டிற்குள் வடக்கே ஹெய்சலர்களாலும், தெற்கே பாண்டியர்ாளாலும் ஆக்கிரமிக்கப்பட்டது.

சோழர்களின் 400 ஆண்டு ஆட்சியானது எல்லா துறைகளிலும் மேம்பாடுடையதாகும். இந்திய அரசர் களிலேயே சோழ அரசர்கள் தான் கடல்வலிமையை உணர்ந்து கடலாதிக்கம் செலுத்தியவராவர்.

சிற்பக்கலை மட்டுமல்ல, பொதுமக்கள் நன்மைக் கான காரியங்களைச் செய்வதிலும் சோழர்கள் மிகச் சிறந்தவராவர். 'குறிப்பாக காவேரி தண்ணீர் தேக் கத்தை சிருஷ்டிசெய்து ''சோழ வளநாடு சோறு டைத்து'' என்ற பெரும் புகழுக்கு என்றுமே இலக்காகி யுள்ளனர். சோழ மன்னர்கள் செய்துள்ள அபார நீர்ப்பாசன ஏற்பாடு இன்றைய இன்ஜீனியரிங் உலகையே அதிசயமடையச் செய்யும். இத்தன்மை வாய்ந்த சோழ அரசும் நூற்றாண்டு அரசாட்சிக்குப் பின் சிதறுண்டது.

சோழர்களுக்குப்பின் ஹெய்சலர்கள் தென்னாட்டில் ஆட்சி செய்யலானார்கள். ஹெய்சல அரசரான வீரபல்லாளர் பாண்டிய அரசிளங் குமரியை மணந்திருந்தார்.

இவர்களுக்குப் பின் பிரக்கியாதி பெற்ற தென்னாட்டு அரசர்கள் விஜயநகர அரசர்களாவர். இவர்களுடைய ஆட்சி முந்நூறு ஆண்டுகள் நடைபெற்றிருக்கிறது, இவர்களுடைய ஆட்சியின் வன்மையால் மொஹலாயர்கள் தென்னாட்டில் பிரவேசிக்க முடியாதவாறு தடுக்கப்பட்டனர்.

இந்து கலாச்சாரத்தைக் காப்பாற்றுவதற்காகவே, முதலாவது, இரண்டாவது தேவராயர்கள், பிரோஜ், அஹமதுஷா, போன்றவர்களோடு வீரப்போர் புரிந்திருக்கிறார்கள். அக்கால விஜயநகரச் சிறப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

''விஜய நகரம் மிக செங்குத்தான மலையருகே நிர்மாணிக்கப்பட்டிருந்தது. நகரத்தின் விஸ்தீரணம் 60 சதுர மைல்களாகும். இன்னும் அதனுடைய சுவர்கள் மலைவரையில் செல்வதால் நகரின் பரப்பு அதிகமாகும். அந்நகரத்தில் என்றும் என்பது லக்ஷம் பேர் ஆயுதபாணிகளாகவே இருந்தார்கள்'' என்று நிக்லா கண்ட் கூறுகிறார்.

மற்றும் ''விஜய நகரத்தைப் போன்றதொரு நகரத்தை இவ்வுலகில் யாருமே பார்த்திருக்கமுடியாது.

அந் நகரம் எந்த எதிரிகளும் ஜெயிக்க முடியாதவாறு ஏழு அகழிகளையும், ஏழு கோட்டை மதில்களையும் கொண்டதாகும்.'' என்று பெர்சியாவின் தூதராக மத்திய கிழக்கு நாடுகளையெல்லாம், சுற்றிப்பார்த்துவிட்டு விஜயநகரம் வந்து சேர்ந்த அப்துல் ரஜாக் என்பவர் கூறுகிறார்.

விஜய நகர அரசர்களில் மிகப் பிரக்கியாதி பெற்றவர் ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் (1509-1550). இவர் ஒரிஸாவை வென்று கட்டாக் வரை ஆட்சி செலுத்தினார். ஸ்ரீ கிருஷ்ண தேவராயர், அசோகர், சந்திரகுப்தர், விக்ரமாதித்யர், ஹர்ஷர், போஜன் போன்ற அரசர்களின் பாரம்பரியத்தில் வைத்து மதிப்பிட வேண்டியவர். இவர் போர்சுக்கீஸ்-பெர்ஸியா போன்ற வெளி நாடுகளோடு நேச உறவும், தொடர்பும் வைத்திருந்தார்.

ஸ்ரீ கிருஷ்ண தேவராயருக்குப் பிறகு 1565-ம் ஆண்டில் தலைக்கோட்டை யுத்தத்தோடு விஜயநகர ராஜ்யம் அழிந்தது என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லும், கூற்று சரியல்ல. ஏனெனில், விஜயநகர வம்சத்திற்குப் பிறகும், விஜயநகர மக்கள் தேசிய உணர்ச்சி கொண்டு தென்னாட்டைக் காப்பாற்ற போராடியிருக்கிறார்கள். தலைக்கோட்டை யுத்தத்திற்குப் பிறகும் விஜய நகரத்தின் ஐம்பது ஜில்லாக்கள், இந்து கலாச்சாரத்திற்குத் தாயகமாகவே இருந்து வந்திருக்கிறது.

விஜய நகர அரசர்கள் சமஸ்கிருதத்தையும். தெலுங்கையும், கன்னடத்தையும் போற்றி வளர்த்தார்

கள், ஆதாரபூர்வமான வேதத்திக்கு கடைசி வியாக்யானங்களை விஜயநகர மந்திரி சயானர் இயற்றியிருக்கிறார். இன்றும் நீதி சாஸ்திரத்திற்கு பெயர் பெற்றதென்று சொல்லப்படுகிற மாத்வாச்சாரியாரின் பராசரிய மாதவியா விஜயநகர அரசர்கள் காலத்தில் ஏற்பட்டதாகும். மாத்வாச்சாரியார் புக்கரின் மந்திரியென்று அறிகிறோம்.

விஜயநகர அரசிகளும், இந்து கலா ஞானத்திற்கு ்பெருதவி செய்திருக்கிறார்கள். அரசி கங்காதேவி எழுதியுள்ள ''மதுரை விஜயமும்'', திருமலம்பாதேவி எழுதியுள்ள ''வரதாம்பிகா பரிணயமும்'' குறிப்பிட வேண்டிய சிறந்த நூல்களாகும். பெண்கள் கவித்துவம் பெற்றிருந்த காலம் அது.

ஸ்ரீ கிருஷ்ண தேவராயரே மகா வித்வானாவார். அவர் எழுதியுள்ள ''அமுக்தமலயதே'' என்ற தெலுங்கு நூல பெரிய காவியமாகும். அவரது பேராதரவுக்கு இலக்கான பெத்தண்ணா தெலுங்கு மொழிக்கே தந்தையாவார். இந்தியாவின் பழய பாரம்பர்ய அரசர்களைப் போலவே விஜயநகர அரசர்களும் நடந்து கொண்டபர்கள். மதுரையில் உள்ள மதனகோபாலசாமி கோவிலின் கல்வெட்டில் ''விஜயநகர அரசர் சாளுக்கியர்களின் மாணிக்கம்'' என குறிக்கப்பட்டிருக்கிறது.

மஹா பாரதகால தலைநகரான அஸ்தினாபுரத்தின் பிரதி பிம்பமாகவே விஜயநகர தலைநகரான ''ஹம்பி அஸ்தினாபுரம்'' அமைக்கப்பட்டது.

'தென்னிந்தியா விஜயநகர அரசர்களால் அழகும், செல்வமும், வன்மையும், வர்த்தகமும் நிறைந்த நாடாக திகழ்ந்தது' என்று போர்ச்சுகீஸிய முஸ்லீம் எழுத்தார்களே சான்று கூறுகின்றார்கள். அக்காலத்தில் சுமார் 300 மைல் நாட்டுப்பட்டினங்களோடு வியாபாரம் நடந்தேறி வந்திருக்கிறது. மற்றும் போர்ச்சுகீஸிய வர்த்தகத்திற்கு விஜயநகர அரசு ஒரு காரணமாகும்,

தென்னிந்திய வடஇந்திய தொடர்பிற்கு சாதவாஹணர்கள், வாகடர்கள். சாளுக்கியர்களைப் போல் பாமினி சுல்தான்களும் பேருதவி புரிந்துள்ளனர். பாமினி மன்னர்கள் முகம்மதிய மதப்பிடிப்பும் பற்றுமுடையோராயிருந்த போதிலும் இந்துக்களிடத்தில் பெரும் மதிப்பும், அன்பும் கொண்டிருந்தனர். பொது மக்களுக்கான பெரிய நீர்ப்பாசன ஏற்பாடுகளை செய்தனர். கலையும், கல்வியும். அபிவிருத்தி அடைந்தனர், பாமினி மந்திரி மகமது கவான் மூவாயிரத்துக்கதிகமான வால்யூம்களைக் கொண்ட மிகச்சிறந்த கல்லூரி ஒன்றை அமைத்திருந்தார். பாமினி மன்னர்கள் காலத்தில் ஜைனமும், இந்து மதமும் தழைத்தோங்கத் தவறவில்லை. மக்கள் படையெடுப்பு பயமின்றி வாழ்ந்த காலங்களில் சுல்தான்கள் காலமும் ஒன்று.

# 3. இந்தியாவில் இஸ்லாம்.

இந்திய இஸ்லாமிய வரலாற்றைக் குறித்து தெரிந்து கொள்வதற்குமுன் இஸ்லாத்தின் வரலாற்றைப் பற்றியும் பொதுவாகவாவது ஆராய்வது பொருந்தும்.

ஒரு காலத்தில் சிறப்புற்றோங்கிய ரோம ஏகாதிபத்தியம் எவ்வளவு பரந்திருந்ததோ அதைவிட பரந்த ஒரு பிரதேசத்தை அராபிய 'அநாகரிக' மக்கள் மகமது நபிதோன்றிய ஒரு நூற்றாண்டுக்குள் தங்கள் கைவசப்படுத்திக் கொண்டு விட்டார்கள். இது சரித்திரத்திலேயே காணக்கிடைக்காத விசேஷமாகும்.

காட்டுமிராண்டித்தனத்தில் மூழ்கியிருந்த மக்கள் பலாத்கார வெறியிலேயே காலங்கழித்து வந்த மக்கள் சமாதான ஆட்சி முறையை, சத்தியத்தை, சாந்தியை, ஸ்தாபிக்க முற்பட்டு விட்டார்களென்றால் இதைவிட ஆச்சரியப்படக்கூடிய விஷயம் வேறென்ன இருக்க முடியும்?

''மத்தியகால நூற்றாண்டில் அராபியர்களும், அரபி பேசும் மக்களும்; மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு செய்துள்ள சேவையை வேறு யாரும் செய்யவில்லை'' என்று சரித்திர ஆசிரியர் பி. கே. ஹிட்டி கூறுகிறார். மற்றும் ''ஒன்பதாவது நூற்றாண்டிலிருந்து பன்னிரண்டாவது நூற்றாண்டுவரை அராபிய பாஷை வாயிலாக அநேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய நூல்கள்.

மதபோதனைகள். வான நூல்கள், பூகோள சாஸ்திரங்கள் முதலியன அபரிமிதமாக தோன்றின'' என அவர் கூறுகிறார்.

செமிடிக் வர்க்கத்தாரிலேயே அராபியர்கள் மிக்க புத்திக் கூர்மையுள்ளவர்கள். அவர்கள் அராபிய பாலை வனத்தைக் கடந்து சுமேர், சர்ல்தே. அஸ்ரியா ஆகிய அரசுகளை சிருஷ்டித்தார்கள். மகமதுநபி இறந்த ஐம்பது வருஷத்திற்குள், இவர்கள் தங்களுடைய அரசியலதிகாரத்தை மொராக்காவிலிருந்து சிந்துவரை ஸ்தாபித்து விட்டார்கள். திரமிக்க வீரர்களை சிருஷ்டித்த தேசங்களில் அராபியாவும் ஒன்றாகி விட்டது.

முரட்டு குணமும், குருட்டுத்தனமும் மிக்க அராபிய மக்களை உயரிய வாழ்வுக்கு உரியவர்களாக செய்தது மகமதி நபியேயாகும் அவர் குடியையும், சூதையும் தொலைத்தார். பேதத்தையும், அஞ்ஞானத்தையும் அகற்றினார். பெண்களுக்கு உயர்வும், அந்தஸ்த்தும் அளித்தார். எல்லாவற்லையும் விட, அவரை பிரதானமாக பின்பற்றியவர்களை நாகரீகம் படைத்தவர்களாகவும், சகிப்புத்தன்மை யுள்ளவர்களாகவும் விளங்கச் செய்தார்.

மகமது நபிக்குப்பின் தோன்றிய நான்கு கலிபாக்களும் மிகச் சிறந்தவர்களாவர். இருபத்தைந்து ஆண்டுகளுக்குள்ளாக அபூபக்கர், உமர், உஸ்மான், அலி ஆகியவர்கள் இஸ்லாத்தின் உயரிய தன்மையை கிழக்கே சிந்து நதி தீரம் வகையிலும், மேற்கே அட்லாஸ் மலைப்பிரதேசம் வரையிலும் பரப்பினார்கள்.

"நீங்கள் யாரையும் சின்னாபின்னமாக்காதீர்கள்; பெண்களையும் குழந்தைகளையும் முதியோர்களையும் கொலை செய்யாதீர்கள்; பேரீச்சை மரங்களுக்கு தீ வைத்தோ அன்றி நாசமாக்கியோ விடாதீர்கள்; மனிதர்களுக்கோ அல்லது பிராணிகளுக்கோ ஆகாரமாகக் கூடிய எந்த தாவரங்களையும் அழிக்காதீர்கள்; ஆடு, மாடு, ஒட்டகங்களை கொலை செய்யாதீர்கள்; நீங்கள் இப்பொழுது ஆண்டவன் பெயரால் முன்னேறிச் செல்லுங்கள்; அவன் உங்களை கஷ்ட நஷ்டங்களினின்றும் ஆயுத் ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றுவானாக!" என்று அபூபக்கர் அவர்கள் தன்னுடைய சைன்யத்தை சிரியாமீது படையெடுக்க அனுப்பிய பொழுது உபதேசித்தார். இவ் உபதேசங்கள் கலிபாக்களின் மகோன்னத மனோநிலையை காட்டுகின்றன.

அலெக்ஸாண்டர், ஸீஸர், நெப்போலியன் ஆகியவர்களோடு ஒப்பு நோக்கத்தக்க வீரர்களாகத் திகழ்ந்த கலீத் இபன் அல் வாலித், அமிர் இப்ன் அல் அஸ் ஆகிய இருபெரும் தளகர்த்தர்களே ஆரம்பகால கலிபாக்களின் பெருமித வெற்றிக்கு மூலகாரணமாவர்.

தாம் மேற்கொண்ட போர் அனைத்திலும் வெற்றி கொண்டு ஈடு இணையற்ற வீரராகத் திகழ்ந்த கலீத், "தன்னிடம் பணிந்து வந்தால் கௌரவமான முறையில் நடந்து கொள்வதாகவும்; அவர்களின் உயிருக்கும், உடமைக்கும், ஆலயங்களுக்கும் பாதுகாப்பளிப்பதாகவும்,

மற்றும் நாடு நகரங்களை நாசமாக்காமலும், எந்த முஸ்லீமும் பிறர் இடங்களை ஆக்ரமிக்காமல் பார்த்துக் கொள்வதாகவும்'' தம்மை எதிர்த்து போரிட்ட ''டமாஸ் கஸ்'' மக்களுக்கு வாக்கனித்தார.

முதலாவது கலீபாவான அபூபக்கர், அராபியா, மெசபட்டோமியா, சிரியா ஆகிய பிரதேசங்களைக் கைப் பற்றினார். இரண்டாவது கலீபாவான உமர், பாலஸ் தீனம், பெர்னீஷியா, ஈஜிப்து, பெர்ஸியா ஆகிய தேசங் களை ஜெயித்தார். இஸ்லாத்தின் உயரிய தத்துவங்கள் கிழக்கே சிந்துநதி தொடங்கி, மேற்கே நுமீதியா பாலை வனம் வரை பரவியிருந்தது.

மூன்றாவது கலீபாவான உத்மான், வடக்கே ஆக்ஸஸ் நதிதீரத்திலிருந்து மேற்கே அட்லாண்டிக்மகா சமுத்திரம் வரையிலும் அராபிய நாகரீக கலாச்சாரத் தைப் பரப்பினார். அராபிய பாலைவன மக்கள், கடற் படையின் வலிமையுணர்ந்து திரைகடலோடினார்கள். கடைசி கலிபா அலி, உள்நாட்டில் குழப்பங்களை தவிர்க் கவும், அமைதி உண்டாக்கவும் பெரும் பிரையாசைப் பட்டார்.

கலிபாக்களுடைய ஆட்சி காலத்தில் நிலத்தில் வேலைசெய்பவர்களுக்கே நிலம் சொந்தமாயிருந்தது. அராபிய ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த பிரதேசங்களில் யாரும் நிலங்களை வாங்கவோ அன்றி வைத்துக் கொள் ளவோ கூடாது.

முஸ்லீம் அல்லாத பிற மதஸ்தர்களைக் காப்பாற்றுவது புனித மதக்கடமை என்பது நபிகள் காலத்திலிருந்தே அராபியர்களால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மகமது நபி அவர்கள் முஸ்லீம் அல்லாதவர்களை தொந்திரவு செய்பவர் யாரானாலும் அவர்கள் தன்னைத் தொந்திரவு செய்கிறவராவர்; முஸ்லீமல்லாதவர்களுக்கு யாரேனும் கேடு செய்து கஷ்டத்தை கொடுப்பார்களானால் அவர்களுக்காக தான் பொறுப்பேற்றுக் கொள்வேன் என்று கூறியிருப்பதிலிருந்து மேற்கண்ட உண்மை புலனாகும்.

நிற்க முதலாவது உமர் உத்மனிடம் ''முஸ்லீமல்லாதவர்களை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்களுடையது; அவர்களுடைய விரோதிகளிடமிருந்து அவர்களைக் காப்பாற்றவேண்டியது உங்களின் கடமை; அவர்களால் தாங்க முடியாத அளவுக்கு எந்த சிரமத்தையோ, சஷ்டத்தையோ கொடுக்காதீர்கள்'' என்ற கட்டளையிலிருந்தும் உண்மையை அறியலாம்.

வீரரான கலீத் பின் வாலீத் அவர்கள் கிருஸ்தவர்களுடைய (முஸ்லீமல்லாதாரின்) உரிமை, உயிர், உடமை ஆகியவற்றிற்குரிய பாதுகாப்பும், பந்தோபஸ்தும் கொடுத்தார். மற்றும் கிருஸ்தவர்கள் சிலுவைகளைத் தூக்கிக்கொண்டு ஊர்வலம் வரவும், கண்டாமணி ஓசையை முழக்கவும் மத சம்பிரதாயத்தை யொட்டி அனுமதித்திருந்தார். கிருஸ்தவர், யூதர் ஆகிய பிறமத மக்களிடம் சகிப்பு மனப்பாண்மையுடன் நடந்தார்.

நபிகள் நாயகம் "பலாத்காரமாய் மதமாற்றம் செய்யக்கூடாது" என்று மிக்க வன்மையாக தடுத்திருக்கிறார்கள். "பலாத்காரமாய் மதம் மாற்றப் பட்டவன் ஓர் உண்மை முஸ்லீமென ஒப்பமுடியாது" என இஸ்லாத்தின் உயர்ந்த நீதிபதி, அல்காஜிவதீல் தீர்ப்பு கூறி இருக்கிறார். பெர்சியாவின் ஷா அப்பால் (1642-67) அப்பொழுது மதம் மாறியிருந்த யூத முஸ்லீம்களை தங்கள் முன்னேர்களின் புராதன யூத மதத்திற்கே சென்று சந்தோஷமாய் வாழ அனுமதியளித்தார். மேற்சொன்னவைகளிலிருந்து இஸ்லாமிய மதம், பொதுவாக பலாத்காரத்தைக் கொண்டு பரப்பபட்ட தன்று என்பது விளங்கும். ஆனால் முஸ்லீம் அரசியல் ஆட்சியின் விஸ்தரிப்புக்கு பலாத்காரம் உபயோகிக்கப் பட்டதென்பது மட்டும் உண்மையே.

கலிபாக்கள் தங்களுடைய ஆட்சிக்குட்பட்ட மக்களை மதமாற்றத்திற்குக் கொண்டுவர விரும்பவில்லை. அவர்களின் ஆட்சிக்குட்பட்ட பெர்சியா, ஈஜிப்த் ஸ்பெயின், சிரியாவாகிய நாடுகளின் கிருஸ்தவர்கள் இஸ்லாமிய மதத்தை வரவேற்றார்களென்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். இஸ்லாத்தினுடைய சகிப்புத்தன்மையையும், மத நடுநிலைமையையும் கிருஸ்தவர்களே போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

அக்கால கிருஸ்தவ மதப்பிரிவினர்களுக்கிடையேயிருந்த மதக்கொடுமைகள் அளவு கடந்தன. அற்ப காரியங்களுக்காக கிருஸ்தவர்களே, கிருஸ்தவர்களை

சுட்டெறிந்தனர். ஆனால் கலிபா உமர் போன்றவர்கள் கிருஸ்தவர்களுக்குக் காட்டிய பரிவு பாராட்டற்குரியது. டமாஸ்கஸ் நாட்டின் செயின்ட் ஜான் தேவாலயத்தில் கிருஸ்தவர்களும். முஸ்லீம்களும் தங்கள் தங்கள் தொழுகையை தனித்தனியே நடத்தி வந்தனர். கலிபா முவய்யா அவர்கள் கிருஸ்தவ சமுதாயத்தினரின் வேண்டுகோளுக்காக எடஸாவில் ஓர் பெரிய மாதா கோவிலை கட்டிமுடித்துதவினார்.

இஸ்லாமிய ஆட்சியில் இஸ்லாமல்லாதவர்கள் 'ஜசியா' என்ற தலைவரியை கொடுத்து வந்தனர். இதைப்பற்றி தவறான கருத்து நாட்டில் நில்வி வருகிறது.

'ஜசியா' போன்ற வரி, மேற்கே ரோம ஏகாதி பத்தியத்திலும், கிழக்கே ஸஸ்ஸானிய ஏகாதிபத்தியத் திலும் அதற்குமுன் இருந்தது. அதை அனுசரித்து மகமது நபியும் அதனைக் கையாண்டார்.

முஸ்லீம்களுக்கு 'ஜசியா' என்ற வரி இல்லை யென்பது வாஸ்தவமே, என்றாலும் அவர்கள் 'ஜக்காத்' என்ற ஏழைவரி செலுத்தினர். அதாவது அவர்களின் மொத்த வருமானத்தில் 5 சதவிகிதமாகும். மற்றும் அவர்கள் ராணுவ சேவைக்கு எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டும் ஆனால் முஸ்லீமல்லாதவர்கள் ராணு வத்திற்கு போக கடமைப்பட்டவர்களல்ல.

'ஜசியா' வரி, வரிசெலுத்தக்கூடிய ஆண்களிட மிருந்து மட்டுமே வசூல் செய்யப்பட்டது. பெண்கள்,

வயோதிகர்கள், குழந்தைகள், ஏழைகள், குருடர்கள், முடவர்கள் போன்ற இயலாதவர்கள் இந்த வரி செலுத்த வேண்டியதில்லை. இந்த வரி வசூல் செய்பவர்கள் மிகத் தாராளத் தன்மையுடையவர்களாக நியமிக்கப் பட்டனர். அவர்கள் தாக்ஷண்ய சிந்தையோடு வரி வசூலிக்க அனுமதிக்கப்பட்டனர். அதோடு இவ்வரி செலுத் தாதவர்களுக்கு கண்டன தண்டனை இல்லாமலிருந்தது. இருந்தபோதிலும் எல்லா முஸ்லீம்களுடைய ஆட்சியிலும் ஒரேமாதிரி தாராள மனப்பான்மையுடன் வரி வசூல் செய்யப்பட்டதென்று சொல்ல முடியாது. உமர் பின் அப்துல் அஜீஜ் (717-20), உமர் முத்த வக்கீல் (847-61) போன்றவர்கள் கிருஸ்தவர்களையும், மாஜியன்களையும் வரி வசூல் செய்வதில் நிர்பந்தித்தார் களென்பது உண்மையே. ஆனால் பொதுவாக தாராள மனப்பான்மையும், சகிப்புத்தன்மையுமே இஸ்லாமியக் கோட்பாடாக இருந்தன.

இந்த 'ஜசியா' வரியை ஈஜிப்து முஸ்லீம்களும் கொடுத்து வந்தனர். ஏனெனில் அவர்கள் தங்களுக்கு ராணுவ சேவையே வேண்டாமென்று கூறியிருந்தனர்.

கலீபா ஹாரூன் அல் ரஷீது (786-809) காலத்தில் ஒரு பணக்காரன் வருஷத்திற்கு 48 திர்ஹம்களையும், நடுத்தரமானவர் 24 திர்ஹம்களையும் தொழிலாளர்கள் 12 திர்ஹம்களையும் வரியாக செலுத்தினர். இவ்வரி பொருளாகவோ அன்றி பண்டமாகவோ செலுத்தப்பட்டது.

''நாங்கள் உங்களைக் காப்பாற்றுவதற்காக 'ஜசியா' என்ற தலைவரி செலுத்தவேண்டும். உங்களை நாங் கள் காப்பாற்றத் தவறினால் 'ஜசியா' வரி செலுத்த வேண்டியதில்லை'' என்று வீரர் கலீத் கூறியிருப்பதின் உண்மை பின் கண்ட சம்பவத்தால் தெரிகிறது.

கலிபா உமர் காலத்தில் சிரியா மக்களிடம் 'ஜசியா' வரி திருப்பிக் கொடுக்கப்பட்டது. ஏனெனில் சிரியா மீது படையெடுத்த பைஸண்டைன் சக்கரவர்த்தியின் முஸ்லீம் சேனையால் ஹராகிலிட்ஸை எதிர்த்து நிற்க முடியாததால்தான்.

இஸ்லாமிய உயர்வை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், நபிகள் நாயகம் அவர்களின் சொந்த வாழ்க்கையையும், அவர் சகாக்களின் வாழ்க்கையையும் அறிந்துக் கொள்ளுதலே நலம்.

உமர் கலிபாக இருந்த காலத்தில் அரபு நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. ஏழை எளிய மக்களின் பசிப்பிணியைத் தீர்க்க தமது மேற்பார்வையிலிருந்த 'பைத்துல் மால்' என்னும் பொதுஜன நிதியிலிருந்து ஏழை மக்களுக்கு வேண்டிய உணவுப் பண்டங்களை தாராளமாகக் கொடுக்க அப்பொழுது உத்திரவிட் டார்.

இராக்காலங்களில் ஏழைமக்களுடைய வீடுகளுக் குச் சென்று, பசியால் வாடுபவர்களுக்கு ரொட்டி சுடு வதற்கு வேண்டிய மாவைக் கொடுத்து, அவசியமான போது அங்குள்ளவர்களுக்கு ரொட்டியை சுட்டு

பக்குவபடுத்திக் கொடுத்தார். இரவில் நகர்வலம் வந்து ஆங்காங்குள்ள உண்மைநிலையை அறிந்து வேண்டுவன செய்தார்.

ஓர் இரவு ஒரு ஏழை விதவை தன் குழந்கைளுக்கு ஆகாரமில்லாது பானையில் வெறும் தண்ணீரை விட்டு கொதிக்க வைத்துக் கொண்டு குழந்தைகளுக்கு ''பொறுங்கள்; பொறுங்கள்'' என்று சமாதானம் செய்து கொண்டிருந்த பரிதாபக் காட்சியைக் கண்டார். உமர் உடனே தானே ஓடோடியும் சென்று, ஒரு மூட்டை மாவையும், பல தின்பண்டங்களையும், தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு வந்து. அவ்விதவைக்கு உதவினார். இக்கொடிய சம்பவத்திற்கு மறுநாளே நிர்க்கதியாயிருக்கும் பெண்களின் குடும்பங்களைக் கணக்கிட்டு அவர்களின் வாழ்நாளைக்கு வேண்டிய உதவியை ''பைத்துல் மாலி'' விருந்து கொடுத்துதவ திட்டமிட்டார். என்னே உமர் அலியின் சிறந்த செயல்கள்.

நபிகள் நாயகம் அவர்கள் அரசாங்கத்திற்கும், மதத்திற்கும் தலைவராயிருந்தார் அவ்விதமிருந்தும் அவர் எளிய வாழ்வை மேற்கொண்டார். தன் வீடு வாசல்களை தானே பெருக்கிக்கொண்டார். தானே சமைத்தார். பால் கறந்தார். துணிமணிகளைத் தைத்தார். சப்பாத்துகளை சரிபார்த்துக்கொண்டார். அனேக சந்தர்ப்பங்களில், அவருடைய ஆகாரம், பேரிச்சப்பழமும் தண்ணீருமாயிருந்தன. சாதாரணமாய் அவர் பார்லி ரொட்டியும், மலிவாகக் கிடைத்த பாலும், தேனும் உண்டு களித்தார். திராக்ஷ ரஸ பானங்களை அவர் அறவே வெறுத்தார்,

நிற்க முதலாவது கலீபாவான அபூபக்கர் அவர்கள் மாதம் மூன்று தங்க நாணயங்களை சம்பளமாகக் கொண்டு, தனக்கென்று ஒரு ஒட்டகத்தையும், ஒரு வேலைக்காரனையும் அமர்த்திக் கொண்டார். சர்க்கார் பணத்திலிருந்து வெள்ளிக்கிழமை தோறும் ஏழைகளுக்கு தானம் கொடுத்தார். அவர் இறந்தபோது ஒரு கிழிந்த அங்கியும், ஐந்து தங்க நாணயங்களுமேதான் ஆஸ்தியாக இருந்தது.

மற்றும் இரண்டாவது கலிபாவான உமர், ஏழ்மைக்கும் எளிமைக்கும் எடுத்துக்காட்டாக திகழ்ந்தார். ஆசியாவின் விலையுயர்ந்த தங்கச்செல்வங்களை கண்டதுமே அவர் கண்ணீர் விட்டுக் கதறினார் தன்னைப் பின்பற்றுகிறவர்கள் எங்கு தங்கத்தால் மயக்கப்பட்டு விடுவார்களோ என்று மனம் வெதும்பினார். அவருடைய ஆசாரம் சாதாரண பார்லி, ரொட்டி, பேரீட்சை பழம், சுத்தத்தண்ணீர் அவ்வளவுதான். அவர் பத்து, பன்னிரண்டு ஒட்டுப்போட்ட அங்கியை அணிந்து தனது புனிதமான பிரசாரத்தை செவ்வனே செய்து வந்தார். ஒருநாள் பெர்சிய சத்ரபதி, உமர் அவர்களை காணிக்கையோடு காணவந்தபோது, உமர் மதினா பள்ளியின் வாசற்படிகளில் உறங்கும் ஏழை எளிய பிச்சைக்காரர்களோடு ஒருவராய் அயர்ந்து தூங்கினார்.

அது போகட்டும். நபிகள் மருமகனார் அலி அவர்களைப்பற்றிப் பார்ப்போம். அவர் நன்கு படித்த நல்ல மேதை. அவரது வீரதீர பராக்கிரமங்கள், பரோபகாரச்

செயல்கள் ஆகியவற்றை இன்றும் ''கெய்ரோ கடைத் தெரு முதல் டில்லி கடைத்தெருவரை'' பாடகர்கள் புகழ்ந்து பாடுவதைக் கேட்கலாம். ஒரு சமயம் ஏதோ ஒரு நாட்டின்மீது படையெடுத்து, வெற்றி கொண்டு வீடு திரும்பி வந்தார் அலி. அன்று இரவு மகமது நபி அவர்களுக்கு உண்ண உணவில்லை. ஆனதால், நபிகள் தன் சகாக்களோடு, வெற்றி வீரராக, யுத்த காணிக்கை களோடு வந்திருக்கும் தனது மருமகனின் இல்லத் திற்கு ஏகினார். தனது அருமை மகள் பாத்திமாவை அழைத்தார். பாத்திமா உள்ளிருந்து கொண்டே ''தாங்கள் மட்டும் வந்திருக்கிறீர்களா? அல்லது மற்ற வர்களுடன் சேர்ந்து வந்திருக்கிறீர்களா? மற்றவர் களோடு வந்திருந்தால், நான் தங்களை வெளியில் வந்து பார்த்தல் இயலாதே! நான் தங்களைத்தவிர மற்றவர் களுக்கு முன் வரத்தக்க ஆடை அணிந்திருக்கவில்லையே என்று தன் தந்தையிடம் கூறினாள். ''பரவாயில்லை! சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்'' என்றார் நபிகள்நாயகம் அதற்கு பாத்திமா ''என்னுடைய பச்சிளங் குழந் தைக்கே இன்று பாலில்லை. அலி அவர்கள் யுத்த காணிக்கையாகக் கொண்டு வந்த அத்தனை அரிய செல் வங்களையும் அவ்விடமே பக்கீர்களுக்கு பகிர்ந்து கொடுத்துவிட்டார்'' என்றாள். மேற்சொன்ன இவ் வெண்ணரிய தியாகத்தை எண்ணிப் பார்த்தால் நம் எலும்பெல்லாம் நெக்கு நெக்காய் இலகுதன்றோ! இவைகளை நினைந்து, நினைந்து, நெஞ்சு நெகிழ வேண்டியதேயன்றி எழுதக்கூடியதன்று.

ஆதலால் இதனை விடுத்து மகம்மதிய சரித்திர ஆசிரியர்களின் மனோபாவத்தையும், அவர்களையொட்டி விமர்சனம் செய்துள்ள ஆங்கிலேய சரித்திர ஆசிரியர்களின் அகநிலையையும் சிறிது தெரிந்துகொண்டு மேல் செல்வோம்.

பெரும்பாலும் முஸ்லீம் சரித்திராசிரியர்கள் இந்திய இஸ்லாமிய ஆட்சியை விக்ரக ஒழிப்புக்கான 'ஜிகாத்' என்ற புண்ணிய யுத்தமென மிகைப்படுத்திக் கொண்டுவிட்டனர், அவர்களுடைய வைதீக மதப் பற்றால் மகமது பின் துக்ளக்கை பைத்தியக்காரன்என்று முடிவு கட்டவும், அக்பரை முஸ்லீம் அல்லாதவர் என்று கூறவும் துணிந்தனர். அதற்கு அவர்கள் செய்த குற்றம்தான் என்ன? மன்னர் மன்னர்களான மகமது பின் துக்ளக், அக்பர் போன்றோர் நாட்டின் நிர்வாகத்தில் தாராள மனப்பான்மையுடனும் சமரசத் தன்மையுடனும் நடந்துகொண்டதுதான் அவர்களின் குற்றம்.

பிரபல தக்ஷண சரித்திராசிரியரும், முஸ்லீமுமான பெரிஷ்தா ''யுத்தங்களிலெல்லாம் பாமினி அரசர்களே ஜெயித்தார்கள். விஜயநகர சைன்யமோ சதா தோல்வியையே கண்டது. ஒருமுறைகூட விஜயநகர சேனை வெற்றி கொண்டதில்லை, இந்து அரசர்கள் எப்பொழுதும் இஸ்லாமிய சுல்தான்களுக்கு கட்டியங்கூறி காலம் கழித்தனர்'' என்று மனம் கூசாமல் எழுதுகிறார். இதே போன்ற சரித்திர அபத்தங்கள் பல அனேக கல்வெட்டு ஆராய்ச்சிகள் மூலமும், பலநூல் ஆராய்ச்சிகள் மூலமும்

அவை ''அண்டப் புளுகுகள்'' என்று இன்று அறியக்கிடக்கின்றன, இஸ்லாமிய சரித்திர ஆசிரியர்கள் தங்கள் இனத்தவர்களைப்பற்றி வீண் கௌரவமும், தற்பெருமையும் கொள்வதே தலைசிறந்த தருமமென கருதினர். அதனால் சரித்திர உண்மைகளை திரித்தி விட்டனர். இதனை அப்படியே காப்பியடித்தனர், ஆங் கிலேய சரித்திர ஆசிரியர்களான எலியட், டவ்சன் போன்றவர்கள். பாவம் அவர்களை குறை சொல்லிப்பய னென்ன! அவர்களுக்கு அவர்களாகவே வரலாற்று நூல் வரைவதற்கு துணை செய்யக்கூடிய பெர்சிய மூல ஏட்டுப் பிரதிகளைப் படித்து அறிவதற்கு ஆற்றலில்லை, இத்தேசத்தின் இருபெரும் சமுதாயத்தின் மொழி! கலாச்சாரம் ஆகியவற்றை உணர்ந்துகொள்ளக்கூடிய திறனுமில்லை; அவர்களிடம் அச்சக்திகளை எதிர்பார்ப் பதும் அவ்வளவு சரியல்ல. மத்தியகால சரித்திர சம்பந்த மாக பேராசிரியர் எஸ். எச். ஹோடிவாலா, பழைய சரித்திர ஆசிரியர்களின் தவறுகளை அம்பலப்படுத்தி யுள்ளது கவனிக்சத்தக்கது.

இனி இந்தியாவின் இஸ்லாமிய ஆட்சியை கவனிப் போம். இந்நாட்டில் இஸ்லாமிய ஆட்சியை அராபியர் கள், பெர்சியர்கள், துருக்கியர்களாகிய முப்பெரும் தேசிய இனத்தவர்களே பரப்பினர். துருக்கியர் அராபியர்களைப் போன்றோ, பெர்சியர்களைப்போன்றோ வளர்ந்தநாகரிக மற்றவர்கள். அவர்களின் தொழில் யுத்தமும், யுத்தக் கொள்ளைகளுமே. இந்திய மண்ணில் காலடி வைத்த கொஞ்ச காலத்திற்கெல்லாம், அவர்களுடைய பழைய

மூர்க்கத்தனத்தையும், முரட்டுத்தன்மையையும் விட்டொழித்து விட்டனர். அவர்கள் தங்கள் சிறந்த அராபிய கலாச்சாரத்தையொட்டி இந்திய பண்பாட்டிற்கேற்ப சமூக சமத்துவங்கொண்ட அரசியலை நிறுவினர்.

மிகச் சிறுபான்மை யோரான முஸ்லீம்கள் பெரும்பான்மையோரான இந்துக்களின் ஒத்துழைப்பும் அபிமானமுமின்றி இந்தப் பரந்த தேசத்தை சுமார் எழுநூறு ஆண்டுகள் வரை எப்படி ஆண்டிருக்க முடியும்? அக்கால இந்துக்கள் வீர பராக்கிரமர்களாக இருந்தனர். இத்தேசத்தின்மேல் படை கொண்டு வெற்றி கண்டதாக நினைத்த படையெடுப்பாளர்கள் இந்து தத்துவத்திற் கலந்து இந்நாட்டு மக்களாகி விட்டனர். அல்பரூனி, அமீர் குஸ்ராவ் போன்ற மேதைகள் நாளடைவில் இந்திய பொன்னாட்டிற்கு வணக்கம் செலுத்தவும் ''இந்துஸ்தான் நம்முடையதே'' ''எல்லா நாடுகளிலும் எங்கள் ஹிந்துஸ்தானம் சிறந்தது. அது எங்கள் பூங்கா; நாங்கள் அதிலுள்ள இசைபாடும் பறவைகள்''* என்ற ஒருமைப்பட்ட உணர்ச்சியில் கோஷிக்கவும் தலைப்பட்டனர். இந்தியாவின் பண்பாடு, கலாச்சாரம், தத்துவமாகியவை எவ்வளவு விரைவில் இந்நாட்டிற்கு வந்து குடியேறியோரை தன் வசமாக்கிக் கொண்டதென்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

---

* ''ஸாரே ஜஹாஸே அச்சா, ஹிந்துஸ்தா ஹமாரா!
ஹம், புல்புலே ஹீ இஸ்கி, ஏ குலிஸ்தான் ஹமாரா!''
—இக்பால்.

"நான் இந்தியத் துருக்கன்; நான் ஹிந்தியிலேயே பதிலளிக்கக்கூடும். நான் இந்தியாவின் செல்வக்கிளி யாதலால் ஹிந்தியிலேயே கேள்வி கேளுங்கள்; நான் அதற்கு இனிமையாக பதில் சொல்வேன். அராபி மொழி பேசுவதற்கு என்னிடம் ஈஜிப்திய இனிப்புவன்மை இல்லை'' என்றார் மிகச்சிறந்த முதல் இந்தோ பெர்சிய கவியான அமீர்குஸ்ராவ் (1253—1347).

இந்தியாவின் மகோன்னதத்திற்கு அவர் கூறும் கீழ்க் காணும் பத்து அற்புத காரணங்களை கவனியுங்கள்.

அறிவும், ஞானமும், படிப்பும், ஆற்றலும் எங்கும் எல்லோரிடமும் நிரம்பி இருந்தன.

அவர்களால் உலக மொழிகளெல்லாம் தெளிவாக பேச முடிந்தது.

இந்தியாவிலிருந்து ஞானம் பெறுவதற்காக, உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் அறிஞர்கள் பலர் அவ்வக் காலங்களில் இந்தியாவிற்கு வந்து போனார்கள். (பால்கன் தேச பிரபல வானசாஸ்திரியான அபுமஹார் பத்து வருஷ காலம் காசியில் தங்கி வான நூல் கற்றார்.) ஆனால் இந்தியாவை விட்டு பிராமணர்கள் வெளியேற வில்லை.

ஹிந்துலா என்ற சயின்ஸ் ஞானமும், எண் ஞான மும்* இந்தியாவிலேதான் ஏற்பட்டன.

---

* இன்று அமுலில் இருக்கும் சர்வதேச எண்கள் முறை ஹிந்துக்கள் கணித சாஸ்திரத்திற்கு அளித்த தலை சிறந்த மூன்று அம்சங்களில் ஒன்றாகும். மற்றவை

அற்புதமான பஞ்சதந்திரக் கதைகள்† (கலிலாவும், தாமனாவும்) இந்தியாவிலேயே ஆக்கப்பட்டன

பூஜ்யமும், ஸ்தானமுமாகும். கிருஸ்து பிறப்பதற்கு 274, 236 வருஷங்களுக்கு முன்பிருந்தேஇந்த எண்கள் உபயோகத்தில் இருந்தன. ஆனால் இந்த எண்ணிக்கைக்கு இப்பொழுதுள்ள உருவமும், பிரசித்தியும் கிருஸ்துவ சகாப்த மூன்றாவது நூற்றாண்டில் ஏற்பட்டன. எண்கள் சம்பந்தமான கணித சாஸ்திரத்திற்கு ஆரியபட்டர் மகத்தான சேவை செய்திருக்கிறார்.

† பஞ்ச தந்திரம் பௌத்த ஜாதகக் கதைகளை அடிப்படையாகக்கொண்டது ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த பாரசீக அரண்மனை வைத்தியரான பெட்ஸுயெட் பெரும் பொருள் கொடுத்து ஒரு பஞ்ச தந்திர பிரதியைப் பெற்று தன் மன்னர் கோஸ்ரோவிடம் சேர்ப்பித்தார். அது பாரசீகத்தில் மொழி பெயர்க்கப்பட்டு அகஸ்திய ஒளிக்கதிர்கள் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. மற்றும் பித்பைக் கதைகள் என்ற பெயரும் அதற்கு உண்டு. ஏனெனில் பித்பை என்ற ஒரு ஞானி அதை இந்திய அரசனுக்கு சொன்னதாக பெர்சிய மொழி பெயர்ப்புக் கூறுகிறது. அது 8-ம் நூற்றாண்டில் அபெல்லா பென் மொக்காபா என்பவரால் அரபியில் மொழி பெயர்க்கப் பட்டு 'கரடகன் தமனகன்' என்ற இயற் பெயர்களுக்குப் பதிலாக 'கலிலாவும் திம்னாவும்' என்று மொழி பெயர்க்கப்பட்டதால் புத்தகத்திற்கும் 'கலிலாவும் திம்னாவும்' என்று பெயர் ஏற்படுததப் பட்டு விட்டது. இந்த அரபு மொழிபெயர்ப்பு 8, 9-ம் நூற்றாண்டுகளில் உலகப் பிரசித்தி பெற்ற நூல்களில் ஒன்றாக விளங்கியது. இந்நூல் துருக்கி தார்த்திய மொழிகளிலும் 11, 12, 13-ம் நூற்றாண்டுகளில்.

சொக்கட்டான், சதுரங்க விளையாட்டுகள் இந்தியாவிலேயே ஏற்பட்டதாகும்.

சதுரங்க விளையாட்டும், பஞ்ச தந்திரக் கதைகளும் உலகையே கவர்ந்தவைகளாகும்.

உள்ளத்தையும், உணர்ச்சியையும் தட்டி எழுப்பக் கூடிய இந்திய சங்கீதம், உலகின் மற்றெல்லா சங்கீதங் களையும்விட மிக உயர்ந்தது.

இந்திய சங்கீதம் மனிதர்களை மட்டுமல்ல, மிருகங் களைக்கூட தன் வசப்படுத்தக்கூடிய சக்தி வாய்ந்தது.

இறுதியாக, இந்தியா அமீர்குஸ்ராவின் வாசஸ்தல மாகும்.

அரசியல் காரணங்களுக்காக, இஸ்லாத்தின் வெற்றி கண்ட வீரனென்று சிலரால் போற்றப்படுகின்ற விக்ர கங்களை நிர்மூலமாக்கிய அலாவுதீன்,இந்து கலாச்சாரத் தைக் குறித்தும், பண்பாட்டைப்பற்றியும் என்ன சொல் லுகிறார் என்று பாருங்கள்.

---

ஹீப்ரு, கிரீக், லத்தீன் முதலிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு பின்னர் பிரஞ்சு, ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளிலும் வெளிவந்திருக் கிறது. மக்களுக்கு எளிதில் நீதிகளையும், நன்னெறி களையும் புகட்டுவதற்காக, பல நூற்றாண்டுகளுக்கு முன் நம் கங்கைக் கரையில் தோன்றிய பஞ்சதந்திரக் கதைகள் உலகத்தின் பலபாகங்களிலிருந்த, குழந்தை கள் முதல் வயோதிகர் ஈராக அனைவருக்கும் அறிவு பொக்கிஷமாக இருந்தது கவனிக்கற்பாலதே.

''இத்தேசத்தில் அளப்பரிய ஞானம் பொதிந்து கிடக்கிறது. கிரீஸ், தத்துவ சாஸ்திரத்திற்கு புகழ் பெற்றது போலவே, இந்தியாவும் புகழுடையதாகும். ஒருவர் சரியாக பரிசீலனை செய்தால் தத்துவ சாஸ்திரத்தின் எல்லாப் பகுதிகளும் இந்தியாவிலேயே காணக் கிடைக்கும். நம்முடைய மதத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லாதிருக்கலாம். ஆனால் அவர்களுடைய அனேக கோட்பாடுகள் நம்மைப்போன்றதே, நம்மைப் போன்றே அவர்களும் கடவுளின் ஏகத்துவத்தைப் பற்றியும், சமத்துவத்தைப் பற்றியும் நம்புகிறார்கள். கல்லையும், மண்ணையும், செடிகொடிகளையும், பக்ஷி பறவைகளையும், மிருகங்களையும் அவர்கள் தொழுகிறார்கள். இருந்தபோதிலும் அவைகள் இறைவனின் படைப்புகள் என்று ஒத்துக்கொள்கிறார்கள். தங்களின் முன்னோர்கள் வழிபட்டார்கள் என்பதற்காகவே இப்பொழுதும் வழிபடுகிறார்கள்'' என்கிறார்.

''இந்துக்கள் ஒரே கடவுளை நம்புகிறார்கள். அவன் என்றும் அழிவற்றவன், சர்வ சக்தன், சர்வ வியாபி, சர்வ ஞானி, சகல விருப்பு வெருப்பையுங் கடந்தவன். அவனை ஒத்து எதுவுமில்லை. எதுவும் அவனை ஒத்துமில்லை இந்து மதத்தின் படித்தறியா பாமரர்களுக்குத் தான் விக்ரக ஆராதனை ஏற்பட்டது'' என்றார்.

மற்றும் ''இந்துக்கள் மகோன்னத தத்துவஞானிகள் சிறந்த கணித வல்லுணர்கள், வாண சாஸ்திரிகள்!'' என்று பன்முறை படையெடுத்து, இந்தியாவின் செல்வத்தை கொள்ளையிட்டுச் சென்ற, மகமது கஜனியின்

தர்பாரில் ஆஸ்தான கலாஞானராக இருந்த அல்பரூனி தன்னுடைய மகனுக்கு இந்தியாவைப் பற்றி எழுதியிருக்கிறார்.

இனி அக்பர் அரசவையின் அரும்பெரும் கலைஞரான அபு-அல்-பஸல், "இந்துக்கள் கடவுள் பக்தி மிக்கவர்கள்; சரளமான சுபாவம் படைத்தவர்கள்; அன்னியரிடம் மரியாதை செலுத்துபவர்க்ள்; எப்பொழுதும் புன்னகைதவழும் முகத்தோடிருப்பவர்கள்; நியம நிஷ்டைகள் அனுஷ்டிப்பதில் மிக்க கண்டிப்பானவர்கள்; நீதியாய் நடப்பதில் நிறைந்த ஆர்வமுடையவர்கள்; ஒதுங்கி வாழும் இயல்புடையவர்கள்; நன்றி மறவாதவர்கள்; சத்தியம் தவறாதவர்கள்; தங்கள் வியாபாரம் அனைத்திலும் அளவற்ற நாணயம் உடையவர்கள்;"

"துன்பம் வரும்பொழுதுதான், அவர்களுடைய நற்குணம் நன்கு பிரகாசமாய் ஜொலிக்கும். போர்களத்தினின்று புறமுதுகு காட்டி ஓடுவதென்பதை இந்து வீரர்கள் அறியார்கள். ஆனால் தங்கள் வெற்றியில் சந்தேகம் ஏற்படும்போது, குதிரையை விட்டிறங்கி தங்கள் உயிரையே துறப்பார்கள். அநேகமாய், தங்கள் குதிரையின் குதிகால் நரம்பை நறுக்கி அதை முடமாக்கி விடுவார்கள். ஏனெனில் ஓட வசதி இல்லாமலிருக்கத்தான். இவ்விதமானபின் அமரிலே அதிவிரைவில் இரண்டில் ஒன்று பார்த்துவிடுவார்கள்."

"அபயமென்று ஆபத்துக்குள்ளான எவனாவது அவன் முன்பின் தெரியாத அன்னியனாயிருந்தாலும்

சரியே; அவர்களிடம் அடைக்கலம் அடைந்தால், தங்கள் உயிர், பொருள் புகழ் மூன்றையும் துறந்தாவது அவனை காப்பாற்றியே தீருவார்கள்.

"இந்துக்கள் அனைவரும் ஒரே பரம்பொருளில் நம்பிக்கையுடையவர்கள்; அவர்கள் பலவித விக்ரகங்களை மிக்க பயபக்தியோடு தொழுகிறார்கள். இருந்த போதிலும், கேவலம் விக்ரகமே தெய்வமென நம்பும் அறிவிலிகள் அல்ல. அவர்களைப்பற்றி ஒன்றும் அறியாதவர்கள் தான் அவ்விதம் நினைப்பார்கள். நேர்மையும், கல்வியறிவும் நிறைந்த பல இந்துக்களுடன் இவ்விஷயத்தைப்பற்றி நான் விவாதித்திருக்கிறேன். அதிலிருந்து, அவர்களுடைய கொள்கையைப்பற்றி அறிந்து கொண்டது இதுதான். விக்ரகங்களெல்லாம், பற்பல தேவர்களின் சின்னங்களேயாகும். அவர்கள் அந்த தெய்வங்களை வணங்குகிறார்கள். ஏனென்றால், தங்கள் சிந்தையைப் பல விஷயங்களில் திரியாமல் தடுப்பதற்காகத்தான். இந்தக் கடமைகளையெல்லாம் செய்தால்தான் பாமரர்களால் ஒரே பரம்பொருளை வழிபட இயலும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்."

"பரம்பொருளை அவர்கள் எச்செயலுமற்ற பரபிரம்மம் என்றழைக்கிறார்கள். ஆதவனின் ஆசியை தங்கள் பிரார்த்தனைகளிளெல்லாம் அவர்கள் வேண்டுகிறார்கள்".

"தெய்வீகத் தூய்மையிலும், இந்திரிய போகங்களையெல்லாம் துறந்த துறவிலும், வேறெந்த மதத்திலும்

பார்க்கவியலாத இணையற்ற உத்தமர்கள் இந்து மதத்திலேயே இருக்கிறார்கள்.

தங்கள் குருமார்களிடம் இந்துக்களுக்கு, மிகுந்த பக்தியுண்டு. தங்கள் வாழ்வைத் தெய்வத் தொண்டிலே ஈடுபடுத்த முடியுமானால், சுகபோகங்களை அவர்கள் துச்சமென மதித்தார்கள்—மதிப்பார்கள்.

பிரபஞ்சம் அநாதியானது என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அவர்களில் சிலர் அதற்கு முடிவு மட்டும் உண்டு என எண்ணுகிறார்கள்'' என்று இந்துக்களைபபற்றி குறிப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

''இந்துஸ்தானம் என் நாடு, இந்துஸ்தானம் என் நாடு'' என்று நூற்றுக்கணக்கான ஆண்டுகள் அன்னிய ஆட்சியில் அடிமைப்பட்டு, நாட்டுப்பற்று நலிவுற்றுருந்த காலை கவிஞர் இக்பால் ஹிந்துஸ்தானியில் பாடி நமக்குப் புதிய ஜீவனைத் தந்தார். அவர் எத்தகைய ஹிந்துஸ்தானத்தைக் குறிப்பிடுகிறார் தெரியுமா?

''சிஸ்தி என்ற தத்துவஞானி அறிவைப் பரப்பிய இந்த இந்துஸ்தானம்; நானக் என்ற மஹாத்மா மத ஒற்றுமையை வளர்த்த இந்த இந்துஸ்தானம்: தாத்தாரியார்கள் தாங்களாகவே வந்து தங்களுடையதாக்கிக் கொண்ட சொந்த இந்துஸ்தானம்; அராபியர்கள் அண்டி வந்து வாழ்ந்த அற்புத அழகிய நாடு, அதுவே

என் பொன்னாடு; அதுவே என் பொன்னாடு''* என்றார். ''மற்றும் மதங்களின் அடிப்படை வேற்றுமையை வளர்ப்பதல்ல, ஒற்றுமையை வளர்ப்பதே''† என்று எடுத்துக் கூறுகிறார். இன்னும் கிரேக்க நாட்டின் பண்டைய பெருமையும், எகிப்து தேசத்தின் புகழும், ரோம நாட்டின் சிறப்பும் சிதைந்து விட்டது. ஆனால் பாரதத்தின் புகழ் மட்டும் என்றும் சாஸ்வதமாக நிற்கிறது' ‡ என்றும் பெருமிதத்தோடு கூறுகிறார்.

மேற்கண்ட விதமாக இந்துக்களை முஸ்லீம்கள் மதிப்பிட்டிருந்தனர். இதனாலேயேதான் இந்தியாவில் வெற்றிகண்ட முஸ்லீம்கள் நாளடைவில் இந்தியாவைத் தங்கள் தாயகமாக்கிக் கொண்டனர். இதனால், முஸ்லீம்களும் தாங்களாகவே இந்நாட்டு மக்களோடு ஒன்று சேர்ந்து, இந்நாட்டு கலாச்சார, சமுதாய அரசியல் வாழ்க்கையில் புது சமுதாயத்தை ஒன்றுபட்ட வாழ்வை, இந்திய தேசிய இனத்தை இந்துஸ்தானத்தின் மக்களெனக் கொண்டு நிர்மாணிக்க முற்பட்டனர்.

---

* சிஸ்தினே ஜிஸ் ஜமீன்மே பைஹாமே ஹக் சுனாயா?
நானக்னே ஜிஸ் ஜமீன்மே வஹ் தத்கா கீத் காயா?
தாத்தாரி யோனே ஜிஸ்கோ அப்னா வதன்பனாயா?
ஜிஸ்னே ஹிஜாசியோஸே தஸ்த அரப் ஷுடாயா?
மேரா வதன் வஹீஹை மேரா வதன் வஹீஹை

† மஸ்ஹப் நஹீ ஸீக்காதா, ஆபஸ்மே பைர் ரக்னா
ஹிந்த் ஹீ ஹம் வத்தன் ஹை ஹிந்துஸ்தான் ஹமாரா

‡ யூனான் வ மிஸ்ர் வருமா, ஸப்மிட்கயே ஜஹா ஸே
அப்தக் மகர் ஹை பாகி, நாமோ நிஷா ஹமாரா

இஸ்லாம், இந்தியாவில் ஒரு அரசியல் சக்தியாக 712-ம் வருஷத்தில் ஏற்பட்டது, அதாவது கலிபா முதலாவது அல்வாலித் (705-715) அவர்களிடம் வைஸ்ராயாக இருந்த ஹஜ்ஜாஜ் என்பவர் காசீமை இந்தியா மீது படை கொண்டு செல்ல உத்தரவிட்ட கால முதல் எனலாம்.

இதன் பயனாக மூல்தான் வரையிலுமான சிந்து மாகாணம் மூன்று ஆண்டில் இஸ்லாமியர்கள் வசப்பட்டது. நாட்டை வெற்றி கொண்ட அராபிய வீரரான காசீம், தன்னை ஆண்மையோடு எதிர்த்த இந்து அரசரின் தோள் வலிமையையும், வீரத்தையும் மெச்சி அரசாங்கத்தை அவரிடமே ஒப்புவித்தார்.

இந்துக்கள் ஜசியா வரி செலுத்த நியதி ஏற்பட்டது. அதனால் அரசாங்க வரும்படியில் மூன்று சதவிகிதம் இந்து கோவில்களின் பராமரிப்புக்கே ஒதுக்கப்பட்டது. இந்துக்கள் தங்கள் கோவில்களைப் புதுப்பித்துக் கொள்ளவும், தங்கள் இஷ்டப்படி மத அனுஷ்டானங்களை நடத்திக் கொள்ளவும் அனுமதிக்கப் பட்டனர். வீர அராபிய மரபினன் செய்த இந்த ஏற்பாடு பின்னால் வந்த மத்திய ஆசிய துருக்கருக்குப் பிடிக்கவில்லை. இந்து கோவில்களிலிருந்து திரண்ட செல்வங்களை சூறையாட மகமது கஜினி ஆரம்பித்தார். இந்த அடாத செய்கையை முஸ்லீம் பேராசிரியர்களான அல்பேரூனி முதல் ஹபீப் வரை சகலரும் கண்டித்திருக்கின்றனர். மகமது கஜினிக்கு இஸ்லாத்தின்

கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணமோ. அல்லது இந்துக்களை நாசமாக்க வேண்டுமென்ற கிராதக புத்தியோ இருந்ததாகக் கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் அவருடைய தலைநகரான கஜினியிலிருந்த காலாட் படையினர் அவர்கள் விருப்பப்படி இந்து கடவுளை வழிபடவும். அவர்களின் மதத்தை அனுஷ்டிக்கவும், அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதனால் அவர் சோமநாதரின் தேவலாயத்தை கொள்ளையிட்டது பொன்னாசையே காரணமென்று கொள்ளலாம்.

கஜனிமுகமதுவைப்பற்றி ஒரு முஸ்லீம் ஆசிரியர் கீழ்கண்டவாறு எழுதுகிறார்.

''வேண்டுமென்றே கோவில்களை நாசம் செய்யும். கஜினி சைன்யத்தின் தகாத செய்கையை. தங்கள் மதக் கொள்கைகளை சரியாக உணர்ந்த எந்த முஸல்மானும் நீதி யென்று ஒத்துக்கொள்ள மாட்டார், ஒரு தேசத்தின் மீது படையெடுப்பவர், கொள்ளையடிப்பதையோ, அதிக்ரமம் செய்வதையோ இஸ்லாம் அனுமதிக்கவில்லை. 'ஷரியத்' கோட்பாட்டின்படி நபிகள் நாயகத்திற்கோ அல்லது அவரது குடி படைகளுக்கோ தீங்கு செய்தறியாத எந்த இந்து அரசர் மீதும் படையெடுக்க உரிமையில்லை மற்றும். ஆண்டவனைத் தொழுவதற்கு ஏற்பட்ட ஆலயத்தை அழிப்பது அடாத செயலென்று மதம் வன்மையாக கண்டிக்கிறது''.

''இஸ்லாத்தைப்பற்றி அரேபியாவில் நபிகள் பிரச்சாரம் செய்ததற்கு முரணாக கஜினி நடந்து காட்டிவிட்டார்.''

பொதுவாக கஜினி முகம்மது ஏராளமான இந்துக்களை உத்தியோகத்தில் வைத்திருந்தார். அவருடைய மகனான மாசூது இந்துக்களைப் புண்படுத்தக் கூடிய எந்தக்காரியத்தையும செய்யக்கூடாதென உத்திர விட்டிருந்தார். மேலும், மாசூது முகம்மதிய கலகக் காரர்களை இந்து படைவலியினால் அடக்கி ஒடுக்கினார் என்பது சரித்திர வரலாறு.

பால்பன் (1266—86) ஆண்டவனை அடிப்படையாகக்கொண்டு அரசாங்கத்தை அமைத்தார்: அவருடைய ஆட்சியில் துருக்கிய பிரபுக்களும்; இந்து ராய்களும் தண்டிக்கப்பட்டனர். ஆலீமாக இருந்தாலும், அமீராக இருந்தாலும் கொடிய சட்டத்தினின்றும் தப்ப எவருக்கும் வழியில்லை.

ஜலாலுதீன் கில்ஜி, சர்க்கரை இந்திய மயமாக்கினார். நடுநிலைமையோடும் நேர்மையோடும் அரசாண்டார். கலகக்காரர்களையும், கள்ளர்களையும் சீர்த்திருத்த முயன்றார். ''கேடு செய்பவனுக்கும் நன்மை செய்பவனே சிறந்தோன்'' என்பது புத்த மதத்தையொட்டிய அவரது கோட்பாடாகும். ஒரு சமயத்தில அவருடைய மந்திரிகள், அவர் இந்து குடிகளிடத்தில் மிகச் சலுகை காட்டுவதாக கடிந்துரைத்தனர். அதற்கு சுல்தான் சிரித்துக்கொண்டே, ''கங்கா நதி தீரத்திலுள்ள அவர்களது கடவுளைத்தொழ. தினசரி சங்கு ஊதி, நகரா முழங்கி, மந்திரமோதி. என் அரண்மனை வழியே அவர்கள் செல்வதை நான் அனுமதித்திருப்

பதை நீங்கள் அறியமாட்டீர்களா? அவர்கள் தங்கள் வழிபடும் கடவுளை பெரிதாக கருதும்பொழுது என்னையும், என் அரசியல் அந்தஸ்தையும் துச்சமாகக் கருதுவது இயற்கையே. அவர்கள் முஸல்மானைவிட அதிக செல்வமும், வளமையும், வசதியும் பெற்றிருப்பதால், டாம்பீகத்திலும், ஆடம்பரத்திலும் சிறந்து விளங்குகிறார்கள். இருந்தபோதிலும், அவர்கள் அப்படி வாழ நான் அனுமதிக்கிறேன். தர்மத்திற்காக அவர்கள் செலுத்தும் காணிக்கையைக் கொண்டே நான் திருப்தியடைகிறேன்'' என்றார்.

அலாவுதீன் கில்ஜி (1297—1320) இந்து முஸ்லீம் வேறுபாடின்றி அரசாட்சி செய்தார். ஆளும் வர்க்கத்தாரில் அநீதி செய்தோர்களை இந்துவானாலும் சரி, முஸ்லீமானாலும் சரி, அவர்களுக்கு ஒரே விதமான தண்டனை வழங்கினார். அதனால் நாட்டிற்கு அதிக அவசியமான சாந்து ஏற்பட்டது. அவருடைய ஆட்சியில் பதுக்கல் செய்த வியாபாரிகள் சமூகப்பிரதிஸ்டம் செய்யப்பட்டார்கள். நேர்மையான, லாபமற்ற தொழிலும் வியாபாரமும் நடைபெற வேண்டுமென்ன அரசர் ஆசைப்பட்டார். ஆனால் அக்கால மக்களோ அதனை உணர்ந்தாரில்லை.

மகமது பின் துக்ளக், அக்பரின் அடிப்படையில் வைத்து எண்ணத்தக்கவர். இவர்தான் இந்து-முஸ்லிம் ஏகத்துவத்திற்காக முதன்முதலாக கனவு கண்ட முஸ்லீம் மன்னர். மதத்தின் காரணமாக இந்து-முஸ்லீம்களுக்கு

ஊறு செய்தவர்கள் தனக்கு வேண்டிய முஸ்லீம் பெரியோர்களாக இருந்தபோதிலும் சரியே—கண்டன தண்டனையிலிருந்து தப்பிவிட மாட்டார். இந்து என்ற காரணத்திற்காக, இந்துக்களை அலட்சியமாக எவரும் எதுவும் சொல்லிவிட முடியாது. இவர் இந்துக்களிடம் தாராள மனப்பான்மையுடன் நடந்துகொண்ட காரணத்திற்காக பாரணி படுடா போன்ற சரித்திராசிரியர்கள் இவரை இஸ்லாத்திற்கு விரோதியென்றும், நாஸ்திகரென்றும் கூறிவிட்டார்கள். பலம் பொருந்திய மத்திய அரசாங்கமும், சரியான நாணய ஏற்பாடும் நாட்டிற்கு அவசியமென்று கருதினார். ஆனால், ஆளும் கும்பல் இவரைப் பைத்தியக்காரர் என்று ஒதுக்கி, பிரோஷ்ஷா—துக்ளக்கு பட்டம் சூட்டியது. மாலிக்-உல்-உலாமா என்பவர் பழைய இந்து கோவில்களை நாசமாக்கிவிடாதீர்களென்றும், இந்துக்கள் அவர்கள் தர்மத்தை பின்பற்றுவதினின்றும் தடுக்காதீர்களென்றும் மன்னருக்கு அறிவுரை புகட்டினார். அரசனின் தடை உத்திரவையும் மீறி அக்கால பிராமண அறிஞர்களின் மதோபதேசங்களைக் கேட்க, முஸ்லீம் பொதுமக்கள் பெருமித உற்சாகத்தோடு திரண்டனர். பொதுவாக அக்காலத்திய இந்து முஸ்லீம்கள் தங்கள் சுகதுக்கங்களையும் லாபநஷ்டங்களையும் ஒருங்கே பகிர்ந்து அனுபவித்தார்கள்.

டில்லி சுல்தான்களின் ஆட்சி காலமானது சதா அந்தரத்தில் தொங்கியது. உள்நாட்டுக் கிளர்ச்சியும், வெளிநாட்டு படையெடுப்பு பயமும் இருந்தது. ஆதலால்,

இந்து- முஸ்லீம் ஐக்கிய ராணுவ பலத்தின்மீது இஸ்லாமிய அரசு அமைக்கப்பட வேண்டியதாயிற்று,

பொதுவாக மொகலாயர்கள் ஆட்சி சிறந்ததென்றே சொல்லலாம், அக்காலத்தில் நாட்டின் எல்லைகளில் அமைதி நிலவியது. இந்துக்கள் அன்பினால் வசீகரிக்கப் பட்டனர். ஆரிய- ஈரானிய கூட்டுக் கலாச்சாரத் தோடு ஒன்று கலந்த, ஒரு புதிய கலாச்சார வாழ்வையும், நாகரிக்த்தையும் கொண்டு மொகலாயர்கள் மிக்கப் பேரும் புகழோடும் இந்தியாவை ஆறு தலைமுறைகள் வரை அரசாண்டனர்.

இந்தியாவிலேற்பட்ட முஸ்லீம் ஆட்சியில் இந்துக்கள் சுதந்திர உரிமையை இழந்தவர்களானாலும், அகௌரப் படுத்தப்படவில்லை. அரசாங்க ஆட்சிமுறை யில் ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள அவர்கள் அழைக்கப்பட்டு சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பாக் தாது தேசத்தின் கலிபாக்களின் இஸ்லாமிய சம்பிர தாயத்தை யொட்டி இந்திய முஸ்லீம்களும். முஸ்லீம் அல்லாதவர்களிடத்தில் சகிப்புத்தனமும் பெருந்தன் மையுங்கொண்டு சமத்துவ, சமஉரிமை நோக்கோடு நடக்கலானார்கள்.

“இந்திய இஸ்லாமிய ஆட்சியிலே, அதிர்ஷ்டவச மாக ஆட்சி மன்றத்தில் ஆளும் வர்க்கம் என்று ஒன்று இருந்துகொண்டு அதிகார அமுல் நடத்தவில்லை” என்கிறார் ஒரு சரித்திராசிரியர். இது முற்றிலும் உண்மை.

இந்தியாவை முதலில் வென்ற இஸ்லாமிய மன்ன ரான முகமது பின்காசிம் ஆளும் பொறுப்பை இந்துக் களிடமே விட்டுவிட்டு அவர்களை கௌரவமாகவே நடத்தினார் என்று கூறியுள்ளோம்.

விக்ரகங்களை கொள்ளையிட்டவர் என்று அழைக் கப்படும் கஜினி முகமது தன்னுடைய சர்க்காரில் இந்துக்களை அமர்த்தியிருந்தார், ராஜ்ய நிர்வாகங்களி லும், ராணுவ நிர்வாகத்திலும், இந்து அதிகாரிகளின் தலைமையின்கீழ் இந்துக்கள் அதிகமாக இருந்தனர். குதிரைப் படையில் இந்து வீரர்கள் மலிந்து காணப் பட்டனர். இஸ்லாமிய எஜமானருக்காக இந்து படைகள் கார்மண், குவாரிசம், மேரீ போன்ற வெளியிடங்களில் போரிட்டனர். இந்தப் படைகளில் கர்னாடக தேச கன் னடியப் படையும் ஒன்று திலகன் என்பவர் இவ் ராணுவத்தின் முக்கிய தளகர்த்தர்.

டில்லீ சுல்தான்களின் (1256-1320) ஆட்சி வெறும் அதிகார ஆட்சியே உள்நாட்டுக்கிளர்ச்சியும், வெளிநாட்டுக் குழப்பமின்றி அவர்கள் அதிகாரத் தில் இருக்க ஆசைப்பட்டார்கள். அதோடு அவர்கள் இஸ்லாத்தின் பாதுகாவலர். என்றும் விக்கிரக வைரி களென்றும் சிலர் தற்பெருமை கொண்டனர். எனினும் பெரும்பான்மையான இந்துக்களுக்கு விரோதமாக நடக்க அவர்களுக்கு விருப்பமில்லை. ஆகையால் இந்துக் களிடம் இணங்கிச்செல்ல நேர்ந்தது. வெற்றிகண்டவர் களும், தோல்வியுற்றவர்களும் ஒருவரையொருவர்

பகைத்து அழித்துக் கொள்ளவில்லை. ஆனால் ஒருவரை யொருவர் நன்குணரத் தலைப்பட்டனர்.

டில்லி சுல்தான்கள் சில மத்தியகால இந்து தத்துவத்தை அத்யாவசியமானவையென மதித்து அதனை அங்கீரித்துக் கொண்டனர். பலம் பொருந்திய மத்திய அரசாங்கம், ராணுவ பந்தோபஸ்து, குடிமக்கள் அரசியல் நிர்வாகத்தில் குழப்பம் செய்யாதிருத்தல் ஆகிய மூன்று விஷயங்களையே அவர்கள் பெரிதென மதித்தார்கள். அரசியல் அதிகாரம் தங்கள் கையிலிருந்தால் போதும் என்ற மனோபாவத்தில் ரெவின்யூ நிர்வாகத்தை இந்துக்கள் கையில் ஒப்படைத்து விட்டனர். அக்கால கிராமக் குடியரசுகள் பண்டைக்கால சுதந்திர ஆட்சி முறையை தொடர்ந்து நடத்தி வந்தன. கிராம வரி வசூல்கள் ஸ்தல மன்னர்களிடத்திலோ அன்றி ஜமீன்தார் களிடத்திலோ ஒப்படைக்கப்பட்டது. இவர்களிடமிருந்து இறுதியில் முஸ்லீம் சக்கரவர்த்திக்கு ஒரு தொகை கப்பமாக வந்தது. பொதுவில் இந்திய சமுதாய வாழ்க்கை எவ்வித குந்தகமுமின்றி பழமையே போல் நடந்து வந்தது.

மகமது பின் துக்ளக் இந்துக்களிடத்தில் நெருங்கிப் பழகி அவர்களை உணர்ந்து அவர்களின் கலாச்சாரத்தை தெரிந்து கொள்ள முற்பட்டார். அவர் இந்து தத்துவ சாஸ்திரிகளையும், யோகிகளையும் அழைத்து தத்துவ விசாரணை செய்து வந்தார். லோகு வம்ச சுல்தான்கள்

இந்துக்களுக்கு பெர்சிய மொழி கற்றுக் கொள்ள வசதி ஏற்படுத்தினார். இதனால் இந்துக்களுக்கு ஆட்சி மன்றத்தில் இடம்பெற வாய்ப்பு ஏற்பட்டது. இந்தியாவிற்கு வந்த தைமூர் டில்லி சர்க்காரை முஸ்லீம் சர்க்கார் என்றழைப்பதைவிட இந்து சர்க்கார் என்றழைப்பதே மிகப் பொருத்தமென்று கூறி ''கடவுள் நம்பிக்கையற்றவர்கள் மீதும், விக்ரக ஆராதனை செய்பவர்கள்'' மீதும் படையெடுக்கவே தான் இந்துஸ்தானத்திற்கு வந்துள்ளதாகக் வந்துள்ளதாகக் கூறினார். மற்றும் இந்திய முஸ்லீம்களை முஸ்லீம் பட்டியலிலிருந்து விலக்கப்பட்டவர்களென்றும் கூறினார்.

இதற்கு நூறு ஆண்டுகளுக்கப்பால் வந்த பாபரும் பொதுவாக இந்துக்களால் தேசம் ஆளப்பட்டு வருவதைக் கண்டார். ''ரெவின்யூ உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள்,வேலை செய்பவர்கள் ஆகியவர்கள் இந்துக்களே'' என்று பாபர் தன்னுடைய ஞாபக குறிப்புகளில் குறித்துள்ளார். பாபர் தன்னுடைய முன்னோர்களிடமிருந்து, பெருநோக்கும், பரந்த மனப்பான்மையும் பெற்றார். அவர் தன்னுடைய குமாரன் ஹுமாயூனுக்கு எழுதி வைத்த சாஸனத்தில் ''இந்திய அரசாங்கமோ பல் வேறு மதங்களைக் கொண்டதாகும். ஆதலால் உன்னுடைய உள்ளத்தில் எவ்வித வேறுபாடு உணர்ச்சிகளிருந்தாலும் அவைகளை உடனே அகற்றிக் கொள். ஒவ்வொருவருடைய மதானுசாரத்தையும் அனுசரித்து, அவர்களுக்கேற்ற நீதி வழங்கு. பசு பலியிடுவதை முக்கியமாக நிறுத்து. இன்றேல் இந்துக்களின் அன்பை நீ பெற முடி

யர்து எந்த மதக்கோவில்களையும், மண்டபங்களையும், நீ அழிக்காதே.'' என்று எழுதியுள்ளார். இச்சாஸனத்திலிருந்தே அவரது ஆட்சிமுறை என்று தெரியவரும்.

மொகலாய மன்னர்களுடைய காலத்தில் இந்திய மகாணங்களை இந்துக்களே அரசாண்டார்கள். குறிப்பாக ரெவின்யூ, பொக்கிஷ மந்திரிகளாகவும், ராணுவ தளகர்த்தர்களாகவும் இருந்தவர்கள் இந்துக்களே.

அக்பருடைய பரந்த மனப்போக்கையும், ரஜபுத்ர அபிமானத்தையும். இன்றைய தினமும் வட இந்திய கிறாமிய பாடல்களில் கேட்டு நாம் ரசிக்கலாம்.

ஜெயப்பூர் மன்னர் தங்களுடைய மகளை அக்பருக்கு விவாகம் செய்து கொடுக்க எத்தனித்தபோது, தன் மகளை அடிமையாகவும், தங்களை ஊழியர்களாகவும் அக்பர் எங்கு கருதுவாரோ என்று எண்ணி சஞ்சலப்பட்டாராம். அதற்கு அக்பர் ''அவள் எனது பட்ட மகிஷி; நீங்களோ எனது சர்தார்கள்'' என்றாராம்.

அக்பர் இந்துக்களைப் போல் சூரிய நமஸ்காரம் செய்து வந்தார். அவர் அனுதினமும் படித்து வந்த ''சூர்ய சஹஸ்ரநாம'' புத்தகம் இன்றும் பங்களூர் ஜெயின் நூல் நிலையத்திலிருக்கிறது.

அக்பருக்குப்பின் அவரது குமாரரும், பேரனும் நாட்டை அரசாள, நாட்டில் அமைதி நிலவ, செல்வம் கொழித்து சுபிட்ச வாழ்வு வாழ ரஜபுத்திரர்களையே நம்பி வந்தார்கள். இந்த மூவரின் ஆட்சி காலத்தில்

தான் ராஜாமான்சிங், ராஜா பகவந்தாஸ், ராஜா பீர்பால், ராஜா தோடர்மால் போன்ற ரஜபுத்திரர்கள் மிகப் பிரசித்தி பெற்றவர்களாயிருந்தனர்.

ஔரங்கசீப் ஆட்சியின் சர்க்கார் நிர்வாகத்தில் பாதிபேர் இந்து உத்தியோகஸ்தர்களாக இருந்தார்கள். ஔரங்கச்சீப்பின் பிரதம பொருளாதார மந்திரிகள் சாகுல்லாகானும், ரகுநாதராவுமாவார்கள். ஒரு சமயத்தில் சக்ரவர்த்தியின் பேட்டிக்காக ஒரு மணி நேரம் காத்திருக்க நேர்ந்து விட்டதற்காக. சக்கரவர்த்தி அலட்சியமாக இருக்கிறாரென்று கருதி வாலிராம் என்ற அவரது அந்தரங்க அமைச்சர் தனது அரசாங்க பதவியை உதறித்தள்ளி துறவறத்தை மேற்கொண்டார், இதையறிந்த ஔரங்கசீப், மனமார வருந்தி தன்னிடம் மறுபடியும் பதவியில் வைத்துக்கொள்வதற்கு எவ்வளவோ முயன்றார். பயனில்லை. ஒருக்கால், அவரது அரசாங்கத்திலுள்ள இரண்டு முஸ்லீமல்லாதவரை, மதத்தின் காரணமாக பதவியில் வைத்துக்கொள்ள வேண்டாமென்று அவரது முஸ்லீம் நண்பர்கள் ஆலோசனைக் கூறினார். அதற்கு அவர் ''அரசியலுக்கும், மதத்திற்கும் சம்பந்தமில்லை. அரசியல் விவகாரங்களில் மதத் துரோகம் என்பது கிடையாது. அவரவர்கள் அவரவரது மதத்தைப் பின்பற்றட்டும்'' என்றார். மற்றொரு சந்தர்ப்பத்தில் மெக்கா நகரத்தின் ஷெரீபூ பொருளதவி வேண்டி தூதரை அனுப்பியிருந்தார். அதற்கு நேரடியாக பொருளுதவி செய்ய மறுத்துவிட்டதோடு ''இத் தேசத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு அந்தப்

பணத்தை வினியோகிக்ககூடாதா?'' என்றார். ''கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார்'' ஆகவே தன்னுடைய முஸ்லீம் உத்தியோகஸ்தர்கள் ''மெக்கா யாத்திரை சென்று, அங்குதான் பணத்தை வாரி வாரி செலவுசெய்ய வேண்டுமென்பது என்ன நியதி?'' என்று கூறி மெக்காவுக்குப் போகிறவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

வங்க நவாபுகள் ஆட்சி காலத்திலும், தக்ஷிண சுல் தான்கள் ஆட்சிகாலத்திலும், இந்துக்கள் சுபீட்சமாக வாழ்ந்தார்கள், வங்க மாகாணத்தில் அலிவர்த்திகான். ஸுராஜ் உத்தௌலா ஆட்சியிலிருந்தபொழுதுதான், ராஜாராம் நாராயணன். அமீன் சந்த் போன்றவர்கள் பிரசித்து பெற்று விளங்கினார்கள்.

தக்ஷிணத்தின் ஐந்து ஷாஹீர்கள் காலத்தில், இந்துக்கள் தளகர்த்தர்களாகவும் ,மன்னர்களை ஆக்கவும் அழிக்கவும் கூடிய ஆற்றல் வாய்ந்தவர்களாகவும் இருந் தார்கள். தக்ஷிண ஆளும் மன்றத்தில் பான்சலேக்கள். யாதவர்கள். மோரேக்கள், நிம்பல்க்காரர்கள் ஆகியவர்கள் ஆட்சியாளர்களாக இருந்தனர், டில்லி சக்ரவர்த்தியை ஷாஜி பான்சலே தன்னிஷ்டத்திற்கான ஒரு இளவரசரை அஹமது நகர வார்சாக்கி நீண்ட நாள் கிடு கிடுக்கச் செய்தார். மாளவ சுல்தான்கள், டில்லி சக்கரவர்த்திக்கு நம்பிக்கையாயிருந்த மதனிராயிடம் அடங்கி ஒடுங்கி இருந்தார்கள். கோலகொண்டா சுல்த்தான் சீதாபதிராயை ''ஷிதாப்கான்'' என கவர்னராக்கினார்.

சுல்த்தானுக்கு நம்பிக்கையான மந்திரிகள் அக்கண்ணா, மாத்தண்ணா என்ற இரு சகோதரர்களாவார்கள். பிஜாப்பூர் கடைசி சுல்தானான இரண்டாவது அடில்ஷா இந்து மதக்கலாச்சாரத்தின் மீது கொண்டிருந்த அளவற்ற பிரேமைக்காக 'ஜகத்குரு' என்றழைக்கப்பட்டார். 'சிவாஜி மகாராஜா, குரானிடத்திலும், மசூதியிடத்திலும் பக்தி செலுத்தினார்'' என்று சரித்திர விமர்சன கர்த்தா காபிகான் கூறுகிறார். சிவாஜியின் கடற்படையில் சித்திசாம்பல், சித்தி மிஸ்ரி போன்ற பிரபல முஸ்லீம் உத்தியோகஸ்தர்கள் இருந்தார்களென்பது உலகப் பிரசித்தம். சிவாஜி பக்தி சிரத்தையோடு ராமதாஸரைக் கண்டு வந்தது போலவே பாபா யாகூபையும் தரிசித்து வணங்கி வந்தார். பிரசித்தி வாய்ந்த பானிபட் (1761) யுத்தத்தில், பீஷ்வாக்களுக்கு விஸ்வாசமாக யிருந்தவர்கள் இப்ராஹிம் கான் கர்டியின் தலைமையிலிருந்த காலாட் படையின் உத்தியோகஸ்தர்களேயாவர்.

இது போன்ற சம்பவங்களிலிருந்தெல்லாம் இந்துக்கள் முஸ்லீம்களுக்கு விரோதிகளென்றோ அல்லது முஸ்லீம்கள் இந்துக்களுக்கு விரோதிகளென்றோ ஒரு சாரார் கற்பிக்க முற்படுவது சரித்திரத்திற்கே, ஒவ்வாத விஷயமாகும்.

# 4. இந்து முஸ்லீம் கலாச்சாரம்

**பொ**துவாக இஸ்லாத்தின் சிறப்பியல்புகளையும், இஸ்லாமிய அரசர்களுடைய ஆட்சியின் தன்மையையும் இதுவரை கவனித்தோம். இனி இந்நாட்டில் ஏற்பட்ட இந்து முஸ்லீம் கலாச்சார வாழ்வைக் குறித்து குறிப்பாக கல்வி, சிற்பம், ஓவியம், இசை, பொது விஷயங்கள் என்கின்ற முறையில் மேலாக கவனம் செலுத்துவதே போதுமானதாகும். முதலில் இஸ்லாமிய ஆட்சியாளர்கள் கல்வி மேம்பாட்டிற்காக எடுத்துக் கொண்ட பிரயாசைகளை கவனிக்கு முன் நம் தேசத்திலிருந்த பழங்கால கல்வி முறையை கவனித்து மேற்செல்வோம்.

ஆதிகால முதற்கொண்டு இந்திய கல்வி நிலையங்கள் இந்திய பண்பாட்டிற்கும், கலாச்சாரத்திற்கும் சிறந்த சாதனங்களாக இருந்திருக்கின்றன. மகா பாரத வரலாற்றின்கண் காணப்படும் நைமி சாரண்ய வனத்தில் ரிஷிகள். தபோதனர்கள் அக்கால மக்களுக்கு கல்வி போதித்தனர் என்று அறிகின்றோம். சுனகாதி முனிவர்கள் தேசத்தின் பல்வேறு பாகங்களினின்று வந்த பதினாயிரம் மாணவர்களுக்கு அக்காலத்தில் கல்வி கற்பித்தார்களென்று கூறப்படுகிறது. ஆகவே அக்கால ரிஷி ஆசிரமங்கள். மாணவர்களின் கல்விச்சாலைகளாகவே திகழ்ந்தன என்று துணிந்து கூறலாம்.

புத்தர் காலத்தில் பௌத்த மடங்கள் கல்வி ஓவியங்களுக்கு சிறந்த இடங்களாக இருந்தன. இக்கால சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாக்களை போன்ற பௌத்த கால பட்டமளிப்பு விழாக்கள் மிகச் சிறந்தனவாகும். ஐந்தாவது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த பாஹியான் எண்ணற்ற பௌத்த மடாலயங்களில், பல திறப்பட்ட சமயத்தார் ஒன்று சேர்ந்து கல்வி கற்று வந்ததை குறிப்பிடுகிறார்.

ஏழாவது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த ''யுவான் ஸுவாங்'' ஐயாயிரம் பௌத்த மடாலயங்கள் இருந்ததாகவும் அவைகளில் இருபது லட்சத்துக்கு அதிகமான பிக்ஷுக்கள் இருந்ததாகவும் கூறுகிறார். இந்த பௌத்த மடாலயங்களினின்று தோன்றியதே தான் நாளந்தா, ஓடாந்தாபுரி, விக்ரம சீலா போன்ற சர்வ கலாசாலைகள் ஆகும். தக்ஷ சீலம் காசி, உஜ்ஜயினி, அமராவதி போன்ற சர்வகலாசாலைகள், மேற்கண்ட சர்வகலாசாலைகளுக்கு முந்தியவையாகும். தக்ஷசீலம். வடநாட்டு சர்வகலாசாலை நகரங்களிலேயே பழைமையான முதல் நகரமாகும் தக்ஷ சீல சர்வகலாசாலையின் பல்வேறு கலாசாலைகளில் வேத முதல் பதிணென் கலைகளும், விசேஷமாக வைத்தியக் கலையும், போதிக்கப்பட்டு வந்திருக்கிறது. அக்கால சர்வகலாசாலைக்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்து மட்டுமல்ல, ஆப்கானிஸ்தானம், மத்திய ஆசியா, ஆசியா மைனர், கிரீஸ் போன்ற வெளிநாடுகளினின்றும் மாணவர்கள் வந்து பயின்றிருக்கின்றனர். கிரேக்க. ''ஹெலியோ'' ''டோரஸ்'', அப்பலோனியஸ், போன்ற தத்துவஞான பேரறிஞர் பலர் தக்ஷ

சீலத்தில் பயின்றவர்களே. ஏழாவது நூற்றாண்டின், சிறந்த இலக்கிய கர்த்தாவான பானினியும், மகத தேச அரச வைத்தியரான ஜீவகனும் இக்கலாசாலையில் படித்தவர்களே. தக்ஷசீல சர்வகலாசாலை ஆதியில் இந்து கலாச்சாரத்திற்கு உறைவிடமாகயிருந்தது. எனினும் பிற்காலத்தில் அது புத்த கலாச்சாரத்திற்கு உறைவிடமாகி விட்டது. இச்சர்வகலாசாலையானது ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகள் நீடித்து நின்று இந்தியாவின் பல்வேறு பாகங்களுக்கும் கலாஞானச் சுடரொளியாகப் பிரகாசித்தது. காசி புத்தர் காலத்திலேயே நாடு முழுதும் புகழ்கொண்டு பழமை பெற்றிருந்தது. அங்கு சர்வகலாசாலை உருவகத்தில் இல்லாமலிருந்ததென்றாலும் நடைமுறையில் கல்வியின் உயர்ந்த ஞானத்திற்கு சிறந்த இடமாகத் திகழ்ந்திருந்தது. இந்து கலா ஞானத்தின் சர்வகலைகளும், இங்கு எல்லா காலங்களிலும் பண்டிதர்களால் போதிக்கப்பட்டன. காசியிலுள்ள ''சாரநாத்'' பௌத்த கலைகளுக்கு சிறப்புற்றிருந்தது. ஆதிகாலத்திலேயே நாளந்தா, ஓடந்தாபுரி, விக்ரமசீலா, தக்ஷசீலா, காசி உஜ்ஜயினி, அமராவதி ஆகிய சர்வகலாசாலைகள் மிக்கப் புகழ் பெற்றவைகள்.

பழங்கால சர்வகலாசாலைகளில் மகத தேசத்தைச் சார்ந்த நாளந்தா சர்வகலாசாலை உலகிலேயே முதன்மை பெற்ற சர்வகலாசாலையாகும். அக்கால நாளந்தா சர்வகலாசாலையானது இக்கால ஆக்ஸ்பொர்ட், காம்பிரிட்ஜ், பாரிஸ், ஹார்வர்டு சர்வகலாசாலைகளை ஒப்ப சிறந்த

தொரு சர்வகலாசாலையாகும். அது சர்வதேச புகழ் பெற்றதாகும். அதுமட்டுமல்ல, கல்வித்துறையில் அது சர்வதேசீய தலைமை ஸ்தானமாக விளங்கியது. அதற்கு இந்தியா முழுமையும் இருந்த மன்னர்களும், குறுநில பிரபுக்களும் மட்டுமல்லாது கடல்கடந்த "இந்து" குடியேற்ற நாடுகளின் ஆட்சியாளர்களும் பொருளுதவி செய்து வந்திருக்கிறார்கள்.

இந்தியாவில் பலதிறப்பட்ட மகோன்னத சர்வ கலாசாலைகள் ஆதிகால முதற்கொண்டு இருந்துவந்தன. தக்ஷசீலத்திலிருந்த சர்வகலாசாலையானது வைத்திய சாஸ்திரத்திற்கும், உஜ்ஜையினியிலிருந்த சர்வகலாசாலை யானது கணிதம், வானசாஸ்திரம், இகலோக ஞானங் களுக்கும் பேரும் புகழும் பெற்றது. காஞ்சி, வல்லாவி, விக்ரமசீலம், சர்வகலாசாலைகள், நாளந்தா சர்வகலா சாலை புகழ் கொண்டிருந்த காலத்திலேயே சிறப் புற்றிருந்தன.

இந்தியாவின் தென்கோடி முதல், காஷ்மீரப் பெஷாவர் போன்ற வட எல்லை வரையிலுள்ளபலதிறப் பட்ட பல்வேறு இன, சமய, சமூக, மக்கள் நாளந்தா சர்வகலாசாலையில் பயின்றதோடல்லாமல் சீனா. ஜப் பான், கொரியா, ஜாவா. சுமத்ரா, திபத். மங்கோலியா பொக்காரா, போன்ற தேசங்களிலிருந்தும் மாணவர்கள் சாதாரணமாக வந்து குழுமியிருந்தனர். சர்வகலாசாலை யின் பதினாயிரம் கட்டிடங்களில் 8500 கட்டிடங்களில் மாணவ விடுதிகளும் 1500 கட்டிடங்களில் பேராசிரியர் விடுதிகளும் அமைந்திருந்தன. நாளந்தா சர்வகலா

சாலையில் வேத உபநிஷத்துகளும், தத்துவ சாஸ்திரங் களும், பலதிறப்பட்ட கலாஞானங்களும் போதிக்கப் பட்டு வந்தன. சீன யாத்திரிகர். ''ஹுவான் ஸுவாங்'' நாளந்தாவின் அத்யட்க்ஷ வங்கப்புதல்வன் சீலபத்தர ரிடம யோக தத்துவ சாஸ்திரம் பயிலவே இந்தியாவிற்கு வந்தார் என்பது குறிப்பிட வேண்டியதாகும். அக்கால நாளந்தா, சர்வ சமரஸ சர்வ கலா ஸ்தாபனமாகத் திகழ்ந்தது போற்றற்குரியது,

''நாளந்தா சர்வ கலாசாலை எட்டு கல்லூரிகளைக் கொண்டதாகத் திகழ்ந்தது. இவைகளில் ஒன்றை சுமத்ராவின் அரசர் பாலபத்திர தேவர் கட்டியமைத் தார். நாளந்தாவின் கட்டிடங்கள் நான்கடுக்கு மாட மாளிகைகளால் அமைக்கப்பட்டிருந்தது. சர்வகலாசாலை யைச் சுற்றி மதில் சுவர்கள் இருந்தன. ஒரு பெரிய வாசலும், அதனுள் எட்டு வாசல்களையும் கொண்டு திகழ்ந்தது. அரைகளோ விண்மட்டம் உயர்ந்திருந்தன. மண்டபங்களும், தூண்களும், மணிகளாலும் பளிங்கு களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன'' என்று சீன யாத்ரீகர் ஹுவான் ஸுவாங் எழுதுகிறார்.

அக்கால சர்வகலாசாலைகள் கல்லும், மண்ணும், வனப்பும், ஜோடிப்பு மட்டும் கொண்டு திகழவில்லை. பல் வேறு கலா ஞானங்களைக் கற்றுத் தேறுவதற்கு சகல வாய்ப்பும் அங்கு இருந்தன. நாளந்தா சர்வகலாசாலை யில் மாணிக்கக்கடல் மாணிக்க சமுத்திரம் மாணிக்கக் குவியல் என்ற முப்பெரு நூல்நிலையங்களிருந்தன. அவை அக்கால உலகின் கலைச்செல்வங்கள்னைத்தும் தன்ன கத்தே கொண்டிருந்தது.

அக்காலத்தில் பதினாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் அக்கலாசாலைகளில் பயின்றார்கள். மத்திய ஆசியா, சீனா, கொரியா போன்ற மற்ற பௌத்த உலகத்தின் எல்லா நாடுகளிலிருந்தும் மாணவர்கள் ஒருங்கு திரண்டு இந்நாட்டில் வந்து குழுமியிருந்தனர். சீன யாத்ரீகரான முதலாவது டீசிங் ஹுனா (கொரிவா மதகுரு) ஆலமரத்தடியிலிருந்து ஒரு குறிப்பை எழுதியுள்ளார் என்று எழுதும் வாசகத்திலிருந்து ''ஹுனா'' நாளந்தா சர்வகலாசாலையில் படித்தவர் எனத் தெரியவருகிறது, மற்றும் ஒரு கொரிய மதகுரு ''ஆரிய வர்மன்'' என்ற பெயரால் தன்னை அழைத்துக் கொண்டு புகழோடு திகழ்ந்தார்.

நாளந்தா சர்வகலாசாலை புத்த பண்பாட்டில் திகழ்ந்ததென்றாலும் மற்றஇந்திய சர்வகலாசாலைகளை யொப்ப பொது ரீதியையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ''ஹியான் ஸியாங்'' சுயசரித வரலாற்றினின்று சாங்கியம் உட்பட பல்வேறு தத்துவ சாஸ்திரங்களும், தர்க்க சாஸ்திரம், கணிதம், இலக்கியம், முதலானவைகளும் மிகச்சிறந்த முறையில் இங்கு பயிற்சிக்கப்பட்டதாகக் கொள்ளலாம்

''விவாதங்களில் பேரும் புகழும், விரைவில் பெற பல்வேறு பட்டணங்களிலிருந்த கற்றறிருந்த மேதைகள் எண்ணற்றோர் வந்து குவிகின்றனர்'' என்று அதே யாத்ரீகர் கூறுகின்றார்.

நாளந்தா சர்வகலாசாலையின் தலைமைப் பேராசிரியராகத் திகழ்ந்த சீலபத்ராவுக்குப் பின் வந்த தர்ம

பாலர் காஞ்சிபுரத்தின் தமிழ்ப்பேரறிஞர். மற்ற ஜீன மித்ரர் ஆந்திரராவர். ஹியான் வியாங்கின் குருநாதரான சீலபத்ரர் அஸ்ஸாம் பகுதியைச் சார்ந்தவராவர். இவர் கல்வி, கேள்வி மேம்பாட்டினால் பிராமணரானவர். பிறவியினால் அல்ல.

நாளந்தா சர்வகலாசாலையானது இக்கால உயர்ந்த சர்வகலாசாலையை ஒப்ப இருந்ததோடல்லாமல் உயர்ந்த கற்றறிந்த மேதைகளை வெளி நாடுகளுக்கு அனுப்பி இந்திய கலாஞானத்தை அங்கெல்லாம் பரப்பியிருக்கிறது. திபெத் தேசத்திற்கு வரிசை வரிசையாக படித்த பிக்ஷுக்கள் போய் அங்கு வாழ்ந்து வந்தனர். நாளந்தா சர்வகலாசாலையின் சிறந்த பொக்கிஷங்கள் பல இன்னும் திபெத்தில் இருந்து வருகின்றன.

எட்டாவது நூற்றாண்டில் சீனாவுக்குச் சென்ற சுப்ஹாரசிம்ஹன் இந்திய நாட்டின் கலைச் செல்வத்தை சீன மொழியிலேயே ஆக்கித் தந்து உதவி இருக்கிறார். குறிப்பாக சொல்லவேண்டுமானால் இந்திய கலாச்சாரமானது எட்டாவது நூற்றாண்டில் நாளந்தா சர்வகலாசாலையால், ''புத்த ஆசியாக் கண்டம்'' முழுதும் வியாபித்திருந்தது என்று கூறி விடலாம்.

விக்ரமசீல சர்வகலாசாலை வங்க அரசர் தர்மபாலரால் சிருஷ்டிக்கப்பட்டதாகும். அரசர் தர்ம சீலருக்கே விக்ரமசீலர் என்ற வீரப்பெயரும் உண்டு. திபெத்திய சரித்திர ஆசிரியரான ''தாரநாத்'' வங்கநாட்டின் விக்ரமசீலர் ஐம்பது மத்திய கல்வி ஸ்தாபனங்களை நிறுவினார்

என்று கூறுகிறார் விக்ரமசீல சர்வகலாசாலையின் பட்டமளிப்பு விழாவுக்கு வங்க மன்னரே தலைமை தாங்கி பட்டமளித்து வந்தார். இச்சர்வகலாசாலையில் ஆசிரியர் குழுவினர் 114 பேர்களும், இந்தியாவுக்கு உள்ளும் வெளியிலுமான மாணவர்கள் மூவாயிரம் பேரும் இருந்தனர். இச்சர்வகலாசாலை இந்து, பௌத்த கலாச்சாரங்களை இணைப்பதற்கு பேருதவியாய் இருந்தது. இச் சர்வகலாசாலை தீபங்கர் அத்தியக்ஷகர் காலத்தில் மிகச் சிறந்திருந்தது தீபங்கர் ஸ்ரீவிஜயா (இன்றைய சுமத்ரா) வுக்குச் சென்று பௌத்த கலாச்சாரத்திற்கு சிறந்த புத்துயிரளித்து வந்தார். இவர் திபெத் அரசரின் வேண்டுகோளுக்கிணங்கி திபெத்துக்குச் சென்று புத்த கலாஞானத்திற்கு பெருஞ் சேவை செய்திருக்கிறார். திபெத்தின் அநேக மடாலயங்களின் இன்றைய தினமும் இவரை புத்தருக்கு அடுத்தபடியான மஹானாக மதித்து வணக்கம் செலுத்துகிறார்கள்.

பிற்காலத்தில் வங்கத்தில் ஏற்பட்ட நவதீப கலாசாலையானது பல நூற்றாண்டுகள் வரை, சமஸ்கிருத கலைக்கு இந்தியாவிலேயே தாயகமாய்த் திகழ்ந்தது. தெற்கே தமிழ் நாட்டிலிருந்து குறிப்பாக நியாய தத்துவ சாஸ்திரம் கற்றுணர இங்கு மாணவர்கள் சென்று வந்தனர்.

வடநாட்டில் பௌத்த மடாலயங்கள், கல்வி, கலாஞான கலாச்சாரங்களுக்கு இடம் பெற்றிருந்தது போல் தென்னாட்டின் ஆலயங்கள் அதற்கென்று

இருந்தன. தென்னாட்டின் பிரக்கியாதி பெற்ற ஆலயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சர்வகலாசாலைக்கு ஒப்ப சிறந்து விளங்கின. அக்கால ஆலயங்களில் இலவச உணவு வசதியும் பொதுமக்களுக்கான வைத்திய வசதியும் இருந்து வந்தன. இதனால் நாட்டில் பல்வேறு பாகங்களிலிருந்தும் மாணவர்கள் படிப்புக்காக வந்து குழுமினர். மற்றும் ஆலயங்களில் கலை இசை மண்டபங்களும், வியாக்கியான, வியாகரண மண்டபங்களும் அமைக்கப்பட்டு ஆலயங்கள் கலாக்ஷேத்திரங்களாகவும், கலைப்பண்ணைகளாகவும் திகழ்ந்திருந்தன.

காஞ்சி சர்வகலாசாலையில் நையா பாஷியாவின் கர்த்தாவும் தர்க்க சாஸ்திர விற்பன்னருமான ''வத்சாயனாவும்,'' தின்னகரரும்,'' ''மௌரியவர்மரும்'' படித்து தேறியவர் ஆவார்கள். நாளந்தா சர்வகலா சாலையை ஒப்ப தென்னாட்டில் காஞ்சி சர்வகலாசாலை மிகப்பெருமை பொருந்தியதாகும். ஹியான் ஸியாங் ஏழாவது நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த சீன யாத்ரீகர், காஞ்சியில் மட்டும் நூறு பௌத்த விஹாரங்களும் சமணப்பள்ளிகளும் இருந்ததாகவும், பொதுவாக பெரும்பாலான மக்கள் சைவவைணவ கொள்கைகளைக் கடைப்பிடித்ததாகவும் காணப்படுகிறார்கள் என எழுதியிருப்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியதே. காஞ்சி சர்வகலாசாலையைத்தவிர தென்னாட்டில் அனேக உயர்தர கலாசாலைகளும், கல்லூரிகளும் ஆங்காங்கே இருந்திருக்கின்றன. குறிப்பாக சொல்ல வேண்டுமானால் ''ராஷ்டிரகூட'' வம்சத்தைச் சேர்ந்த

மூன்றாவது கிருஷ்ணரின் வெளிநாட்டு மந்திரியின் பேராதரவால் பீஜாபூரில் சிருஷ்டிக்கப்பட்ட ஸலகோடி கல்லூரி மிகச்சிறந்த தொன்றாகும். இக் கல்லூரி மாணவர்களின் இலவச உணவு வசதிக்காக 27 கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தன. இக் கல்லூரியின் பராமரிப்புக்காக அந்நாட்டு மக்கள் தங்கள் குடும்ப விசேஷ காலங்களில் எல்லாம் பொருளுதவி புரிந்துவரும் வழக்கம் இருந்துவந்தது. தென்னாற்காட்டிலிருந்த எண்ணாயிரம் கோவில், கல்லூரியில் 340 மாணவர்களுக்கு 300 ஏக்கர் மான்ய நிலம் இருந்திருக்கிறது. மாணவர்களுக்கு தங்க இடமும், உண்ண உணவும், உடுக்க உடையும் இலவசமாகவே அளிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாணவனுக்கும் தினசரி நாலரைச் சேர் படி நெல் வீதம் கணக்கிட்டு வழங்கி வந்ததோடு, மற்ற சிலவுகளுக்கென ஆண்டிற் கொருமுறை அரைக் கழஞ்சிப் பொன் வேறு கொடுத்தார்கள். இங்கு பத்து பல்வேறு பிரிவான கல்வி போதனைகள் அளிக்சப்பட்டு வந்தன. இதற்கு பதினைந்து ஆசிரியர்ஃள் அமர்த்தப்பட்டிருந்தனர்.

செங்கற்பட்டு ஜில்லாவிலிருந்த திருமுக்கூடலில் அறுபது பேர் படித்துப் பயனடைய உதவியாய் இருந்திருக்கின்றன.

மக்க்ளின் கல்வி அறிவு மேம்பாட்டிற்காக கோவில்களில் கல்விச்சாலைகள் ஏற்பட்டதுபோலவே உடல் நலத்திற்காக மருத்துவ சாலைகளும் கோவில்களுக்

குள்ளேயே இருந்திருக்கின்றன. பதினோறாம் நூற்றாண்டில் உள்ள ஒரு சோழர் கல்வெட்டிலிருந்து ''15 படுக்கைகள், ஒரு ரணவைத்தியர், ஒரு மருத்துவர், இரண்டு தாதியர், இன்னும் எல்லோரையும் வைத்து அதற்குத் தகுந்த மருந்துகளும் மூலிகைகளும்கூட சேர்த்து வைக்கப்பட்டு ஒரு சிகிச்சை சாலை ஒன்றை நடத்தி வந்திருக்கிறது'' ஒரு கோவில் என்று தெரிய வருகிறது. இன்னும் கோவில்களில் கால்நடை மருத்துவமும் இருந்திருக்கின்றன. இதனையெல்லாம் நிர்வகிக்க, தக்கவர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர்.

13-வது நூற்றாண்டில் இந்நாட்டிற்கு வந்த துருக்கியர்கள் முதல் 18வது நூற்றாண்டின் இறுதியில் வந்த மொகலாயர்கள்வரை அனைவருமே இமயமுதல் குமரி வரை தங்கள் செல்வாக்கைப் பரப்ப வேண்டுமென்றும், அதனால் தங்களின் மதத்தையும், சிறந்த கலையையும், பண்பாட்டையும் வளர்க்க வேண்டுமென்றும் கருதினார்கள்.

''சீனாவுக்கு சென்றாவது கல்வியை பயிலுங்கள்'' என்று நபிகள் நாயகம் சொன்ன வாக்கியம், அராபியர்களை கல்வி கேள்விகளில் அபார பிரேமை கொள்ள செய்தது நபிகள் காலத்திலேயே அராபியர்கள் கல்வி ஞானத்திற்காக உலகத்தின் மூலை முடுக்குகளையெல்லாம் ஆராயத் தலைப்பட்டனர். அக்காலத்திலேயே அராபியர்களுக்கு இந்தியாவின் கல்வி ஞானமும், கலைச் செல்வமும் சொந்தமாகி விட்டன.

கலிபா மான்சூரின் அரசவைக்கு (753-774) சிந்து தேசத்திலிருந்து ராஜீய தூதர்களும், கற்றறிந்த பேரறிஞர்களும் சென்று வந்தனர். இக்காலத்தில்தான் பிர்ம குப்தனின் வான சாஸ்திரமும், அவனது சித்தாந்தமும், கண்டகதயாகாவும் பாக்காதுக்கு எடுத்துச் செல்லப் பட்டன. அவை அராபிய மொழியில் கலிபா மான்சூரின் விருப்பப்படியே மொழி பெயர்க்கப்பட்டன.

கலீபா ஹாரூன் (786-808) தன்னுடைய அரசவைக்கு அக்கினியை வழிபட்டு வந்த மூதாதையர்களைக் கொண்ட தன்னுடைய அமைச்சர்களின் ஆலோசனைக்கிணங்க இந்திய பேரறிஞர் பலரை வரவழைத்திருந்தார். இக்காலத்தில் அரண்மனை வைத்தியர்களாகவும், சர்க்கார் ஆஸ்பத்திரிகளின் பிரதம வைத்தியர்களாகவும், இந்துக்கள் நியமிக்கப்பட்டனர். இக்கால சமஸ்கிருத நூல்களிலிருந்து வைத்தியம், விஷசிகிச்சை, தத்துவ சாஸ்திரம், வான சாஸ்திரம் முதலான புத்தகங்கள், அராபிய மொழியில் ஆக்கப்பட்டன. இக்கால அராபியர்கள் இந்திய கணித சாஸ்திரத்தை கண்ணின் கருமணி என மதித்தார்கள்.

கஜனி மகமது காலத்தவரான அல்பேரூனி சமஸ்கிருதத்தின் சகல கலைகளையும் சரிவரப் பயின்றிருந்தார். அவரது கல்வித் திறனுக்கும், மேதைக்கும் எடுத்துக் காட்டாக விளங்குவதுதான் "கிட்டால் உல் ஹிந்த்" என்ற புத்தகமாகும். அவரது புத்தகத்தில் இந்துக்களின்

கலா ஞான தத்துவம், கணிதம், வைத்தியம், வான சாஸ்திரம், இதிகாசம், புராணம். இலக்கணம், இலக்கியம் ஆகியவைகளின் ஞானங்கள் கையாளப்பட்டுள்ளன.

அல்பேரூனியின் சிறந்த நடுநிலைமைப் போக்கு பாராட்டற்குறியது அவர் கஜனி மகமதுவைப் பற்றி ''தேசத்தின் சுபீட்சத்தை அடியோடு நாசமாக்கியவர்; ஹிந்து முஸ்லீம் விரோத மனப்பான்மை வளர அதுவே ஒரு காரணமாகும்.'' எனக்கூறியுள்ளார், என்றாலும் கஜனி மகமது கல்வியிற் சிறந்த கூட்டத்தையும், அறிஞர் நட்பையும் பெரிதும் விரும்பி, அவரது சபையில் அல்பேரூனி பைஹாக்கி பரூக்கி போன்ற அறிஞர்களை அதரித்து, ஆண்டு தோறும் இருநூறு ஆயிரம் தங்க நாணயங்களைச் செலவழித்து வந்தார், கஜனியின் மிகப் பெரியதொரு புத்தகசாலையும், பொருட்காட்சிசாலையும், சிறந்த கல்லூரியும் கட்டியிருந்தார், இவைகளெல்லாம் ஒழுங்குபெற நடைபெறுவதற்கு உயர்ந்த சம்பளங்கள் கொடுத்த ஆசிரியர்களை வைத்திருந்தார். இப்பேர்ப்பட்டவர் மாமூதுஷா நாமா என்னும் உயரிய காவியத்தை எழுதிய பிர்தௌஸிக்கு ஆறுபதினாயிரம் தங்க நாணயங்கள் கொடுப்பதாகச் சொல்லி அறுபதினாயிரம் வெள்ளிக்காசுக்களைக் கொடுத்து ஏமாற்றினாரென ஒரு சாரார் சொல்வது சரியாகாது.

பிரோஜ்ஷா துக்லக் *(1353-1388)* கங்ரா வெற்றியிலிருந்து கிடைத்த *1390* சமஸ்கிருத வால்யூம்களையும் மொழி பெயர்க்க ஏற்பாடு செய்தார். இவைகளில்

ஒன்றுதான் இந்து தத்துவ சாஸ்திரத்தைத் தெளிவுபடுத்தும் 'அமிர்த குண்டம்' என்ற பெர்சிய நூல். இது இங்கிலாந்தின் இந்திய காரியாலயத்தில் இருக்கிறது.

பெர்சிய கவிஞரான அமிர்குஸ்ராவ், முஸ்லீம் கலா ஞானத்தை இந்திய மயமாக்க விரும்பினார். இவர்தான் தன்னுடைய கவிதையில் முதல் முறையாக இந்து வார்த்தைகளையும், இந்து கற்பனைகளையும், இந்து தத்துவங்களையும் கையாள ஆரம்பித்தார். இவருக்கு இந்திய கலாச்சாரத்தின் மீதிருந்த மோகம் அளவிடற்கரியது.

அனேக இஸ்லாமிய மன்னர்கள் சமஸ்கிருத கவிஞர்களை ஆதரித்து வந்தார்கள் என்று கீழ்க்கண்டவைகளிலிருந்து நன்கு விளங்குகிறது.

கவி வித்யாகதி வங்காள நாஸிர் ஷாவுக்கு (1282-1325) ஒரு கவியை அர்ப்பணித்துள்ளார். அதில் அவர் அரசரின் நீதியையும், நேர்மையையும் புகழ்ந்திருக்கிறார். உதயராஜா என்பவர் (1458-1469) தன்னுடைய "ராஜா வினாத காவியம்" என்ற நூலில் அஹமதாபாத்தின் மன்னன் மகமது பெகதாவைப் பாராட்டிப் போற்றியிருக்கிறார். தகப்பனைப் போன்று குடிகளிடத்தில் பேரன்பு கொண்டிருந்தார் என்று அம்மன்னனை அவர் குறிப்பிடுவது கவனிக்கற்பாலது.

வங்காள ஹுசன்ஷா, மாலதாரவாசு என்பவரை பாகவதம், மகாபாரதம் முதலியவற்றை வங்க பாஷையில் மொழி பெயர்த்துதவ ஏற்பாடு செய்தார்.

அக்பர் ஆட்சியில் சமஸ்கிருதமும், ஹிந்தியும் செல்வாக்கடைந்தன. இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் சேர்த்து கலா நிலையங்களை நிறுவிய முதல் முஸ்லீம் மன்னர் அக்பரேயாவர். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி பெறுவதற்காக சர்க்கார் மான்யமும் வழங்கியது அக்பரே. "இந்திய மனித் வர்க்கத்தின் மேம்பாட்டிற்கு சேவை செய்ய பொதுஜனக் கல்வி அத்தியாவசியமானது" என்று அக்பர் கருதினார். அக்பர் தன்னுடைய நண்பர் அபுல் பெய்ஜீயினுடைய அனுசரணையைக் கொண்டு சிறந்த கலாச்சார சீரமைப்புக்கான பல நூல்களைக் கொண்ட நூல் நிலையமொன்றைத் தோற்றுவித்தார்." இதனால் எண்ணற்ற சமஸ்கிருத புத்தகங்கள் பெர்சிய மொழியில் ஆக்கப்பட்டன. அக்காலத்தில்தான் ராமாயணம், மகாபாரதம், அதர்வண வேதம், நளதமயந்தி கதை, பகவத்கீதை, யோகவசிஷ்டம், ஹரிவம்ச சிங்கசன் பட்டிசி, பஞ்சதந்திரக் கதைகள் முதலான புத்தகங்கள் பெர்சிய மொழியில் இயற்றப்பட்டதாகும்.

அக்பர் ஆட்சிமன்றத்தில் ஐம்பத்தெட்டு சமஸ்கிருத வித்வான்களும், ஜஹாங்கீரின் ஆட்சி மன்றத்தில் நாற்பத்தெட்டு வித்வான்களும், ஷாஜஹான் ஆட்சி மன்றத்தில் அறுபத்து மூவருமிருந்தனர். இவர்களன்றி தக்ஷிண அரசர்களிடத்திலும், தென்னிந்திய மன்னர்களிடத்திலும், அநேக வித்வான்களும், பண்டிதர்களும் ஆதரவு பெற்று புகழோடு வாழ்ந்தனர்.

மொகலாய மன்னர்களுடைய ஏற்பாட்டால் இந்து சட்ட திட்டங்கள், சமூக பழக்க வழக்க விவகாரங்கள் மதச் சடங்குகள் சம்பிரதாயங்கள் முதலியன ஒழுங்காகத் தொகுக்கப்பட்டன. அக்பர் தன்னுடைய நீதி நிர்வாகத்தில் இந்து பஞ்சாயத்து முறைகளைப் பின்பற்றினார்.

மொகலாய மன்னர்களின் ஏற்பாட்டால் ரகு நந்தனன் கமலாகரபட்டர், பட்டோஜி தீக்ஷதர், மித்ர மிஸ்ரா, ஆனந்த தேவர், ப்ரதாபருத்ர தேவர், வைத்திய நாத தீக்ஷதர் ஆகியோர் இயற்றிய இந்து சட்ட ஞான விவகாரங்கள் இன்றைய தினமும் உயர்ந்த நீதி ஸ்தலங்களில் அங்கீகரிக்கப்படுகின்றன. சமஸ்கிருதத்தில் வான சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், மதகிரந்தங்கள், நித்ய கர்மானுஷ்டானங்கள் முதலியனவும், இலக்கியமும், சமஸ்கிருத பெர்ஸிய அகராதியும், வேதகால வர்த்தைகளுக்கு அட்டவணையும், பொருளும் தொகுக்கப்பட்டன. காஷ்மீர், பீரார், மாளவம், வங்காளம், ஆகியவற்றின் ஆட்சியாளர்கள் நீங்கலாக, மொகலாய அராபியர்கள் காலத்தில் மட்டும் கணக்கிட்டுப் பார்த்தால் சுமார் 2500-க்கு அதிகமான உயர்ந்த சமஸ்கிருத புத்தகங்கள் புதிதாக ஆக்கப்பட்டனவென்று தெரியவருகிறது.

கவிபானுகரா ஷேர்ஷா மன்னரைப் புகழ்ந்து பாடியிருக்கிறார். அக்பர் காலத்திய சிறந்த சமஸ்கிருத கவியான கோவிந்தபட்டர், அக்பர்கால காளிதாசர் என்று அழைக்கப்பட்டார். ஷாஜஹான், தாராஷெளகோ ஆகியவர்களுக்கு மிகப்பிரிய கவிஞராக இருந்தவர் ஜெகனாத பண்டிதர் என்ற தெலுங்கு பிராமணராவார். நேபாள இந்து அரசர், ஒருமுறை பண்டித ராஜரை அவரது ஆஸ்தான மண்டபத்திற்கு அழைத்தபோது பண்டிதர் டில்லி மொகலாய சக்ரவர்த்தியை 'ஜகதீஸ்வரன்' என்று குறிப்பிட்டுப் புகழ்கிறார்.

மொகலாய சக்கரவர்த்திகளுடைய மிக தாராளப் போக்கு சர்வசாதாரண பழமொழிக்கு இலக்காகி இருக்கிறது. 16-வது நூற்றாண்டில் கன்னட சாது ஒருவர் "டில்லிமன்னர்களிடம் அற்பத்திற்காக யாசிப்பது தர்மமா? அப்படியானால் இப்பிரபஞ்ச சர்வேஸ்வர

னிடத்தில் அற்பத்திற்காக எதையேனும் பிரார்த்தனை செய்வீர்களா?'' என்று கேட்கிறார்.

ஔரங்கசீப்பின் மாமன் ஷயஸ்தகானை ரசகல் பதுர்மா என்ற நூலாசிரியரான சதுர்புஜன் பாராட்டியுள்ளார், ஷயிஸ்தகான் சமஸ்கிருத கவிதை புனைவதில் மகா சமர்த்தர் இவர்தான் தன்னுடைய தாரா என்ற மருகர் சமஸ்கிருத கலையும், தத்துவ சாஸ்திரமும் பயில வேண்டுமென்று ஏற்பாடு செய்தார்.

இளங்கோ தாராஷுகோ இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக தன்னையே தியாகம் செய்த வீரர். தன்னுடைய மாமனிடமிருந்து இந்துக்களிடத்தில் ப்ரீதியும் சமஸ்கிருதத்தில் சிரத்தையும் கொள்ளக் கற்றுக் கொண்டார். இந்துமத தத்துவங்களை பாபுலால்தாஸ் அவர்களிடம் படித்துத் தேறினார். இந்தியாவின் இரு பெரும் சமுதாயங்களும் ஒற்றுமையோடு நின்று நிலவ தன் வாழ்வையே அர்ப்பணம் செய்தார். இவர் கீதை, ராமாயணம், யோகவசிஷ்டம், உபநிஷத்துகள் முதலியவற்றை மொழி பெயர்த்துள்ளார். மற்றும் வேதாந்த சூபிஸத்தைப்பற்றி விரிவுரை எழுதியுள்ளார். 'மஜ்மால் பாஹ்ரே' என்ற 'சாகரங்களின் இணைப்பு' எனும் இந்து முஸ்லீம் மத ஆராய்ச்சி நூலும் இயற்றி இருக்கிறார். இவர் வேதங்களை புண்ணிய நூல்கள் என்று நம்பினார். தன்னுடைய மோதிரத்தில் ஆண்டவனைக் குறிக்க ''பிரபு'' என்று பெயர் பொறித்திருந்தார்.

ஔரங்கசீப்பின் மகள் ஜெபுன்னிசா பேகம் இந்து மதத்தில் பற்றுக் கொண்டிருந்தாள்.

ஔத் நவாப்புகள் தங்களுடைய கொடியில் சூரியன், மீன், பசு ஆகிய இந்து சின்னங்களை பொறுத்திருந்தனர். அவர்கள் ஹிந்து பிரஜைகளோடு 'வசந்த பஞ்சமி' என்ற நோன்பு நோற்றனர்.

பொதுவாகப் பார்க்குமிடத்து 11-வது நூற்றாண்டி லிருந்து இந்து முஸலீம் கலாச்சார ஒற்றுமைக்காக முஸ்லீம் ஆட்சியாளர்கள் பேருதவி புரிந்து வந்திருக் கிறார்களென்பது பிரசித்தம்.

தோடர்மால், பெர்சிய மொழியை அரசாங்க மொழியாக அமைத்தார். இந்துக்களின் அரசியல் முன்னேற்றத்திற்காக, இவர்கள் அம்மொழியை கற்க வசதிகளை செய்தார். இந்துக்களும், பெர்சிய மொழி யில் கதைகள், காவியங்கள், கவிகள் முதலியன இயற்றத் தலைப்பட்டனர். இந்துக்கள் அதுவரை உதாசீனம் செய்துவந்த சரித்திரம், சுயசரிதம் ஆகியவைகளை பெர்சிய ஆசிரியர்களைப்போன்று இயற்ற ஆரம்பித் தனர். மொகலாய ஆட்சி காலத்தில், இந்திய சரித்திர கலா ஞானத்தை ராய்பிருந்தாவன் தாஸ், சுஜன்ராய், பீம்சேனன், சந்திராபன், லக்ஷ்மி நாராயணன் ஆகிய வர்கள் பெர்சியமொழி மூலமாக அபிவிருத்தி செய்திருக் கின்றனர். இதனையொட்டி மராத்தியர்களும், இந்திய சரித்திர வரலாறுகளை பாடல்களாக இயற்றத் தலைப் பட்டனர்

முஸ்லீம் ஆட்சியாளர்கள் தேசமக்களின் மொழியை ஆவலோடு அபிவிருத்தி செய்து அதனை ஹிந்தி என்ற ழைத்தனர். ஹிந்தி கவிகளையும், ஆசிரியர்களையும், அவர்கள் உற்சாகப்படுத்தினர். முஸ்லீம் ஆட்சியாளர் களே பல மொழிகளில் விற்பன்னர்களாகவும், பல மொழி இலக்கிய கர்த்தாக்களாவும் இருந்திருக்கின்றனர்.

சக்ரவர்த்தி அக்பர் பெர்சிய, ஹிந்து மொழுகளின் கவியாவர். அவருடைய கவித்துவத்திற்காக 'கவிராஜ்' என்றழைக்கப்பட்டார்.

முஸ்லீம் மதப் பெரியார்களும் தங்களுடைய சித் தாந்தங்களைப் பரப்ப ஹிந்தியையேக் கையாண்டனர். ஆலம், சாதிக், ஜமால் முபாரக், தாஜ் ஆகியோர்கள்

பகவான் கிருஷ்ணனின் துதிபாடுவதில் இந்துக்களையும் மிஞ்சிவிட்டனர்.

டில்லியில் உயர்ந்த நீதிபதியாய் திகழ்ந்த மௌலானாஷா அப்துல் அஜீஸ் ஸ்ரீ கிருஷ்ணனை எவரும் நிந்தை செய்யக்கூடாதென எச்சரித்துள்ளார். ''பகவத் கீதையிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணன் ஒரு ஆத்மாகத்திக குருவென்றும், மதுரா அன்பின் இருப்பிடம் என்றும்'' அவர் விவரிக்கிறார்,

மெக்கா யாத்திரையைக் குறித்து எழுதியுள்ள பதன்சி மௌலானா அப்துல ரஜாக், 'மதுரக்' சென்ற காலத்தில் ஸ்ரீகிருஷ்ணனின் தோற்றம் காணப்பட்டதாக விவரிக்கிறார்.

உவமைக் கவிகள் எழுதுவதில் முஸ்லீம் கவிகள்மகா. சிறந்தவர்கள். பத்மாவதி என்ற நூலில் மாலிக்மகமது ஜெய்ஸி கதை, கதாபாத்திரங்கள், வர்ணனைகள் அனைத்தும் இந்திய முறையிலும்; கருத்தோவியமாக முஸ்லீம் தத்துவத்தைப் பற்றியும் விவரித்திருக்கிறார். இதேபோல் குத்பான் எழுதிய மிருகாவதி, மஞ்சன் எழுதிய மதுமாலதி. பஜல்ஷா எழுதிய பிரேம்ரத்தன் ஷேக்நாபி எழுதிய ஞானதீபம் முதலிய புத்தகங்கள் குறிப்பிடத் தகுந்தவைகளாகும்.

ஸ்ரீராமகிருஷ்ண தத்துவங்களை இந்து முஸ்லீம் கவிகள் ஒருங்கே புகழ்ந்திருக்கின்றனர். சூர்தாஸரின் ஸ்ரீ ராமகிருஷ்ண வர்ணனையைவிட ராஸ்கானின் கவிதை சிலாகிக்கக் கூடியதாகும்.

துளசிதாஸ், சூர்தாசர், ஹரிதாசர், கங்கபட்டர், பரமானந்தர் ஆகிய அனேக ஹிந்தி கவிஞர்களை அக்பர் ஆதரித்து. வந்தார். ஜஹாங்கீர் கேசவமிஸ்ரா, ஹோமன், சஹாய் சனேஹி, உஸ்மான், ஆகியவர்களையும்; ஷாஜஹான் சுனார்கவி, சிலோன்மணி மிஸ்ரா, வன

ராசி தாஸ் ஆகியவர்களையும்; ஔரங்கசீப் பிருந்தா மாதிராம், காளிதாசன், திரிவேதி, பூஷன் ஆகியவர்களையும் ஆதரித்து வந்தார்கள்.

அக்கால இந்து பிரார்த்தனைகள் அனைவருக்கும் பொதுவான கருத்துக்களையே கொண்டிருந்தன. கலை, இலக்கியம், மத சம்பந்தமான புத்தகங்களை எழுதிய இந்து முஸ்லீம் ஆசிரியர்கள் இந்து சார்பு புத்தகமாயிருந்தால், இந்து கடவுள்போல் காப்புச் செய்யுளும், உருது புத்தகமாயிருந்தால் அல்லாவின் திரு நாமத்தால் காப்புச் செய்யுளும் அமைப்பது வழக்கம். உதாரணமாக மதன சாதகத்தை எழுதிய ரஹீம் 'ஸ்ரீகணேசாய நம' என்று 'கணேசர் துதியும், நாயக் பேதாவை' எழுதிய அகமதுல்லா 'ஸ்ரீ ராமஜி சகாயே' என ஆரம்பித்து, சரஸ்வதி துதியும், மன்னர் மகமது ஷாவின் விருப்பத்திற்காக ஆஜம் கான் எழுதிய சிங்கார தாபன் என்ற நூலில் ''ஸ்ரீமதே ராமானுஜாய நமஹா'' என்றும் குறிப்பிடப்பட்டிருப்பன கவனிக்க வேண்டியவையேயாகும்.

இந்து சமுதாயத்தில் இந்து முஸ்லீம் கலாச்சாரங்கள் ஒன்றாக்கலந்து இன்றளவும் நிலைபெற்று விளங்குவதற்கு, இன்றைய எடுத்துக்காட்டு, பஞ்சாபி கவிஅப்துல் ரஹீம் அவர்களின் கவிதைகளேயாகும். இவர் ஹிந்தியிலும், உருதுவிலும், ஸ்ரீகிருஷ்ணனைக் குறித்தும், அல்லாவைக்குறித்தும் பாடியிருக்கும் பாட்டுக்கள் கேட்போர் மனதை பரவசப்படுத்தி விடும்.

இந்திய சமுதாய வாழ்விலும், கலையிலும், ஏற்பட்ட ஒருமைப்பாடுதான் உருது மொழி தோன்றுவதற்குக் காரணமாகும். பொதுவாக அனைவரும் உருதுவையே வழங்கலானார்கள். உருதுவை பூரணமாக முஸ்லீமுடையதென்றோ, அன்றி இந்துக்களுடையதென்றோ கூற முடியாது. அது இரு சாரருக்கும் சொந்தமாகும், அதனுடைய சொல்லாக்கமும், நிகண்டும் ஹிந்தியிலிருந்து

கையாளப்பட்டது. அதனுடைய இலக்கணம் பெர்சிய பாஷையிலிருந்து கையாளப்பட்டது.

''உருது சமஸ்கிருதத்தின் கிளைமொழி. ஆனால் துரதிருஷ்டவசமாக வளர்ப்புத் தாய், தந்தையர்களான ஈரானிய அராபிய மொழிகளையே உருது உண்மைத்தாய் தந்தையர்களாக ஏற்படுத்திக் கொண்டுவிட்டது'' என்கிறார் பேராசிரியர் ஏ எம். ஏ. சாஸ்திரி

இஸ்லாமிய திரு அவதார புருஷரான நபிகள் காலத்திலிருந்து அப்பா சயித் கலிபாக்கள் காலம் வரையில் நீதி பரிபாலனமானது மிக்க நியதியோடும், நேர்மையோடும் பாரபட்சமின்றியும், விருப்பு, வெறுப்பின்றியும் நடந்தேறியுள்ளது இஸ்லாமிய நீதி தத்துவமானது சாதாரண சமத்துவ சகோதரத்துவ சம உரிமை தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

கலீபாக்களுடைய ஆட்சியில் நியதிக்கும், நீதிக்கும் கலிபா உள்பட யாரும் அடங்கியவர்களே. ஒரு சமயம் சர்வ வல்லமை பொருந்திய கலிபா மன்சூர் அவர்களே தன்மீது ஏற்பட்ட பழியைத் தீர்த்துக்கொள்ள 'மெதினா காஜியின்' முன் ஆஜரானார் அது சமயம் சர்வசாதாரண குற்றவாளியைப் போலவேதான், சர்வ சக்தி வாய்ந்த சக்ரவத்தி, நீதிபதியின் முன் நிற்க வேண்டியிருந்தது. அதுமட்டுமல்ல, மன்னர் மன்னனை வரவேற்க வழக்கம்போல் நீதிபதி தன் ஆசனத்தைவிட்டு எழுந்திருக்கவில்லை,

இது மாதிரியான நீதி தவறாத நியதி முறை அவ்வக் கால ராஜீய நிலைமையையொட்டி கவனிக்கும் பொழுது முடிந்தவரையில் இந்தியாவிலும் நியதியோடு ஆட்சி நடந்து வந்திருக்கிறது. கிரிமனல் குற்றங்களில் வழங்கப்பட்ட தண்டனையானது எவ்வித சமூக பாரபட்சமின்றி யாவருக்கும் ஒரு மாதிரியானதே. ஆனால், சிவில் விவ

காரங்களான சொத்துரிமை, நிலப்பராதீனம், விவாகம் முதலானவைகள் இந்து நீதிப்படி வழங்க இந்துக்களுக் காகவே இந்து பஞ்சாயத்துகள் வசம் ஒப்படைக்கப் பட்டிருந்தன.

ஷேர்ஷாவினுடைய ஆட்சி காலத்தில் (1540-45) நீதிஸ்தலங்கள் முக்கிய நகரங்களிலும், தலைமையாக மாகாணத் தலைநகரிலும் நிறுவப்பட்டு மேல் கோர்ட்டு கள் அப்பீல்களை விசாரித்துத் தீர்ப்பு கூறவும் அதிகார மளிக்கப்பட்டிருந்தது.

எல்லாவற்றையும்விட மிக முக்கியமாக சக்ரவர்த் தியே நேரடியாக பொதுமக்களிடமிருந்து மனுக்களை யும், புகார்களையும் வாங்கி நெறி தவராது நீதி வழங்கி யது குறிப்பிடத்தக்கது. தூக்குத் தண்டனை விதிப்பது சக்கரவர்த்தியினுடைய விசேஷப் பொறுப்பாக இருந் ததே தவிர சிவில் ஜட்ஜுகளுக்கோ கிரிமினல் ஜட்ஜு களுக்கோ மேற்கண்ட தூக்குத் தண்டனை உரிமை அளிக்கப்படவில்லை.

ஷேர்ஷா நெறிதவறி நடந்த சர்க்கார் உத்தியோகஸ் தர்களையும், செல்வாக்கான பிரபுக்களையும் மிகக் கடுமையான தண்டனைக்குள்ளாக்கியிருக்கிறார்

முகலாய மன்னர்கள் பழங்கால இந்நாட்டு மன்னர் களைப்போலவே எல்லா மக்களிடத்திலிருந்தும், எந்தவித வித்தியாசமுமின்றி அதிக்கிரமங்களையும், குறைகளையும் கேட்டு, தக்கவாறு பரீசிலனை செய்து உடனடியாகத் தீர்ப்பளித்து வந்தது போற்றர்க்குரிய இந்திய பாரம்பரிய சம்பிரதாயமாகும்.

ஜஹாங்கீருடைய நீதி பரிபாலனமானது பொது மக்களுக்கு சத்தியம் தவறாத நீதி கிடைக்க வேண்டு மென்பதேயாம். ஜஹாங்கீர் உடல் நலம் குன்றியிருந்த காலத்திலும், தன்னுடைய சரீரநலனைக் கருதுவது

'ஹராம்' (கூடாது) எனக்கருதி தானே நேரிடையாக குடிகளிடமிருந்து குறைகளையும், புகார்களையும், மனுக்களையும் வழக்கம்போலக் கேட்டு நீதி வழங்கி வந்தார்.

அக்பருடைய நீதி பரிபாலனம் முற்றிலும் இந்தியப் பண்பாட்டைக் கொண்டதாகும். கொடிய குற்றங்கள் செய்தோரை தூக்குத் தண்டனைக்காளாக்க தயங்கியதில்லை அக்பர் ஆட்சியில் தனக்கு வேண்டியவர்களோ அல்லது அரசாங்க உத்தியோகஸ்தர்களோ தவறு செய்வார்களானாலும் மற்ற பாமர மக்களைவிட அவர்களையே மிகக்கடுமையாக தண்டித்து வந்தார். அவர் நீதி வழுவாது நடக்க வேண்டுமென்பதில் எல்லையற்ற உறுதி கொண்டவர். ஒருக்கால் தன்னுடைய தீர்ப்பு, அவசரத்திலோ அல்லது ஆத்திரத்தாலோ ஏற்பட்ட ஒரு முடிவாக இருந்துவிடப் போகிறதோ என்பதற்காக தூக்குத்தண்டனை தீர்ப்பை அமுல்படுத்துவதில் ஒருவார காலத்தை வாய்தாவாகக் கொண்டிருந்தார். அக்பர் ஆட்சியில் இந்துக்களின் வழக்குகளை இந்துக்களைத் தவிர காஜிகள் விசாரிக்கக் கூடாதென்று பிரகடனம் செய்தார்.

ஷாஜஹான் ஆட்சியைப்பற்றி டாவர்னியர் என்ற அந்நியநாட்டார் சொல்வது கவனிக்கத்தக்கது.

''ஷாஜஹானுடைய ஆட்சியில் சிவில் நிர்வாகமானது மிகச்சிறந்திருந்தது. பொதுமக்களுடைய பந்தோபஸ்துக்கு எந்தவித இழுக்குமில்லாதிருந்தது. இராக்காலங்களிலோ, ரஸ்தாக்களில், எந்தவித பீதியும், பயமுமில்லாதிருந்தது. இக்காரணங்களினால் எவரும் ஷாஜஹான் ஆட்சியில் தூக்கிலிடப்பட வேண்டிய அவசியமே இல்லாமல் போயிற்று''

''அரசாங்கத்தின் நீதி நிர்வாகம் ஒரே தன்மையானதாக இருந்தது.'' இந்துக்கள் நீதியோடும், நேர்மையோடும் நடத்தப்பட்டார்கள் என்று மனூக்கி கூறுகிறார்.

ஷாஜஹான், வங்கப் பொதுமக்களின் விருப்பத்திற் கிணங்க வங்க கவர்னராயிருந்த பிடல்கானை பதவியிலி ருந்து நீக்கினார். மற்றும் ஷாஜஹான் தனேஸ்வரத்தின் அதிகாரி 'ஷாஜி சுல்தானை' பசு வதை செய்தார் என்று இந்துக்கள் சாட்டிய குற்றத்திற்காக அவரையும் நீக்கினார்.

ஜஹாங்கீர் ஒருசமயம் அஹமதாபாத்தின் கவர்னரின் வேலைக்காரன் ஆற்றங்கரையோரமாகயிருந்த சம்பக மரங்களை வெட்டினான் என்ற குற்றத்திற்காக அவனது விரல்களை துண்டித்துவிட உத்திர விட்டார்.

சிறந்த சரித்திர விமர்சகரான பெர்னியர், ஔரங்க சீப்பைக் குறித்து ''யாரும் அவரை முரடரென்று கொள் ளுதல் கூடாது. அவர் ஒரு ஒப்பற்ற மேதை. சிறந்த ராஜதந்திரி. பெரிய அரசர்'' என்று கூறுகிறார். அக்கால அரசியலைப் பற்றி ஒரு ஆங்கிலேய ஆசிரியர் ''முகலாய அரசர்கள் நீதிபதியின் சாகரம்'' என்று வர்ணித்துவிட்டு ''மொகலாய மன்னர்களின் முன் பிரபுவோ அதிகாரியோ எவ்வித சலுகையும் பெற முடி யாது'' என்று கூறி ''ஏழைப் பாமரனும், தன் குறையைத் தீர்த்துக் கொள்ளத்தக்க வாய்ப்பு பெற்றிருந்தார்'' என்று கூறுகிறார்.

பொதுவாகச் சொல்லுமிடத்து மொகலாயர்களு டைய ஆட்சியில் இந்தியாவின் இரு பெரும் சமுதாயங் கள் தோழமையோடு வாழ நீதியும், நேர்மையும் குடி கொண்டிருந்த தெனலாம். மொகலாயர்களுடைய ஆட்சி ஒரு மாபெரும் தேசீய சக்தியாக மக்களை ஒன்று படுத்தும் வன்மை யுடையதாக இருந்தது.

இதுவரை கல்வி, நீதிபரிபாலனம் ஆகியவற்றைக் கவனித்தோம். இனி சிற்பக்கலை, ஓவியம், இசை ஆகிய வற்றை கவனித்து பொதுவிஷயங்களுக்குப் போவோம்.

நம் நாட்டின்மீது மண்ணாசையும், பொன்னாசையும் கொண்டு படையெடுத்த கஜினி மகமது கூடகனேஜ், முத்ரா (மதுரா) போன்ற நகரங்களின் கட்டிடவனப்பைக் கண்டு ஆச்சரியப்பட்டு நம் நாட்டுசிற்பிகளையெல்லாம் தன்னுடைய நாட்டிற்கே அழைத்துச் சென்று கஜினியை அழகுபடுத்தினார். கஜினியில் ''சுவர்க்கத்தின் மணப்பெண்'' என்ற மசூதியையும், அழகிற் சிறந்தொரு கலாநிலையத்தையும் கஜினியில் கட்டி முடித்திருந்தார். இதுபோலவே தைமூரும் ஆயிரக்கணக்கான நம்நாட்டு சிற்பிகளை தன் நாட்டிற்கு அழைத்துப்போய் அவருடைய தலைநகரான 'சாமர்க் கண்டில்' வெற்றிக் கறிகுறியாக ஒரு பெரிய மசூதியைக் கட்டி முடித்தார். பிற்காலத்தில் வந்த முஸ்லீம்கள் இந்தியாவையே தங்கள் தாயகமாகக் கொள்ள வேண்டுமெனக் கருதியபொழுது அந்நாட்டின் கைதேர்ந்த கட்டிட வேலைக்காரர்கள் அவ்வளவு பேரையும், இவ்விடத்திலேயே அரண்மனை கோட்டைக்கொத்தளங்கள், மசூதிகள் கட்டுவதில் ஈடுபடுத்தினார். ஆகவே இந்திய மண்ணில் எழுப்பிய கட்டிடங்கள் அனைத்திலும் இந்து கலாச்சார வனப்பு வேலைப்பாட்டுடன் பெர்சிய அமைப்புக் கட்டிடங்கள் ஏற்படலாயின.

குவ்வாத் உல் இஸ்லாம் என்பதுவே இந்தியாவில் ஏற்பட்ட முதல் மசூதியாகும். இது சீரழிந்திருந்த 'ராய்பிதோரா' என்ற இந்து கோவிலின் மீது அப்படியே திருப்பணி செய்யப்பட்டதாகும். அங்கு இந்திய தெய்வ விக்ரகத்திற்கு பதிலாக 'மிஹ்ராப்' வைக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான். சந்திராவினுடைய பிரக்கியாதி வாய்ந்த இரும்புத்தூண் தான் கோவிலின் கொடிமரமாகும். ஒருக்கால் இந்த அப்பட்டமான இந்துத் தன்மையை மறைப்பதற்காகவோ என்னவோ குத்பூதினால் மூன்று வளைவுள்ள மதில் ஒன்று எழுப்பப்பட்டது

போலும். ஆனால் இந்த வளைவும், அதன் சிகர அமைப்பும்கூட இந்தோ-புத்தக் கட்டிட சிற்பத்தைக் காட்டுவதாகும்.

குத்ப்மினார் இந்திய மண்ணில் ஏற்பட்ட மேற்காசிய கலையின் பிரதிபிம்பமாகும்.

துக்லக் சக்ரவர்த்தியின் கோட்டை, கோபுரங்கள், ரோம சாரஸன்களின் கலப்படமான மேற்காசிய கலா நுட்பமானதாகும். இதனின் வளைவுகள் இந்து-ஈரானிய கட்டிட நுட்பத்தை கலப்படமாகக் கொண்டதாகும்.

இன்றும் குஜராத்திலுள்ள இஸ்லாமிய கலை கட்டிடங்களில் இந்து ஜெயின வேலைப்பாடுகளுடையதைக் காணலாம்.

உயர்தரமான வேலைப்பாடுகள், நுட்பமான கைவேலைகள், சித்திர பூவேலைப்பாடுகள், தாழ்ந்த கோபுர மண்டபங்கள், அழகிய ஜன்னல் மறைவுகள், வேலைப்பாடமைந்த சதுரத்தூண்கள் ஆகியவைகள் சாளுக்கிய மோஸ்தராகும். இத்தனையும், ஆங்காங்குள்ள அல்லாவின் ஆலயங்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

பொதுவாக பாமினி சுல்தான்களின் அரண்மனைகளனைத்தும் இந்துக்களாலேயே கட்டப்பட்டதாகும். பிரக்கியாதி பெற்ற 'குல்பர்கா' மசூதி இந்திய கலை வேலைப்பாட்டைக் கொண்டதா அன்றி பெர்சிய கலை வேலைப்பாட்டைக் கொண்டதா என்று நிச்சயமாய் சொல்ல முடியாது. கட்டிடத்தின் மத்திய பாகத்தில் அமைந்திருக்கும் ஆயிரக்கணக்கான தூண்களைக் கொண்ட மண்டபம் இஸ்லாமியக் கலையைச் சார்ந்ததல்ல. கணத்த கட்டிடச் சுவர்களும், தாழ்ந்த மேல் அமைப்பும் தக்ஷிண சாளுக்கிய மண்டபங்களை நினைப்பூட்டுகின்றன.

சுல்தான்கள் ஆசிய மைனரின் சிறந்த ராணுவகட்டிட அமைப்பு வேலைகளை யெல்லாம் தக்ஷிணத்தில் கொண்டு வந்து புகுத்தினார்கள். குல்பர்கா, ரெய்ச்சூர் பரந்தே முதலான இடங்கள் இதற்கு சான்றுகளாகும்.

பாபர் கட்டிடங்கள் கட்டுவதிலும், தோட்டங்கள் நிறுவுவதிலும், அதிக ஆவலுடையவராயிருந்தார். அவருடைய அற்ப ஆயுளுக்குள்ளாகவே, அற்புதமாளிகைகளையும், மசூதிகளையும், தோட்டங்களையும், ஏற்படுத்தினார். இந்திய கட்டிட வேலைக்காரர்களை விடச் சிறந்த தன்நாட்டு கட்டிட வேலைக்காரரான அபூசினானின் ஆட்களை மிகப்பிரீதியோடு தருவித்தார். ஆனால் சிற்பிகள் அங்கிருந்துதான் வந்து 'இங்கு கட்டினார்களா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. ஏனெனில் அப்பொழுது இந்தியாவில் எழுப்பிய கட்டிடத்தின் எந்தபாகத்திலும் துருக்கியின் எந்தவித வேலைப்பாடோ அல்லது மோஸ்தரோ எதுவுமில்லை.

ஹுமாயூன் மீது அவரது மனைவி ஹாஜி பீகம் எழுப்பிய ஸ்தூபியில் ஈரானிய கலை நுட்பம் இந்திய வேலைப் பாட்டோடு ஒன்றாக் கலந்து திகழ்வதைக் காணலாம். இந்திய வேலைக்காரர்களல்லாத எந்த கட்டிட வேலைக்காரர்களும், இதுமாதிரி ஸ்தூபிகளை நிர்மாணித்துவிட முடியாது. ஹுமாயூன் ஸ்தூபி பெர்சிய ஆசியா-இந்தியா ஆகிய இரு நாடுகளின் கட்டிட அமைப்பின் சோபிதத்தை அழகுபடக் காட்டுவதாகும்.

பீஹாரில் உள்ள ஸஹஸ்ராமில் கட்டப்பட்டுள்ள ஷேர்ஷாவின் ஸ்தூபி துக்லக் சிற்ப ஏற்பாட்டைக் கொண்டதாகும். ஆனால் அங்கும் உள்கோபுர வாசல் போன்ற இடங்களில் இந்து கலாச்சாரம் பிரதிபலிப்பதைக் காணலாம்.

அக்பர் தன் அரைநூற்றாண்டு கால ஆட்சி அனைத்திலும் ஒற்றுமை கண்டது போலவே சிற்பவேலைப் பாட்டிலும் சிறந்த ஒற்றுமைத் தன்மையை அமைத்திருக்கிறார். அக்பரின் தலைநகராகிய 'பதஹ்-பூர்' கோட்டையின் சிருஷ்டியே அற்புதமானதாகும். மிகச் சிறந்த கட்டிட நிபுணத்துவம் உள்ளவர்கள்தான், இவர் கட்டி அமைத்துள்ள மாதிரி அரண்மனைகளையும், காரியாலயங்களையும், தொழுகை ஸ்தலங்களையும், பிரபுக்கள் மாளிகைகளையும், மகோன்னத மதிற்சுவர்களையும் கட்ட முடியும். தர்பார் ஹாலில் சட்டசபை மண்டபம் இந்து சான்திர ரீதியையொட்டியே, 'விஷ்ணு'வின் அம்சமாகிய அரசர் தாமரைமீது அமர்ந்து கருணையையும், நீதியையும் உலகின் நான்கு திக்குகளிலும் வழங்கும் காட்சியையொப்பவே சிருஷ்டிக்கப்பட்டதாகும். சுருங்கக் கூறின் ராஜபுத்ர சித்ர அமைப்பு முறையே பதஹ்பூர் கோட்டையின் காட்சியாக தோற்றமளிக்கிறது என்று கூறிவிடலாம். அக்கோட்டையின் கதவில் காணப்படும் வாக்கியம் இந்து-முஸ்லீம் பொதுக் கலாச்சாரத்தின் கோட்பாட்டை யொட்டியதாகும். அதாவது "உலகம் ஒரு பாலமாகும்; அதை கடந்து செல்லுங்கள்; அதன்மீது கட்டிடங்களைக் கட்டாதீர்கள்; உலகம் மிக அற்ப ஆயுளைக் கொண்டது. ஆகவே காலத்தை பிரார்த்தனையில் செலவு செய்யுங்கள்."

அக்பரால் ஆக்ராவில் கட்டப்பட்டுள்ள 'ஜஹாங்கீர் மஹால்' இந்து-ராஜபுத்திர மாளிகையோவென தோன்றக்கூடும். அவர் ஒரு நிலையான இந்து-முஸ்லீம் கலாச்

சாரத்தின் மீதே கட்டிடங்களை எழுப்பவேண்டு மென எண்ணியிருந்தார். அதுவேதான் அவரின் லக்ஷ்யம்.

ஜஹாங்கீர் உலகப் பிரசித்தி வாய்ந்த உல்லாச நந்த வனங்களை லாகூர், ஆக்ரா, காஷ்மீர் போன்ற இடங் களில் சிருஷ்டித்திருக்கிறார். மற்றும் ஓவியக்கலையையும் பாதுகாத்து வந்திருக்கிறார்.

மொகலாய மன்னர்களில் ஷாஜஹானே சிறந்த கட்டிடங்களை நிர்மாணித்ததில் தலைசிறந்தவர். அவரது ஆட்சி சுபீட்சமாகவும், சாந்தியுடையதாகவும் இருந்தது அரண்மனைகள், மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், மசூதிகள், தோட்டம் துறவுகள் அமைப்பதில் அவருக் கிருந்த ஆசை வேறு யாருக்கும் இருந்ததில்லை. அவர் சிரியா, ஈரான், துருக்கி முதலிய இடங்களிலிருந்து கைதேர்ந்த வேலைக்காரர்களையெல்லாம் ஒருங்கே சேர்த்து வைத்திருந்தார். இவரே புது டில்லியின் [ஷாஜஹான்பாத்தின்) சிருஷ்டிகர்த்தா எனலாம். இவ ரின் டில்லிக் கோட்டை அக்பரின் கோட்டையைவிட எல்லா அமைப்புகளும், அங்கங்களும், ஒருங்கே அமையப் பெற்றிருக்க வேண்டுமெனக் கருதி ராஜ மாளிகைகள், உல்லாச நந்தவனங்கள், அரச சபைகள், மசூதிகள் உள்பட அத்தனையும் அதிலேயே அமைத் திருக்கிறார். அவரால் கட்டப்பட்டுள்ள சட்டசபை மண்டபங்கள் (கீழ் சபை, மேல் சபை) ரங்க மஹால், ஜும்மா மஸ்ஜித் ஆகியவைகள் மொகலாய கலையின்

உச்சஸ்தாயியை எட்டியிருக்கின்றன. இவர் நிர்மாணித்துள்ள ஆக்ராவின் 'தாஜ்மஹால்' கட்டிடம் உலக அற்புதங்களிலே ஒன்றாகும். பஞ்சரத்தின அமைப்பைக் கொண்ட இந்திய நவீனமே 'தாஜ்' என்று சொல்வோருமுண்டு. ஈரானிய மோஸ்தர்க்காரர்கள் துருக்கிய-பெர்சிய நவீனமே 'தாஜ்' என்று கூறுவது உண்டு. ஷிராஜின் உஸ்தாத் இசா, இதன் பிரதான சிற்பியாவார். துருக்கியின் இஸ்மாயில்கான் இதன் கோபுர நிர்மாணஸ்தராக இருந்தார். இதன் உள்வேலையும், அழகுபடுத்தும் வேலையும் சிரஞ்சிலால் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. சிரஞ்சிலால் தாஸ் தனக்குத் துணையாக சோதிலால், மனுலால், மனோஹர் ஆகியவர்களை அமர்த்திக் கொண்டிருந்தார். தாஜுனுடைய அமைப்பு பெர்சிய பண்பாடென்றாலும் அதன் உயரிய சலவைக்கல் அமைப்பும் அலங்காரமும், கம்பீரமும், இந்திய சோபித சக்தியையுடையதே.

மொகலாயர்களுடைய கட்டிட சோபிதங்கல் ரஜபுதனத்திலிருந்து பாண்டியநாடு வரையிலிருந்த இந்திய மன்னர்களின் மனதை ஈர்க்கத் தலைப்பட்டது. இந்து மன்னர்களும் மொகலாய மோஸ்தரையொட்டி சிறந்த சிற்ப சாஸ்திர எடுத்துக்காட்டுக்கு உவமையாக-மாட மாளிகைகள், கூடகோபுரங்கள் மண்டபங்கள், கோட்டைகள் முதலியவற்றை கட்டலாயினர்.

ராஜபுதனத்தின் சிறந்த அரசர்கள் தங்கள் ஞாபகார்த்தமாக கட்டிடங்களை எழுப்புவது சம்பிரதாயமாகும். பண்டைய மன்னர்கள் எழுப்பிய பழங்கால கட்டிடங்கள் ராஜபுதனத்தில் இன்றும் காணலாம்.

அநேக இந்து மன்னர்களின் அரண்மனைகள் டில்லி பாதுஷாவின் அரண்மனைகளை ஒத்ததாகக் காணப் படும்.

சந்திரகிரி அரசர், மதுரை நாயக்கர் அரசர்கள்கூட முஸ்லீம் கட்டிட அமைப்பின் மோஸ்தரில் லயித்து மூன்று அடுக்கு மாடமாளிகை கூடகோபுரங்களை நிர்மாணித் திருக்கின்றனர்.

மதுரை திருமலை நாயக்கர் (1623-56) மஹாலின் சிருஷ்டியில் மொகலாயக் கலை பிரதிபலிப்பதைக் காணலாம். திருமலை நாயக்கர் மஹாலின் விஸ்தீரணம் 450×250 அடிகளாகும். தர்பார் ஹாலின் விஸ்தீரணம் 252×159 அடிகளாகும். உயரம் 40 அடி. ''இது ஸ்பெயினில் உள்ள அல்ஹம்பராவின் நீதிஸ்தலத்தை நினைப்பூட்டுகிறது'' என்கிறார் பெர்ஸிபிரவுன் 'இந்திய சிற்பம்' என்கிற நூலில்.

* * *

மத்திய ஆசியக் கலையின் ஓவியங்களிலிருந்து உதித்ததுவே மொகலாய ஓவியமாகும். அஜந்தா சீனாவின் கலைகளே மத்திய ஆசிய ஓவியங்களோடு இந்தியாவில் புனர்ஜென்மமெடுத்தது எனவும் கூறலாம்.

கீழ்நாட்டு 'ராபெல்' என்று புகழப்படும் ஓவிய நிபுணர் பிஸாத்தின் சிஷ்யர்களிடமிருந்து ஹுமாயூனும், அக்பரும் ஓவியமும் சித்திரமும் பயின்றார்கள்.

ஆசியாவின் பல பாகங்களிலிருந்த, அதாவது கல் முக்கின் பரூக், ஷிராஜின் அப்துல் சமாத், தப்ரிஜின் மீர் சய்யித் அலி ஆகிய குறிப்பிடத்தக்க ஓவிய நிபுணர் களை தன் அரண்மனையில் வைத்து ஆதரித்து வந்தார்.

அதோடு பஸ்வான், தாஸ்வநாத், கேசுதாஸ் போன்ற இந்திய ஓவிய நிபுணர்களையும் ஆதரித்து வந்தார் அக்பர் மற்ற ஆசியநாட்டு ஓவியக்காரர்களைவிட இந்திய ஓவியர்களின் சிறப்பையும், வனப்பையும் கண்டு வியந்து, அவர்களிடமே பெர்சிய கவி 'நிஜாமி' எழுதிய கலைச் செல்வத்தை ஓவியமாகத் தீட்ட ஏற்பாடு செய்தார். பொதுவாக, இந்த ஓவியத்தின் சிறப்பு இந்திய—ஆசிய ஓவிய நிபுணர்களின் ஒன்றுபட்ட கூட்டு முயற்சியின் பண்பாடாகும்.

ஜஹாங்கீர் இயற்கை ஓவியத்தில் பற்றுக் கொண்டிருந்தார். மொகலாய ஓவியக்கலையின் உயிரும், உடலும் இவரே. இவருடைய அரண்மனையில் ஹெராடின் ஆகாரிஜா, அவரது குமாரர் அபுல்ஹாசன், கல்முக்கீன் பர்ருக்பேக், சாமர்கந்தின் மகமதுநாதிர், மகமது உஸ்தாது மன்சூர் மற்றும் பிஷன்தாஸ், மனோஹரர், கோவர்த்தனர் ஆகியவர்கள் ஆஸ்தான ஓவியர்களாக இருந்தனர். இவருடைய ஆட்சியில்தான், ஓவியக்கலையில் பெர்ஷிய மோஸ்தர் படிப்படியாக குறைவுபட்டு, இறுதியாக இந்திய மோஸ்தராக ஆகியது.

ஷாஜஹானின் கலைப்பித்து கட்டிடங்களிலும், ஆபரண அமைப்புகளிலும் சென்றது. அவருக்கு ஓவியத்தில் அவ்வளவு பற்று இல்லை. ஆகவே அக்கால அரண்மனை ஓவிய நிபுணர்கள் பலர், பல குறுநில மன்னர்களிடமும் சிற்றரசர்களிடமும் சென்று ஓவியக் கலையை வளர்க்கலானார்கள்.

அஜந்தா குகைகளின் அற்புத சிருஷ்டிகளின் 'மறுபிறவி'க்கலைகளை மத்திய ஆசியா, சீனா, ஜப்பான், ஜாவா, கம்போடியா ஆகிய இடங்களில் நாம் இன்றும் கண்டு களிக்கலாம்.

அஜந்தாவின் புராதன ஜீவிதக்கலைகள் பாமியான், பாக்திரியா, கோதான், மிரான், குச்சார், துர்வான், துன் ஹுவாங் ஆகிய இடங்களில் அலங்கரித்து நிற்கின்றன.

ஆகாய வீதிவழியே பறந்துசெல்லும் 'கின்னர'க் காக்ஷி அஜந்தாவின் கற்பனை சிருஷ்டியாகும்.

அஜந்தா குகைக் கோவில்கள், ஓவியங்கள் முதலானவை, கிருஸ்து பிறப்பதற்கு முன்னூறு ஆண்டுகளுக்குமுன் அசோகர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, ஆயிரம் ஆண்டுகள்வரை பலமன்னர்களாலும், தொடர்ந்தும் விட்டும் ஆதரிக்கப்பட்டு, இறுதியாக இந்த சகாப்தத்தின் ஏழாம் நூற்றாண்டுவரை நிர்மாணிக்கப்பட்டதாகும். இக்குகைகளின் எண்ணிக்கை இருபத்தொன்பதாகும், எத்தனையோ கால வேறுபாடுகளையும் மதக் குரோதங்களையும் தாண்டி என்றும் இக்குகைக் கோவில்கள், இந்தியக் கலையின் தாயகமாக விளங்கி, மனித சமுதாயத்தின் சாந்தியையும் சத்தியத்தையும் நிலைநிறுத்த பாமரனின் எழுச்சியையும் அள்ளிக்கிளப்பி விடும் வன்மைமிக்க சக்தியாக விளங்குகிறது.

அஜந்தாவின் பதினேழாவது குகையில், தாயும் சேயுமாக மஹாத்மா புத்தர்முன் நிற்கும் ஓவியக்காஷி அப்படியே நெஞ்சையள்ளும் அபூர்வ சிருஷ்டியாகும்.

சீனாவில் நான்காவது நூற்றாண்டில் சிருஷ்டிக்கப்பட்ட மலைக்குகைக் கோவில்கள் முதலியன, அஜந்தாவின் தூண்டுதலே என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

ஏழாவது நூற்றாண்டில் ஜப்பானில் நாரா காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்களுக்கு மூலகாரணம் அஜந்தா ஓவியங்களாகும். 'ஜப்பானியக்கலை' என்ற புத்தகத்தில் ஜப்பானின் புராதன சிறந்த ஓவியங்கள் அஜந்தா

ஓவியக்கலையின் அம்சங்களே என்று எட்வர்டு டில்லன் கூறுகிறார். ஹோரியூஜி ஆலயத்திலுள்ள பிரக்கியாதி பெற்ற ஓவியக்கலையைப்பற்றி லாரன்ஸ் பின்யான், ''அது இந்தியத்தன்மையை பூரணமாகக் கொண்டது. அஜந்தா குகைக்கோவில் ஓவியங்களை அது நன்கு ஞாபக மூட்டுகிறது. அக்கால இந்தியாவுக்கும் ஜப்பானுக்கு மிருந்த தொடர்பை அது தெளிவுறக் காட்டுகிறது'' என்று விரிவாகக் கூறுகிறார். இவ் ஓவியக் கலையின் காலம் எட்டாம் நூற்றாண்டின் ஆரம்பமாகும்.

இலங்கையிலுள்ள சிகிரியாவில் எழுதப்பட்டுள்ள ஓவியம் அஜந்தாவிலுள்ள 16, 17-வது குகைகளின் சில காக்ஷிகளை பார்ப்பவரின் கவனத்துக்குக் கொண்டு வரக்கூடும் அஜந்தா ஓவியத்தைப்போன்று அவ்வளவு அபாரத் திறனோ அன்றி ஒப்பற்ற ஜீவிதத்தன்மையோ சிகிரியாவின் ஓவியத்தில் இல்லையென்றாலும், அஜந்தா வின் பாரம்பர்யமே சிகிரியாவின் ஓவியம் என்று சொல் வதில் தவறு ஒன்றுமில்லை. இவ்ஓவியம் ஐந்தாவது நூற் றாண்டில் அரசர் காஸ்யபரின் காலத்தில் ஏற்பட்டது.

1920-ம் வருஷத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சித்தன்ன வாசல் கோவிலில் காணப்படும் ஓவியம், ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பல்லவ அரசர் மஹேந்திர வர்மன் காலத்தில் ஏற்பட்டதென தெரியவருகிறது, இவ்ஓவியமும் அஜந்தாவின் ஓவியத்தை முன்னோக் காகக்கொண்டது. இவ்ஓவியத்தில் காணப்படும் அமைதி யும், உயரிய ஜீவிதத்தன்மையும் அஜந்தாவில் காணப் படுவதைப் போன்றதே என கஸின்ஸ் கூறுகிறார்.

● ● ●

இரு பெரும் சமுதாயங்களை ஒன்றாக்க சங்கீதம் மிகத் துணை புரிந்துள்ளது.. இந்திய சங்கீதம் இந்நாட் டிற்கு வந்து காலடி வைத்த அத்தனை பேர்களையும் வசீ கரித்துவிட்டது.

இந்துஸ்தானத்தின் ''புல்புல்'' என்று அழைக்கப் பட்டவர் அமீர் குஸ்ராவ் ஆவர், இவர் அலாவுதீன் கில் ஜியால் ஆதரிக்கப்பட்டவர். பெர்சியக் கவியில் இவர் வல்லவர். அதோடு இந்திய சங்கீத ராகத்தையும் பயின்றிருந்தார் அலாவுதீன் கில்ஜி, தென்னாட்டின் இசைவாணர் தஞ்சை கோபால் நாபக்கரின் புகழை கேள்விப்பட்டு தன்னுடைய கவி அமீர் குஸ்ராவோடு நேச பாவத்துடன் போட்டியிட, அரண்மனைக்கு அழைத்து இரு இசை நுட்பங்களையும் ஒன்றாக்கி ஒரு புதிய கவிதா மண்டலத்தை சிருஷ்டித்தார்.

பிஜாபூர் சுல்தான்களும்— மாளவ மன்னர்களும், இசைக்கலைக்குப் பேராதரவு கொடுத்தனர். அக்பரின் ஆஸ்தான மண்டபத்தில் ஈரான், தூரான், காஷ்மீர், இன்னும் வடநாட்டு கவிவாணர்கள் பலரும் இருந்தனர். அக்பர் இரு நூறு ராகங்களை கோர்வை செய்திருந்ததாக அபுல் பாஸல் கூறுகிறார்.

அக்காலத்தில் தேச முழுதும் கிராமியப் படால்கள் மலிந்து கிடந்தன, பாடகர்களுக்கு, மன்னர்களும் பிரபுக் களும் ஆதரவு அளித்து வந்தனர்.

ஒரு சமயம் கவி தான்செனுக்கு அக்பர் இரண்டு லக்ஷம் வராகனும், கவி ராமதாஸுக்கு அவரது அரசர் ஒரு லக்ஷம் வராகனும் சமர்ப்பணம் செய்ததாக தெரி கிறது.

அக்பரின் அரசவையில் தான்செனின் தலைமையில் முப்பது இசைவாணர்கள் இருந்தார்களென்று அபுல் பாஸல் கூறுகிறார்.

தான்சென் தன்னுடைய கவித்துவ சக்தியால் யமுனா நதியின் பிரவாகத்தைத் தேக்கவும்; பிர்ஜாபாலா அவரின் கவித்துவத்தால் ஒரு கற்பாறையை பிளக்கவும் கூடும் என்ற நம்பிக்கை இருந்ததாக இரு மேலைநாட்டு ஆசிரியர்

கள் இந்தியாவில் 'மொகலாயர்கள் ஆட்சி' என்ற | நூலில் அழகாக எழுதி இருக்கிறார்கள்.

தான்சென் ஓர் அமரகவி அவரின் இந்துஸ்தானி இசை கேட்போர் மனதை வசீகரித்துவிடும்.

குவாலியரில் உள்ள அவரது நினைவு ஸ்துபி இந்திய கவிவாணர்களின் புண்ணியஸ்தலமெனக் கருதுகிறார்கள். அவரது சமாதியின் பக்கத்திலுள்ள வேம்பின் கிளைத் துளிர்கள் சாரீரத்தை வளமாக்கவல்லது என்று பாமரர் கள் இன்றும் கருதுகிறார்கள். அத்தனை அபார மகத் துவம் பெற்றவர்தான் தான்சென்.

ஜஹாங்கீர் மன்னர் நூற்றுக்கணக்கான பாடகர் களையும், நாட்டியப் பெண்களையும் ஆதரித்து வந்தார்.

ஷாஜகானுக்கு சிறந்த சாரீரமிருந்தது. அனேக சந்தர்ப்பங்களில் அவர் கவிவாணர்களோடு போட்டி யிட்டுப் பாடி வெற்றி பெற்றிருக்கிறார், இவர் காலத்த வரான ராமதாசும், மகாபத்ராவும், இவரால் ஆதரிக்கப் பட்டவர்கள். ஒருசமயம் கவி ஜெகன்னாதரின் இசையைக் கேட்டு லயித்து அவரது நிறைக்குச் சமமான தங்கத்தை சன்மானம் அளித்தார்,

துருக்கியர்களுடைய இசைக் கருவிகளும், ராக மாலிகைகளும் புராதன இந்து ராகமாலிகைகளோடு பண்பட்டு இந்துஸ்தானி இசையாக இன்று இந்தியா வில் நிலவி வருகிறது.

* * *

மொகலாய சக்ரவர்த்திகள் கலைப்பண்பாட்டுக்கு மட்டுமல்லாது பொதுமக்களின் நன்மைக்கான காரியங் களிலும், கண்ணும் கருத்துமாயிருந்தனர். ''எனது முன்னோர்களால் கட்டுவித்த தங்குமிடங்கள், தேவால

யங்கள், கிணறுகள். வாய்க்கால்கள், நீர்நிலைகள், நீர்ப் பாசனங்கள், மருத்துவ நிலையங்கள், அனாதை விடுதிகள் ஆகிய பொது நன்மைக்கான அனைத்தையும், ஒழுங்கு பெற அமைத்து வைப்பதே எனது கடமையாகும்என்றார் பிரோஜ்ஷ துக்லக்.

பெஷாவரிலிருந்து கல்கத்தாவரை சாலையை ஏற் படுத்திஎல்லைப்புற இந்தியாவுடன் வங்கத்தை இணைத்த ஷேர்ஷா ஒரு பட்டானிய அரசர். இதனால் இவரை இன்றைய ஐக்கிய சமுதாயகர்த்தாவென பட்டாணியர் களும் பாத்தியதை கொண்டாடுகிறார்கள் மற்றும் ஷேர்ஷா, 1700 சாலைகளைநிர்மாணித்து வழிப்போக்கர் களுக்கு உதவும் பழந்தரும் மரங்களை நட்டுவித்தார். அவருக்குப்பின் அவரது சந்ததியார்களும் அவரைப் போலவே சாலைகளை அமைத்து மரங்களைப் பயிர் செய்தார்கள்.

புராதன இந்து சம்பிரதாயத்தையொட்டி மொகலாய மன்னர்களும் கிணறுகளையும், குளங்களையும் வெட்டுவித்தார்கள். மன்னர்கள் மட்டுமல்ல, அக்கால பிரபுக்களும், செல்வந்தர்களும் கூட ஆண் பெண்களுக் காக தனித் தனி குளிக்கும் அறைகளும், தர்ம சத்திரங் களும், மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் தனித் தனியே நீர் அருந்தும் தடாகங்களும் ஏற்படுத்தினர்.

இம்மாதிரியான நற்காரியங்களில் இந்து, முஸ்லீம் பெரியோர்களுக்குள்ளே போட்டி உணர்ச்சி இருந்தது ஒல்வொரு ஆண்டிலும் விசேஷ காலங்களில் நடை

பெறும் ''புண்ணிய தீர்த்த'' விழாக்களில் இருபெரும் சமயத்தவர்களும் ஒன்றுகூடி மகிழ சந்தர்ப்பம் இருந்தது.

இந்தியாவில் முதன் முதலாக மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் மருத்துவசாலைகளை ஏற்படுத்தியது அசோக சத்ரவர்த்தியே. இதனை அபிவிருத்தி செய்தவர்கள் பாக்தாத் நகரத்தின் கலிபாக்கள் ஆவர்.

மொகலாயர்கள் மருத்துவ நிலையங்களை ஏற்படுத்தி தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தனர். இவ்வகையில் கொகலாயர்கள், இந்து—பெர்சிய முறையை தங்களுடையதாக்கிக் கொண்டனர். இந்தியாவில் மனிதர்களுக்கு மட்டுமின்றி பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் மருத்துவ வசதிகள், மருத்துவ நிலையங்கள் முதலியன மலிந்து நிறைந்திருந்ததென்று வெளிநாட்டு யாத்திரீகர்கள் புகழ்ந்துள்ளனர்.

''அரசாங்க வருமானத்திலிருந்து எங்கும் மருத்துவ நிலையங்கள் நிறுவப்படவும், பெரிய நகரங்களில் மருத்துவ நிபுணர்கள் நியமனம் செய்யப்படவும் வேண்டும்'' என்று ஜஹாங்கீர் உத்திரவு பிறப்பித்திருந்தார். இது அவருடைய நினைவுக் குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது.

1583-ம் ஆண்டில் அக்பர் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும், ஜோகிகளுக்கும் மூன்று இலவச உணவு

விடுதிகளை அமைத்து இலவச உணவளித்து வந்தார். அவைகளுக்கு 'தர்மபுரம்,' 'காயிர்புரம்', 'ஜோகிபுரம்' என்ற பெயர்கள் வழங்கின.

இந்த தேசத்தில் வெற்றிகண்டவர்களும். தோல்வியுற்றவர்களும் தனித்தனியாக பிரிந்து நிற்காது ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு ஆட்சியின் கீழும் அனைவரும் சேர்ந்துவாழ முனைந்ததால் ஒவ்வொரு இனத்தவர்களுக்குள்ளும் நேச உறவு ஏற்பட்டு அனைவரும் ஒன்றாகி அன்பாகவும்! ஒற்றுமையாகவும் வாழ வழிகோலியது என விவரித்திருக்கிறோம்.

இந்திய தத்துவ அறிவும். ஞானமும் கஜினிவரையில் சென்றதென்று முன் கூறியுள்ளோம், அப்பாசையத்களின் பிரசித்திபெற்ற அரசவை பாரம்பர்யத்தைச் சேர்ந்தவர்களே அல்பரூனி, அமீர் குஸ்ராவ் ஆகியவர்கள்.இவர்களேதான். இந்தியகலைச்செல்வத்தை தங்களுடையதாக்கிக் கொண்டவர்கள். இவர்களேதான் இந்துக்களுக்கு புத்துணர்ச்சியையும், புதுவாழ்வையும் உண்டாக்கியவர்கள். இவர்களேதான் இறுதியில் ஒன்றாக் கலந்தவர்கள் இத்தனையையும் முன் ஓரளவு கவனித்துவிட்டோம். இனிப் பொதுப்படையான விஷயங்களைக் கவனிப்போம்.

உயர்ந்த 'துருக்கி பிரபு வம்சத்தார்கள்' ஆரம்ப காலத்திலேயே சஜ்ஜூ, கச்சன், ஹமீத்ராஜா போன்ற இந்து பெயர்களை தங்களுடையதாக்கிக் கொண்டனர்.

பால்பன் அரசவைக்கு, வெத்திலைப் பாக்குப் போடும் இந்நாட்டுப் பழக்கம் குடியேறியது.

இந்துக்களுடைய சீதன வழக்கம் முஸ்லீம்களைப் பற்றிக்கொண்டது, பெரோஜ்ஷா துக்லக் கூட, அனாதை முஸ்லீம் பெண்கள் திருமணத்திற்காக சீதனம் வழங்க ஒருப்பட்டார். சீதனம் என்பதுவே முஸ்லீம் சமயத்திற்கு புறம்பானது. சீதனம் இந்துப் பண்பாடாகும்.

மண்மாகாத ஆண், பெண்கள் ஒருவரையொருவர் சந்தித்து திருமணம் ஏற்பாடு செய்துகொள்ளும். வழக்கம் இந்தியாவில் இல்லை. ஆனால் இஸ்லாமிய தேசங்களின் நிலை வேறு என்றாலும் இந்திய முஸ்லிம்கள் இந்துக்களைப்போலவே தம் மக்களுக்காகவே மணவிணை ஏற்பாடு செய்தார்கள். திருமண காலங்களில் அனேக சடங்கு சம்பிரதாயங்கள் இந்துக்களுடைய புராதனச் சம்பிரதாயங்களையே கொண்டதாகும்.

நம் நாட்டில். இந்திய முஸ்லீம் சிறுவர்களிடம் ரம்ஜான் காலங்களில் பெரியோர்களின் காலைத்தொட்டு வணங்கும் இந்து வழக்கம் இருந்து வருகிறது. ஆனால் மேற்கு ஆசிய நாடுகளில். இன்றும் குழந்தைகள் பெற்றோர்களை கைகளில் முத்தமிடுதலும் பெற்றோர்கள், சிறுவர்களை நெற்றியில் முத்தமிடுதலும் ஆகிய பழக்கம் இருந்து வருகிறது.

சில இடங்களில் முஸ்லீம் பழக்க வழக்கங்களை இந்துக்களும் அனுசரித்து வருகிறார்கள், பீஹார்

இந்து விவசாயிகளாகிய குர்னிகள் தமிழர்களைப்போல முஹரம், ரம்ஜான் பண்டிகைகளை அனுஷ்டித்து வருகிறார்கள். தென்னாட்டில் உள்ள லம்பாடியர்கள் முஸ்லீம் விவாக சடங்குகளை அனுசரிக்கின்றனர்.

அநேக இடங்களில் முஸ்லீம்களுடைய குடும்ப விசேஷங்களிலும், பண்டிகைகளிலும். ஊர்வலங்களிலும் இந்துக்கள் சர்வசாதாரணமாகக் கலந்துகொள்கிறார்கள்.

இந்துக்களுடைய சொக்கட்டான், காகித விளையாட்டுகளை முஸ்லீம் மன்னர்கள் தங்கள் தர்பார் விளையாட்டாக ஆக்கிக்கொண்டார்கள்.

நடனமும், இசையும் தங்களுடையதாகவே முஸ்லீம்கள் கருதிவிட்டார்கள்.

இந்து ஜோகிகளும் முஸ்லீம் மாயாவாதிகளும் மதவிஷயத்தில்கூட ஒன்றுபட்டுவிட்டார்கள்

பிரேஜ்ஷா துக்லக் காலத்தில் பிராமணர்கள் வீட்டில் விக்ரக ஆராதனை செய்ய இந்துக்களைப்போலவே, முஸ்லீம்களும் ஒன்றுசேர்நதிருந்தனர். இதனை பிரோஜ்ஷா சர்க்கார் சட்டத்தால் தடுக்க நேர்ந்தது.

அக்பர் மாமிச உணவை வெறுத்து சிறந்த இந்துக்களைப்போன்று கங்கை நீரையே அருந்தினார். அக்பர் உயர்ந்த துருக்கித் தொப்பிக்குப் பதிலாக ரஜபுத்ர தலைப்பாகையை அணிந்திருந்தார். இவர் முஸல்

மான்களின் தாடிக்குப்பதில், முத்ரா (வடமதுரை) இந்துக்களின் ஒதுக்கு மீசை வைத்திருந்தார்.

ஜஹாங்கீர் தன்னுடைய அளவுக்கு தங்கத்தாலும், வெள்ளியாலும் ஆபரணங்களாலும் நிறுத்து இந்து அரசர்களின் சம்பிரதாயத்தையொட்டி தானம் வழங்கினார். இவர் தீபாவளி, தஸரா, சிவராத்திரி போன்ற இந்துக்களின் விசேஷ நாட்களை ஆடம்பரமாகக் கொண்டாடினார்.

இந்திய முஸல்மான்கள் பௌத்த- இந்து அனுஷ்டானத்தையொட்டி இறந்தவர்களுடைய சமாதுக்கு (பீருக்கு) வணக்கம் செலுத்தலானார்கள்.

இந்து விழாக்க்ளைப் போலவே பீர் திருவிழாக்களும் ஆட்டம், பாட்டு, கூத்து, நடனம் மற்றும் கேளிக்கைகளோடு எங்கும் நடக்க ஆரம்பித்தன.

முஸ்லீம் பெண்கள் ரஜபுத்ர பெண்களைப் போல் ஆடை உடுத்தினர். இந்து-ரஜபுத்ர - மராத்திய மன்னர்கள் மொஹலாய அரசர்களைப்போல் 'நவாபு' அலங்காரங்களை அப்படியே கைக்கொண்டனர்,

தஞ்சை மன்னர்கள்கூட நவாபுகளாகவே காக்ஷி அளித்தார்கள்,

டில்லிக் கோட்டையின் கதவுகளையொட்டியேதான் நாட்டின் எல்லா பாகங்களிலும், ஏற்பட்டுள்ள தலைநகரின் கதவுகளும் கோட்டைக் கொத்தள கதவுகளும்

அமைந்திருக்கின்றன. பொதுவாக எல்லா கோட்டைக் கொத்தள வடக்குகோட்டை வாசல்களும், டில்லி சக்ர வர்த்தியின் மரியாதைக்கறிகுறியாக 'டில்லி வாயில்' என்றே அழைக்கப்படுகின்றன. பங்களூர், வேலூர் கோட்டைக் கதவுகளைக்கூட 'டில்லிக் கதவு' என்று அழைக்கப்படுகிறது.

எழுநூறு ஆண்டுகளுக்குமுன், பாண்டிய நாட்டின் துறைமுகப் பட்டினமாகிய காயல்பட்டினத்தில் வந் திறங்கிய சையத் ஜமாலுதீன் என்பவரை அக்கால பாண் டிய மன்னர் மந்திரியாக அமைத்துக்கொண்டது சரித்திர வரலாராகும்.

காயல்பட்டினத்தில் வாழ்ந்த சையத்காதர் என்ற வணிகரேதான், தமிழ் வளர்த்த பெருவள்ளலாதலால் சீதக்காதி (மரைக்காயர்) என்றும், படிக்காசுத் தம்பி ரான் என்றும் அழைக்கப்பட்டு வருவதை தமிழ் உலகம் நன்கறியும்.

சிப்பாய்க் கலகம் என்று சொல்லப்பட்ட 1857-ம் வருஷ இந்திய முதல்சுதந்திரப் போராட்ட வரலாறுகூட மொகலாய சக்ரவர்த்தி ஆட்சியை நிலைநிறுத்தவே ஏற் பட்டதாகும்.

அக்காலத்தில், எண்பத்திரண்டு வயதான தொண்டு கிழவர் பகதூர்ஷா சக்ரவர்த்தியாக பிரகடனம் செய்யப் பட்ட மாத்திரத்திலேயே, இந்து அரசர்கள் அளவற்ற உற்சாகம் காட்டினர் என்பது சரித்திரப் பிரசித்தம்.

பொதுவாக இந்துக்கள் அரசரை திருமாலின் அம்ச மாகக் கருதினார்கள். அக்கால மக்களில் ஒருசாரார் சக்ரவர்த்தியை தரிசனம் செய்யாமல் உணவருந்தமாட் டார்கள். அதுபோலவே ஜலாலுதீன் அக்பர் போன்றோர் களை திருமாலின் அம்சமாக கருதியிருந்த மதிப்பு ஒப் பற்றது.

சதுரங்கப்பட்டினத்திலுள்ள ரெங்கனாதப்பெரு மாளுக்கு சுல்தான்கள் மரியாதை செலுத்தியிருக்கிறார் கள். ஹைதராபாத் நிஜாம் சர்க்கார், பண்டரிபுரப் பெருமாளுக்கு நித்தியகட்டளை முதலிய செலவுகளை செய்ய அனுமதி அளித்திருந்தார்கள்.

ஒருசமயம் ஹைதர் அரண்மனைக்கு சமீபத்தி லிருந்த பெருமாள் கோவிலின் கோபுரம் வெடிவிபத்தால் இடிந்து விழுந்தது. உடனே ஹைதர் அலி தன்னுடைய ஆட்களைக்கொண்டே கோபுரத்தைக் கட்டி முடித்துத வினார்.

நஞ்சன்கூடிலுள்ள ஸ்ரீகண்டேஸ்வரர் ஆலயத்தி லுள்ள லிங்கத்திற்கு ''சுல்தான் லிங்கம்'' என்று பெயர் வழங்கப்படுகிறது. இந்த லிங்கம் திப்புசுல்தானால் அவரது வேண்டுகோளுக்காக ஏற்படுத்தப்பட்டு, அவரது பெயராலேயே அழைக்கப்படுகிறது. இந்த லிங்கத்தின் நித்திய பூஜைக்கு சுல்தான் மான்யமும் இருந்து வரு கிறது.

ஸ்ரீ சங்கராச்சாரியாரின் குருபீடமான ஸ்ரீங்கேரி ஒரு சமயத்தில் மராத்தியர்களால் கொள்ளையிடப்பட்ட

பொழுது அதைக் கேள்வியுற்ற திப்புசுல்தான், உடனே சங்கரருக்கு ஆடை அணிகளையும், பொருள்களையும் அனுப்பி தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத் திருமுகத்தை அனுப்பினார் அத்துடன் அங்கு அவருக்கென்று ஒரு விசேஷ படையையும் காவல்வைத்து இந்து தர்மத்தைக் காப்பாற்றப் பேருதவி புரிந்தார். திப்புவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்த மந்திரி, பூர்ணய்யா என்ற பிராமணராவர்.

மைசூர் சமஸ்தான மேலக் கோட்டையிலுள்ள விஷ்ணு துருக்க நாச்சியாரை விவாகம் செய்து கொண்டுள்ள வரலாறு ருசிகரமானது.

ஒரு சமயத்தில் டில்லி சுல்தானின் மகள் விஷ்ணு மீது காதல் கொண்டாளாம். மாலிக்காபூர் தக்ஷிணத்தின் மீது படை கொண்டு வந்த சமயம் அது. டில்லிசுல்தானின் மகள் அந்த சேனா சைன்யத்தின் துணைக் கொண்டு, ஆலயத்திலிருந்த ஸ்ரீ சேலுவராய பிள்ளையின் விக்ரகத்தை அதாவது விஷ்ணுவின் விக்ரகத்தை தன்னோடு கொண்டு சென்று விட்டாள். ஆனால் விஷ்ணுவின் பக்தரொருவர், டில்லி சுல்தானை வசப்படுத்தி ஷெ விக்கிரகத்தை திரும்ப ஆலயத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தார். என்றாலும் தன்னுடைய உடலையும், உயிரையும் ஸ்ரீ விஷ்ணுவுக்கே அர்ப்பணம் செய்திருந்த அந்த அரசிளங்குமரி டில்லியினின்றும் கால் நடையாகவே வந்து தான் கொண்ட காதல் முற்றுப்பெற ஸ்ரீ சேலுவராயப் பிள்ளை என்ற அப்பெருமாளோடு ஐக்கியமாகி

விட்டாள். இந்த பாரம்பர்யத்தையொட்டி இன்றைய தினமும் தென்னாட்டின் பிரக்யாதி வாய்ந்த ஸ்ரீரங்கம் உள்ளிட்ட சகல விஷ்ணு ஆலயங்களிலும் 'துருக்க நாச்சியாரை' வைத்து வணங்கப்பட்டு வருவது கண் கூடு.

மாவீரன் சிவாஜியின் பாட்டனாராகிய மாலோஜி ஷாஹ்ஷெர்பீஜி என்ற பெரியாரை தன் குருவாகக் கொண்டிருந்தார். இக்குருபக்தியின் காரணமாகத்தான் தனக்குப் பிறந்த இரு குழந்தைகளுக்கும் ஷாஹ்ஜி, ஷெர்பீஜி என்று பெயரிட்டார்.

முஸ்லீம் பெரியார்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் பேட்டி கொடுக்கும் பொழுதெல்லாம், விஜயநகர அரசர்கள், தங்கள் அரியாசனத்தில் குரானை வைத்து அதற்கு மதிப்புக் கொடுப்பது வழக்கம்.

குவாலியர் மகாராஜா முஸ்லீம் பிரஜைகளுடைய மத ஊர்வலங்களிலெல்லாம் கலந்து கொள்வது சர்வ சாதாரணம்.

டில்லி சுல்தான்கள் தங்கள நாணயங்களில் தாமரை, திரிசூலம், சுவஸ்திகா ஸ்ரீலக்ஷ்மி, ஸ்ரீ, ஆகிய இந்து அடையாளங்களைப் பொறித்திருந்தார்கள். இந்து மனோபாவத்தைத் திருப்தி படுத்த நாகரி எழுத்துக்களையும், நாணயங்களில் கையாண்டார்கள்.

கஜினியின் அரசர் சுல்தான் மாமுது அவர்களின் நாணயங்களில் சிவ சின்னமான 'நந்தி' காணப்படுகிறது.

'ஒரே கடவுள் அல்லா. அவரது திருத்தூதர் மகமது, என்ற கலீமா வாக்கியம், நாணயங்களின் மறுபுரத்தில் சமஸ்கிருதத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

அநேக முஸ்லீம் மன்னர்கள் கனோஜ் (இந்து) அரசர்களைப்போலவே நாணயங்களின் ஒரு பக்கத்தில் தங்களுடைய பெயரை சமஸ்கிருதத்திலும், மற்றொரு பக்கத்தில் 'ஸ்ரீலக்ஷ்மி'யையும் பொறித்திருக்கின்றனர்.

பேகம் சுல்தானா ரஜியாவினுடைய நாணயத்தில் ரஜபுத்திர குதிரை வீரருடைய உருவம் காணப்படுகிறது. பால்பன், மகமது பின்துக்லக், ஷேர்ஷா ஆகியவர்கள் இந்து நாகரி எழுத்துக்களை நாணயங்களிலெல்லாம் கையாண்டு வந்திருக்கிறார்கள்.

பிரஞ்சுக்காரருக்கும் சந்தா சாயபுக்கும் நடந்த யுத்தத்தில் நாசமான திருச்சி, ஸ்ரீரங்கம், திருவானைக் காவல்,சமயபுரம், பிக்ஷாண்டார் கோவில், திருவையாறு, சிதம்பரம், விருத்தாசலம் ஆகிய ஊர்களின் ஆலயங்களை ஆற்காடு நவாபு வாலாஜா அவர்கள் கட்டி உதவி யுள்ளார். அவருடைய நாயிப் யூசுப்கான் அவர்களே மதுரை மீனாக்ஷியம்மனை மானாமதுரையிலிருந்து கொண்டுவந்து மதுரையில் பிரதிஷ்டை செய்தார்.

மைசூர் சமஸ்தானத்திலுள்ள பாபாபுதன்கிரி என்ற குன்றை இரு சாரார்களும் சென்று வணங்கி வருகிறார் கள். ஸ்ரீ தத்தாத்திரேயாவின் பீடமென்று இந்துக்களும்,

பாபாபுதன் ஆண்டவரின் சமாது என்று முஸ்லீம்களும் அதனைக் கருதி வணங்குகின்றனர்.

நாகூரில் உள்ள ஹஸரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரின் தர்காவில் ஆயிரக்கணக்கான இந்து-முஸ்லீம்கள் ஒன்று சேர்ந்து வணங்குவதை இன்றும் காணலாம். நாகூரில் சமாதி கொண்டுள்ள மஹானுக்கும் தஞ்சை மன்னர்களுக்கும் சம்பந்தமிருந்து வந்தது. தஞ்சை மன்னர்கள் ஏராள மான்யங்கள் அளித்திருக்கின்றனர்.

இன்றைய தினமும் வருஷந்தோறும் நாகூர் ஆண்டவருக்காக வந்து சேரும் காணிக்கைகள் அவ்வளவும் இந்துக்களுடையதே. உத்ஸவ காலத்தில் மட்டும் லக்ஷத்திற்கு அதிகமான ரூபாய்கள் உண்டியலில் வந்து சேருகின்றன. வருஷத்தில் பல லக்ஷக்கணக்கான ரூபாய்கள் காணிக்கையாக வந்து குவிவதை இந்து-முஸ்லீம் பொது கலாச்சாரத்திற்கு செலவிடுவது பொருத்தமுடையதாகும்.

சென்னையில் உள்ள மவுண்ட்ரோடு தர்காவில் வியாழக்கிழமை தோறும் இந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்றுகூடி 'ஆண்டவனை' தரிசிப்பது அனைவரும் அறிந்ததே. அங்கு சமாதி கொண்டிருப்பவர் இருநூறு ஆண்டுகளுக்குமுன் அரேபியாவிலிருந்து வந்த ஹஸரத் சையத் மூஸா காத்ரியாவர்

மதுரையில் உள்ள சிக்கந்தர் ஆலயத்தில் இந்துக்கள் தொழுவதும், அங்கேயுள்ள சுப்ரமணியர் கோவி

லில் முஸ்லீம்கள் வணங்குவதும் சாதாரண சம்பவங் களே.

திருச்சியிலுள்ள மலைக்கோயிலை முஸ்லீம்கள் நத்தர்வலி அவர்களுடைய தர்காவென்று தொழுகிறார் கள். இந்துக்கள் அதை விபீஷணனுடையதெனக் கருதி வணங்குகிறார்கள்.

பழனி, திருப்பரங்குன்றம் ஆகிய குன்றுகளை இந்துக் களும், முஸ்லீம்களும் தங்கள் தங்களுடைய ஸ்தலங்கள் என்று மதிக்கின்றனர்.

இஸ்லாம் இந்து மதத்திடம் சகிப்புத்தன்மை யோடி ருந்த ஆரம்ப நிலைமாறி நாளடைவில் இந்து மதத்தையே அது பாராட்டத் தலைப்பட்டுவிட்டது. அதற்கு கீழ்க் கண்ட சான்றுகளே போதுமானதாகும்.

முஸ்லீம் மதாச்சாரியரான கோரசன் இந்து மதக் கோட்பாடுகளை பிரசாரம் செய்தாரென்று அமீர் அலி என்ற சரித்திராசிரியர் கூறுகிறார்.

இஸ்லாமிய மதப்பிரிவுகளைச்சார்ந்த ரோஷ் நியாஸ் இலாஷியாஸ், சத்யபீர் முதலிய கோட்பாடுகள் இந்து தத்துவத்தால் முளைத்தெழுந்து வளர்ச்சியடைந்திருக் கின்றன. இந்திய கோஜா முஸ்லீம்களின் இஸ்மாயிலி னுடைய பிரிவினரின் மதகுரு பீர்சத்ருதின் இந்து பெயர் களையும், பழக்க வழக்கங்களையும் அப்படியே கை யாண்டு 'தசாவதாரம்' என்ற புத்தகம்கூட எழுதியிருக் கிறார். அதில் 'அலி' மகாவிஷ்ணுவின் பத்தாவது

அவ்தாரம் என்று கூறுகிறார். அவர் பிர்மாவை மகமது என்றும், விஷ்ணுவை அலி என்றும், சிவத்தை ஆதா வென்றும் சொல்கிறார். இவரை கோஜா முஸ்லீம்கள் தங்கள் குருவெனக் கொண்டாடுகிறார்கள்.

இஸ்லாமிய ரோஷ்நிய பிரிவு. ஆப்கன் மியான் ரோஷன் பேயிஜட் ஸ்தாபித்ததாகும். இந்துக்கள் மோக்ஷ சாதனமடைய குருமார்களைத் தேடிக்கொள்ள வேண்டியதைப்போல, கடவுளின் அம்சங்களான பீர்களை பின்பற்ற வேண்டுமென்பது அந்த இஸ்லாமியப் பிரிவின் கோட்பாடாகும்.

வங்காள ஹுசைன்ஷா (*1452—1478*) சத்யபீர் தத்துவத்தை வங்காளத்தில் தோற்றுவித்தவராவார். சமஸ்கிருத வார்த்தையான 'சத்'தியத்தையும், அராபிய வார்த்தையான 'பீரை'யும் சேர்த்து இஸ்லாத்திலேயே ஒரு புதுமதம் உருவாக்கப்பட்டது, இது சக்தியும். சிவனும் சேர்ந்திருப்பது போன்ற இருமதக் கோட்பாடுகளையும் இணைக்கும் வேலையாகும் சத்யபீர் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஜான்பூர்-முஸல்மான் கல்லூரியால் பிற்காலத்தில் நாட்டில் சைதன்ய இயக்கம் பரவவும் ஸ்ரீகிருஷ்ணனுடைய பிரார்த்தனைகளில் முஸ்லீம்கள் கலந்துகொள்வதுமான நிலைமை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இஸ்லாமிய சாதுக்கள் இந்து யோகதத்துவங்களை அப்படியே கைக்கொண்டனர். சூபீஸமும், வேதாந்தமும் ஒன்று பட்டவைகளேயென்று பேராசிய சாஸ்திரி

கூறுகிறார். சில சூபி முஸ்லீம்கள் 'ஓம்' தத்துவத்தை அங்கீகரித்து உளம் மகிழ்கிறார்கள்.

இந்து முகம்மதிய மதங்களை ஒன்றாக்கி நாட்டிலே ஒற்றுமையை நிலைநாட்ட செய்த முயற்சியே சீக்கிய மாகும். இது குருநானக் என்பவரால் அக்பர் காலத்துக்கு நூற்றாண்டுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டது. குருநானக்குமுன் கபீர் தாசரே இந்து முஸ்லீம் மத ஒற்றுமைக்கு பாடுபட்டவர். இந்த கபீர் தாசரையும் சீடராக்கிக் கொண்ட பெருமை, வடநாடு சென்று பக்திப் பிரசாரம் செய்த தமிழ்நாட்டு பக்தர் ராமானந்தரைச் சார்ந்ததாகும்.

பழைய இந்துமதக் கலாசாரத்தைக் காப்பாற்ற ஒரு சிலர் சாதிசமய சடங்கு சம்பிரதாயங்களால் 'மாகினாட், 'சீஜ்பிரெட்' போன்ற அரண்மனை மத்திய காலத்தில் கட்டலானார்கள். என்றாலும், மகாராஷ்டிர இந்துக்கள் ஒரு புதிய வழியை உருவாக்கினார்கள். இவர்களுக்கு வழிகாட்டிகளாக தென்னாட்டில் வைஷ்ணவ ஆழ்வார்களான ஸ்ரீராமானுஜர், அவரது சிஷ்யர் ராமானந்தர் முதலானோர் முன்வந்து பக்திமார்க்கத்தைப் பரப்பி சாதி சமய சடங்குகளை வேரறுத்தார்கள்.

மகாராஷ்டிரத்தில் தயானேஸ்வரரும், அவரைப் பின்பற்றி நாமதேவர், நயாஜி, சோகாமேளர், ராமதாஸ், துகாரம் ஆகியோரும் பக்திமார்க்கத்தை பரப்பி உயர்வு, தாழ்வு என்ற சாதி அகம்பாவத்தை மண்டையிலடித்து மக்கள் யாவரும் சமம் என்ற மிக உன்னத நியதியை நிலை

நிறுத்தினார்கள். இந்த பரம்பரையையொட்டி கபீர், நானக், தாது போன்றோர்கள் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு ஓயாது உழைத்தனர். இதனால் சமூகத்தில் தாழ்ந்த சாதியார்கள் எனக்கருதப்பட்டவர்களிலும் பக்திமான்கள் பலர் தோன்ற அவர்களை மக்கள் போற்றத் தலைப்பட்டனர்.

பதினேழாம் நூற்றாண்டில், திருமலைநாயக்கரின் காலத்தில் வாழ்ந்த குமரகுருபரசாமிகள் கலை, தத்துவ ஞானங்களை வடநாட்டு மக்களுக்கு எடுத்தோதினார். இவர் ஹிந்தி மொழியில் வல்லவராயிருந்ததால் ஹிந்தியில், கம்பராமாயணப் பிரச்சாரத்தை காசியில் செய்யலானார். இதனைக் கேட்டு ரசித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் துளசிதாஸர். இந்தப்பேறு துளசிதாஸர் தன்னுடைய ராமாயணத்தை எழுதுவதற்கு முன்னரே அவருக்குக் கிடைத்தது என்பதையும் கவனிக்க வேண்டியதே.

கபீர் (1440—1518) பிறவியில் முஸ்லீம். இவரது சீடர்கள் சகல மதத்தையும் சார்ந்தவர்களாயிருந்தனர். இவருக்கு 'மெக்கா' காசியாகத் தோன்றியது. ராமர் 'ரஹீ'மாகக் காட்சியளித்தார். மற்றும் ஒரே கடவுளை ராமராகவும், கேசவனாகவும், குதாவாகவும், அல்லாவாகவும் கருதினரர். இந்துக்களும், முஸ்லீம்களும் ஒருவரையொருவர் பகைத்துக் கொள்ளவும் விரோதித்துக் கொள்ளவும் காரணங்கள் இல்லை என்று கதறினார். கபீரின் உபதேசங்கள் சுபிசத்திற்கும், வேதாந்தத்திற்கும், ஆக்கம் அளிப்பனவாகும். கபீருக்கு மறுபிறவியிலும், கர்மாவிலும் நம்பிக்கையுண்டு. மாயையிலும்

ஆண்டவனிடத்தில் ஒன்றரக் கலத்தலிலும் நம்பிக்கையுண்டு. ஆனால் கபீருக்கு விக்ரக ஆராதனையிலும், உலகம் அநித்தியம் என்ற குறுகிய தத்துவத்திலும் நம்பிக்கைக் கிடையாது.

கபீர் தத்துவத்தைப் போன்றே சீக்கியம், தாது பந்தி, லால்தாஸிஸ், சதாநாமிஸ். பலாலாலிஸ், சாத்ஸ், சாண்தாஸிஸ், சிவநாராயனீஸ், கரீப்தாஸீஸ், ராம்சன்யாஸீஸ் போன்ற பல மதாகமங்கள் தோன்றி ஒரே கடவுள், சகலரும் சகல மதத்தினருக்கும் பொது. விக்ரக ஆரர்தனை கூடாது, குருவை பூஜிப்பது போன்ற தத்துவங்கள் பரவலாயின.

பாபா நானக் (1479—1538) இரு பெரும் சமுதாயத் தத்துவங்களையும் ஒன்றுசேர்க்க அரும்பாடு பட்டார். இவர் சாதி பாகுபாட்டையும், விக்ரக ஆராதனையையும் வெறுத்தார். இவர் தன்னை கலீப் என்று அழைத்துக்கொண்டார் இவரது தத்துவம் இஸ்லாமே. ஆனால் துரதிருஷ்டவசமாக இவரது பரந்த சர்வ சகோதரத்துவக் கொள்கையானது நாளடைவில்—தீவிர சீக்கிய வாதமாகப் போய்விட்டது.

தாது தயால் (1544—1603) கபீர், நானக் ஆகியவர்களின் போதனைகளை உபதேசித்து வந்தார். பிறவியில் இவர் ஒரு சக்கிலியர். ஏ! அல்லாராம்! என்னுடைய அஞ்ஞானம், அகன்றது; இந்து முஸ்லீம்களுக்கிடையே எந்த வித்யாசமும் கானேனே! ஏ! அல்லாவே! நீயே ரஹிம், உனது திருநாமமே கேசவன்—ஏ! கரீம்!! என்றெல்லாம் பாடுகிறார்.

இது போன்ற இந்து—முஸ்லீம் ஒற்றுமைக்காக பாடுபட்ட சாதாரண பெரியார்களை வட நாட்டிலும் தென்னாட்டிலும் எண்ணற்றோரைக் குறிப்பிடலாம். சர்வமத சமரசத் தன்மையை நிலைநாட்ட வடநாட்டில் பாடுபட்ட ராம் மோகனார் தயானந்தர், ராமகிருஷ்ணர் விவேகானந்தரைப் போன்றாரைப் போல தென்னாட்டிலும் சமீபகால டாக்டர் பெசண்டம்மையையும் வடலூர் ராமலிங்க சுவாமிகளையும் குறிப்பிடப்படவேண்டியது முக்கியமாகும்.

இந்நாட்டிலேதான் சார் ஹிந்த், பத்தான் தேச பக்கீர்களும், காசிப்பிரயாகை சந்நியாசிகளும் ஒன்றாகக் கலந்து உளங்கனிந்தார்கள். இந்நாட்டில்தான் கபீரும் நானக்கும், பிரந்நாத்தும், பாபாலாலும். பாபுதயாளும் பெசண்ட்டம்மையும் இஸ்லாமிய இந்துக்கடவுள்களை ஒன்றாகவே மதித்தார்கள். இந்நாட்டிலேதான் அபுல் பஜாலும், ராஜா தோடர்மாலும், ஒரே அரசியலுக்காக ஒன்றாயிருந்தனர். இந்நாட்டிலேதான் வேதாந்தமும். குரானும் ஒன்றாக மதிக்கப்பட்டது. இந்நாட்டிலேதான் தமிழும், சமஸ்கிருதமும், பெர்சிய மொழியும் ஒன்றாகக் கலந்து உறவாடியது. இந்நாட்டிலேதான் கிழக்கும், மேற்கும் ஒன்று சேர்ந்து புது சமுதாயத்தை அமைத்திருக்கிறது, இப்பேர்ப்பட்ட நம் பொன்னாட்டிற்கு நமது வணக்கத்தை செலுத்துவோமாக.

இமயப் பதிப்பகம்

நாகப்பட்டினம் - 611 001